# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 32 கதிர் 275 ஆடி 12ஆம் நாள் திங்கட்கிழமை 28 ஓகஸ்ட் 2017 வள்ளுவர் ஆண்டு 2048


# 2020 வரையும் அரசின் ஆயுள் நீடிப்பு

## இருதரப்பு ஒப்பந்தம் டிசெம்பரில் கைச்சாத்து


கொழும்பு, ஓகஸ்ட் 28

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி என்பன இணைந்து அமைத்துள்ள தற்போதைய கூட்டு அரசின் ஆயுள் காலம் 2020ஆம் ஆண்டு வரை நீடிக்கும் என்பது உறுதியாகி உள்ளது. இதற்கான புதிய ஒப்பந்தம் டிசெம்பர் மாதம் கைச்சாத்தாகும் என்று பிரதி அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த உறுப்பினருமான அஜித் பீ.பெரேரா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வரலாற்றில் முதல் தடவையாக இரு முக்கிய கட்சிகளும் ஒன்றிணைந்துள்ளன. நாட்டின் முதன்மைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்குடனேயே ஒன்றிணைந்த கூட்டு அரசு நிறுவப்பட்டது. நாம் நினைத்திருந்தால் அரச தலைவர் தேர்தல் நிறைவடைந்த உடனே நாடாளுமன்ற தேர்தல் நடத்தி தனிக்கட்சியாக மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றிருப்போம். 100 நாள் வேலைத்திட்டத்தின் காரணமாக இதனைச் செய்யவில்லை.

>> 25



# ரணிலுக்கு அருளாத மூகாம்பிகை அம்மன்

## மழையால் பயணம் தடைப்பட்டது

கொழும்பு, ஓக. 28

தோச நிவர்த்தி செய்வதற்காக இந்தியா சென்ற தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் நோக்கம் நிறைவேறவில்லை. அதற்கான அருள் அவருக்குக் கிடைக்கவில்லை. சீரற்ற காலநிலை காரணமாக ஆலயத்துக்கு அவரால் செல்ல முடியவில்லை என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

தோச நிவர்த்திக்காக இந்தியாவின் கொல்லூர் மூகாம்பிகை ஆலயத்தில் நேற்று வழிபாடு நடத்துவதற்கு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க திட்டமிட்டிருந்தார். அதற்காக மூன்று நாள்கள் பயணமாக இந்தியா சென்றுள்ளார். கொல்லூர் மூகாம்பிகை ஆலயத்தில் நேற்றுக் காலை 11 மணிக்கு நடைபெறும் சிறப்பு பூசை வழிபாடுகளில் அவர் கலந்து கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

கொல்லூர் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் நேற்று அதிகாலை தொடக்கம் மழை இடைவிடாது கொட்டித் தீர்த்தது. பெங்களூரில் இருந்து தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான குழுவினர் வானூர்தியில் கொல்லூர் செல்வது கடினம் என்று தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து ஆலய வழிபாடு நேற்றுக் கைவிடப்பட்டது. (உ-5)

# தொடருந்து நசுக்கி 10 மாடுகள் இறப்பு

யாழ்ப்பாணம், ஓக. 29

தொடருந்து மோதி நசுக்கியதில் 10 மாடுகள் உடல் சிதறி உயிரிழந்தன. இந்த விபத்தால் தொடருந்தின் பயணமும் சிறிது நேரம் தடைப்பட்டது. இந்தச் சம்பவம் மிருசுவிலுக்கும் பளைக்கும் இடையில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றது.

காலபோக பயிர்ச் செய்கை நிறைவடைந்ததால் மாடுகள் மேய்ச்சலுக்காக அவிழ்த்துவிடப்பட்டுள்ளன. அவை மேய்ச்சலுக்காகத் தண்டவாளத்தைக் கடந்தபோது தொடருந்து வந்தது. அதன் சத்தத்தைக் கண்டு மாடுகள் மிரண்டு ஓடின. அதற்கிடையில் 10 மாடுகளை தொடருந்து

>> 25

# சு.கவை விட்டு 7பேரை நீக்க இன்று முடிவு

கொழும்பு, ஓக. 28

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலுள்ள மகிந்த அணியைச் சேர்ந்த 7 நாடாளுமன்ற உறுப்பினர்களை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்புரிமையிலிருந்து நீக்குவதற்கு அந்தக் கட்சி தீர்மானித்துள்ளது என்று அறியமுடிகின்றது.

இதற்கான அனுமதியை கட்சியின் மையக் குழு இன்று அல்லது நாளை வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

கம்பகா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க, புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சனத் நிசாங்க, இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பவித்ரா

>> 25

முச்சந்தி முரளி




# வருடாந்தம் அதிகரிக்கிறது வெப்பநிலை

## 0.03 டிகிரி வரை எட்டுகிறது

கொழும்பு, ஓக. 28

இலங்கையின் சராசரி வெப்பநிலை 0.01 டிகிரி தொடக்கம் 0.03 டிகிரி வரை ஆண்டுதோறும் அதிகரித்துச் செல்வதாக, அபாய எச்சரிக்கை வெளியிட்டுள்ளார், காலநிலை மாற்றம் பற்றிய தேசிய நிபுணர்குழுவின் உறுப்பினரும், பெரதெனியா பல்கலைக் கழகத்தின் விவசாயபீட பயிர் அறிவியல் விரிவுரையாளருமான புத்தி மாரம்பே.

இலங்கையில் கடந்த 50ஆண்டு கால வெப்பநிலை ஒழுங்கை ஆராய்ந்து பார்த்ததை அடிப்படையாக வைத்தே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

>> 25

# இரவு நேரம் கஞ்சாவுடன் முன்னாள் சிப்பாய் கைது

## இளம் பெண் கொலையில் சந்தேகநபரும்கூட

சாவகச்சேரி, ஓக. 28

சாவகச்சேரிப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு ஒருவர் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டார். அவர் முன்னாள் இராணுவச் சிப்பாய். கொலைக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த இவரிடம் இருந்து 3 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். கடத்திச் செல்லப்பட்ட சமயமே அவரிடமிருந்து கஞ்சாவைத்தாம் கைப்பற்றினர் என்றும் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்குக் கிடைத்த தகவலையடுத்து யாழ்ப்பாணம் மற்றும் சாவகச்சேரி பொலிஸார் இரவுக் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தனர். அப்போது மோட்டார் சைக்கிளில் கஞ்சாவுடன் வந்த சந்தேகநபர் மாட்டிக்கொண்டார். கைப்பற்றப்பட்ட கஞ்சா சுமார் 3 லட்சம் ரூபா பெறுமதியானது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தரைப் படைச் சிப்பாயான அவர் மறவன்புலோப் பகுதியில் இளம்பெண் ஒருவரின் கொலை தொடர்பான வழக்கில் கைது செய்யப்பட்டார். பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (உ-ய- 21-9)

# வடக்கில் தாதியர்கள் நாளை புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 28

வடக்கு மாகாண அரச தாதியர்கள் நாளை செவ்வாய்க் கிழமை முழுநாளும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர். இந்தப் போராட்டத்துக்கான அழைப்பை வடமாகாண அரச தாதிய சங்கம் விடுத்துள்ளது. அதனால் அவசரமான சிகிச்சைகளை மட்டுமே தாதியர்கள் வழங்குவர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தவிர்ந்த ஏனைய மாவட்ட, ஆதார, பிராந்திய வைத்திய

>> 25

# சீதன வன்கொடுமையால் இளம்பெண் தென்மராட்சியில் நேற்று பரிதாபச் சாவு

யாழ்ப்பாணம், ஓக. 28

சீதனக் கொடுமையால் இளம் பெண் ஒருவர் தவறான முடிவெடுத்துத் தனது உயிரை மாய்த்த சம்பவம் யாழ். மாவட்டம், தென்மராட்சியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இன்னும் சில தினங்களில் திருமணம் நடைபெற ஏற்பாடாகியிருந்த நிலையில் மாப்பிள்ளை வீட்டார் சீதனத்தை அதிகரித்துத் தரும்படி கேட்டதால் மனமுடைந்த பெண் தன் உயிரை மாய்த்தார் என்று அவரது உறவினர்கள் உதயன் பத்திரிகையிடம் தெரிவித்தனர்.

29 வயதான முன்பள்ளி ஆசிரியை ஒருவரின் வாழ்க்கையையே சீதனக் கொடுமை சிதைத்துள்ளது.

"திருமணத்துக்கான

>> 25

# ஐ.நா. தீர்மானத்தை இலங்கை முழுமையாக நடைமுறைப்படுத்த அழுத்தம் கொடுங்கள்

## இந்தியா, அமெரிக்காவிடம் கூட்டமைப்பு வலியுறுத்தும்

கொழும்பு, ஓக. 28

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை கொழும்பு முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்கிற அழுத்தத்தை பன்னாட்டுச் சமூகம் உறுதியாக வழங்கவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தவுள்ளது.

இந்த வார இறுதியில் கொழும்புக்கு வருகின்ற அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான உதவிச் செயலர் அலிஸ் வெல்ஸ் மற்றும் இந்தியாவின் அயலுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் ஆகியோரைச் சந்திக்கும் போது கூட்டமைப்பு இந்த வலியுறுத்தலை முன்வைக்கவுள்ளது.

அமெரிக்காவில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர் இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மத்திய ஆசியாவுக்கான பதில் உதவிச் செயலராக நியமிக்கப்பட்ட அலிஸ் வெல்ஸ் மற்றும் இந்தியாவின் அயலுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் ஆகியோர் எதிர்வரும் 31ஆம் திகதியும் செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதியும் கொழும்பு வருகின்

>> 25



வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ஜீ.குணசீலனுக்கு, மன்னார் தோட்டவெளி மற்றும் ஜோசப் வாஸ் நகர் ஆகிய இரு கிராமங்களிலும் நேற்று வரவேற்பு அளிக்கப்பட்டது. (ஐ-10, 56)

# பரு. துறைமுகப் பகுதியை பௌத்த மயமாக்க முயற்சி

## அந்தப் பிரதேச மக்கள் குற்றச்சாட்டு



யாழ்ப்பாணம், ஓக.28

பருத்தித்துறை துறைமுகப் பகுதியில் பெரும்பான்மையினரின் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன. அவர்கள் மாலை வேளையில் கடற்கரையில் மதுபானம் அருந்துகின்றனர். எமது கலாசாரத்துக்கு விரோதமாக நடக்கின்றனர். அங்கு விகாரை ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு குற்றஞ்சாட்டினர் அந்தப் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள்.

பருத்தித்துறை கொட்டடி மீனவர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனுக்கும் இடையே நேற்றுக் கலந்துரையாடல் நடைபெற்றது. பருத்தித்துறை துறைமுக அகலிப்புத் தொடர்பான விடயங்கள் அதில் பேசப்பட்டன. அதன்போதே பிரதேச மீனவர்கள் இவ்வாறு குற்றஞ்சாட்டினர்.

"பருத்தித்துறைக் கடற்பரப்பில் இந்திய, தென்பகுதி மீனவர்களின் அத்துமீறல் வெகுவாக அதிகரித்துள்ளது. அதிகாரிகளிடம் இது தொடர்பாகக் கூறியபோதும் அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. தென்னிலங்கை மற்றும் வெளிமாவட்ட மீனவர்களால் இரவு நேரங்களில் ஒளி பாய்ச்சி கடலட்டை, கணவாய் பிடிக்கப்படுகின்றன. அதனால் எமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது. அத்துமீறி மீன்பிடித்தமைக்காகக் கைது செய்யப்பட்டாலும் அவர்கள் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படாமல் விடுவிக்கப்படுகின்றனர்.

தென்னிலங்கையில் இருந்து வருவோர் இழுவைப் படகுகளில் மீன்பிடிக்கின்றனர். எமது வலைகளை நாசப்படுத்துகின்றனர். அவர்கள் மீன்களைக் குறைந்த விலைக்கும் விற்கின்றனர்.

துறைமுகப் பகுதியில் இரவில் கூலர், ஹைஏஸ் வாகனங்களின் நடமாட்டம் அதிகமாக இருக்கின்றது. போதைப் பொருள் கடத்தப்படுகின்றதா என்ற சந்தேகமும் எமக்கு ஏற்படுகின்றது. மாலை 5 மணிக்குப் பின்னர் அந்த இடம் மதுபானம் அருந்தும் இடமாகக் காட்சியளிக்கின்றது. மது போதையில் தகாத வார்த்தைகளைப் பிரயோகிக்கின்றனர்.

வெளியிடங்களில் இருந்து வருவோரே இவ்வாறு நடந்து கொள்கின்றனர். பொலிஸாரும் அதைக் கண்டு கொள்வதாக இல்லை. தென்னிலங்கை மீனவர்கள் வீதியோரக் கிணறுகளில் உள்ளாடைகளுடன் குளிக்கின்றனர். அந்தப் பகுதியால் செல்வதற்கு பெண்கள், மாணவர்கள் கூச்சப்படுகின்றனர்.

அந்தப் பகுதியில் பெரும் விகாரை ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. எமது பிரதேசத்தை பௌத்தமாயமாக்கும் திட்டத்துடன் இவை மேற்கொள்ளப்படுகின்றதா என்ற சந்தேகம் எமக்கு எழுந்துள்ளது." என்று மீனவர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டு இறுதி முடிவு எடுக்கப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். (ற-10,26)

# கல்விக்காக வெளிநாடு செல்லும் இளைஞர்கள் வடக்கில் குறைவு

யாழ்ப்பாணம், ஓக. 28

உயர் கல்விக்காக வெளிநாடு செல்லும் இளைஞர்கள் வடக்கு மாகாணத்தில் மிகக் குறைவு. மாறாக பொருள் ஈட்டுவதற்கும், ஆடம்பரமான வாழ்க்கை முறையைத் தேடிக் கொள்வதற்காகவுமே இன்று பலர் வெளிநாடு செல்கின்றனர்.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

திகுவி கல்விச் சேவைகள் உலக தரத்துக்கான பன்னாட்டு மத்திய நிலையத்தி



னால், திறன் அபிவிருத்தி அடிப்படைப் பயிற்சி மற்றும் கல்வி அத்துடன் புலமைப்பரிசில் திட்டத்துக்கான அறிவித்தல் கூட்டம் யாழ்ப்பாணம் ஜெற்வின் விருந்தினர் விடுதியில் நேற்று இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

இன்று எமது இளைஞர் யுவதிகள் பல்வேறு திறமைகளை உள்ளடக்கியவர்களாக இருப்பினும் அவற்றை வெளிப்படுத்துவதற்கான உரிய களமொன்று அமைக்கப்படவில்லை. முறையான வழிகாட்டல்கள் இன்றி அவர்களில் பலர் குற்றச் செயல்களில் ஈடுபடத் துணிந்துள்ளனர்.

தாய் மொழிக்கல்வி மிகவும் சிறப்பானது. ஆனால் உயர் கல்வி அல்லது பன்னாட்டு தரத்திலான சட்டம் உள்ளடங்கலான கல்வியறிவைப் பெற்றுக் கொள்வதற்கு ஆங்கில மொழி அத்தியாவசியமானது.

வடக்கு,கிழக்குப் பகுதிகளில் ஏற்பட்ட தொடர் போர்களும், அழிவுகளும் பல இலட்சக்கணக்கான மக்களை ஐரோப்பிய நாடுகளை நோக்கி இடம்பெயரச் செய்தன. அவ்வாறு இடம்பெயர்ந்தவர்கள் தமது தராதரத்துக்கு ஏற்ப பல்வேறு தொழில்களை அந்த நாடுகளில் புரிகின்றார்கள். அவர்களின் பிள்ளைகள் ஆங்கில மொழியில் கல்வி பயின்று சிறப்பான பதவிகளில் அந்த நாடுகளில் அமர்ந்திருப்பது மகிழ்வைத் தருகின்றது.

இவ்வாறான சூழலில் இங்கிருக்கின்ற இளையோர்களை உரியவாறு நெறிப்படுத்தி மொழியிலும் கல்வியிலும் வல்லவர்களாக ஆக்க வேண்டும் என்று மேலை நாடுகளில் வசிக்கின்ற எம்மவர்களில் சிலர் சிந்திக்கின்றனர்.

இங்கிருக்கின்ற இளையோர்களுக்கு வெளிநாடு செல்ல வேண்டும் என்ற அவா நிறைய இருக்கின்றது.

அது உயர் கல்விக்காக அல்ல. மாறாக பொருள் ஈட்டங்களைத் தேடிக்கொள்வதற்கும், சுகமான வாழ்க்கை முறைகளை அமைத்துக் கொள்வதற்குமே ஆகும்.

இலங்கையில் காணப்படுகின்ற பட்டப்படிப்புக்களில் பெரும்பாலானவை சான்றிதழ் கற்கை நெறிகளாகவே காணப்படுகின்றன.

கற்கை நெறிகள் முடிவடைந்ததும் அடுத்து என்ன செய்வது என்பது பற்றி முறையான திட்டங்கள் எதுவும் இல்லை.

பல்கலைக்கழகங்களும் பல புதிய புதிய கற்கைநெறிகளை ஆரம்பிக்கின்றன. அவற்றைக் கற்று முடித்த பின்னர் அந்த மாணவர்கள் அந்தக் கற்கைநெறி சார்ந்த தொழில் முயற்சிகளில் ஈடுபடுவதற்கு ஏற்ற வழிமுறைகள் எதுவும் அமைத்துக் கொடுக்கப்படவில்லை என்பது மனவருத்தத்துக்குரியது என்றார். (ஐ-10,101)

# பருத்தித்துறையில் துறைமுக அகலிப்புக்கு மீனவர்கள் எதிர்ப்பு

பருத்தித்துறையில் துறைமுக அகலிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டாம். அதனால் இரண்டு கிராமங்கள் பாதிக்கப்படும். எனவே மக்களது விருப்பம் இல்லாமல் எந்தவித அபிவிருத்திகளையும் இங்கு முன்னெடுக்க வேண்டாம் என்று மீனவர்கள் கோரிக்கை விடுத்தனர். பருத்தித்துறை கொட்டடி மீனவ சங்கத்தினருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனுக்கும் இடையில் கொட்டடி மீனவ சங்கத்தில் நேற்றுக் கலந்துரையாடல் இடம்பெற்றது. அதில் பருத்தித்துறையில் துறைமுக அகலிப்பு தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது. "பருத்தித்துறையில் துறைமுகம் அமைப்பது தொடர்பில் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற முதல் கூட்டத்தில் நடராஜர் கலையரங்கம் வரை தான் துறைமுகம் வரும் என்று கதைக்கப்பட்டது. ஆனால் தற்போது துறைமுக விஸ்தீரணத்துக்காக அந்தக் கலையரங்கில் இருந்து 450 மீற்றர் தாண்டியும் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. 450 மீற்றருக்குள் இரண்டு கிராமங்கள் உள்ளன. துறைமுகம் அந்த இடத்தில் அமைந்தால் அங்கு உள்ள மக்கள் எங்கே செல்வது? கடற்றொழிலையே நம்பி இருக்கும் அவர்களின் வாழ்வாதாரம் என்ன? . எமது கருத்துக்களுக்குச் செவிமடுக்காமல் துறைமுகப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டால் நாம் உணவு ஒறுப்பில் ஈடுபடவும் தயங்க மாட்டோம்" என்று மீனவர்கள் தெரிவித்தனர்.

"மீனவர்களின் வாழ்வாதாரம் தொடர்பாக உரிய அதிகாரிகளுடன் கதைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளேன். பெரியளவிலான திட்டமாக இருந்தாலும் மக்களின் விருப்பத்துக்கு மாறாகத் திணிக்க முடியாது. ஆரம்பத்தில் கூறப்பட்டது போன்று நடராஜர் கலை அரங்குக்கு உட்பட்ட வகையில் துறைமுகம் அமைக்க முடிந்தால் அதற்கான வேலைத்திட்டத்தை ஆரம்பிக்கலாம். இல்லையேல் அந்தத் துறைமுகத்திட்டத்தை மயிலிட்டிக்குக் கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகளை உரிய அதிகாரிகளுடன் கதைத்து முடிவெடுக்கப்படும்" என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார். (ஐ-10, 26)

# அரசியல் பயணம் மீண்டும் தொடரும்

## திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு

கொழும்பு,ஓக.28

"ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர் என்ற அடிப்படையில் எனது அரசியல் பயணத்தை மீண்டும் ஆரம்பிக்க உள்ளேன்" என்று அந்த கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார். கெலிஓயா பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது:

நான் அரசியல் ரீதியாக முடிவுகளை எடுக்க இன்னும் காலம் இருக்கிறது. கடந்த அரச தலைவர் தேர்தலில் மகிந்த ராஜபக்சவுக்கு ஆதரவளித்த காரணத்தை அடிப்படையாகக் கொண்டு, சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் என்னைத் தள்ளிவிடுவது அநீதியானது. நான் ஐக்கிய தேசியக் கட்சியைச் சார்ந்தவன். எனக்கு அரசியலில் ஈடுபடக்கூடிய பலம் உள்ளது. மீண்டும் எனது அரசியல் பயணம் தொடரும்" என்றார். அதேவேளை திஸ்ஸ அத்தநாயக்காவை மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணையுமாறு அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் கபீர் ஹாசீம் அவருக்கு அழைப்பு விடுத்துள்ளார் என்று தகவல்கள் வெளியாகியிருந்தன. (ஐ)

# போதை பொருளுடன் சந்தேகநபர் கைது

கொக்கேய்ன் போதைப் பொருளைத் உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் சந்தேநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கொள்ளுப்பிட்டிப் பிரதேசத்தில் வைத்து சந்தேகநபர் நேற்றுக் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பத்தரமுல்லப் பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயுதான நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடம் இருந்து 9.95 கிராம் கொக்கேய்ன் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)



அனலைதீவு புளியந்தீவு நாகேஸ்வரசுவாமி (சிவன்) ஆலயப் பெருந்திருவிழா நேற்றுக் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. சிவாச்சாரிய பீட வேதசிவாகமஜோதி வை.தியாகராஜக் குருக்கள் தலைமையில் கொடியேற்றம் இடம்பெற்றது. (ஐ-9)

# ஊழல் அற்ற அரசை உருவாக்கவேண்டும்

## கூட்டமைப்பின் நோக்கம் இதுவே என்கிறார் சிறிநேசன் எம்.பி.

மட்டக்களப்பு. ஓக. 28
நாட்டில் இலஞ்சம்,ஊழல் அற்ற அரசை உருவாக்க வேண்டும் என்பதே தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நோக்கம். அதற்காகவே கடந்த கால அரசை மாற்றுவதற்குப் பெரும் முயற்சிகள் மேற்கொண்டோம். மக்களின் தெரிவின் படி புதிய அரசு உருவாக்கப்பட்டுள்ளது. இந்த அரசின் காலத்தில் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்ட வேண்டும்.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு ஏறாவூர் ஐந்தாம் குறிச்சி சிறி மதுமலர்க்கா வீரபத்திரர் சுவாமி ஆலய இராஜகோபுர அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

கடந்த கால அரசு ஏற்படுத்திய தாமதங்கள் அல்லது இழுத்தடிப்புக்கள் என்பவற்றை தற்போதைய அரசும் செய்யாமல் விரைவாக தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடிவடிக்கை எடுக்க வேண்டும்.

அரசியல் தீர்வைத் தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். தென்னிலங்கை அடிப்படைவாதிகள் குழப்புகின்றார்கள் என்பதை வைத்துக் கொண்டு இழுத்தடிக்கக் கூடாது.

பேரினவாத சக்திகள், அடிப்படைவாதிகள், சிறுபான்மை மக்களை மோத விட்டு குளிர்காய்கின்ற செயற்பாடுகளிலும் ஈடுபடுகின்றார்கள்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு மக்கள் பிரதிநிதிகள், இலஞ்சம் ஊழல் மோசடிகளுக்கு ஒருபோதும் துணைபோக மாட்டார்கள். இவற்றைத் தட்டிக்கேட்பவர்களாக இருப்பார்கள்.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்கள் பிரதிநிதிகள் இரட்டை வேட அரசியல் செய்பவர்கள் அல்ல. இவ்வாறு இரட்டை வேடத்தில் அரசியல் செய்ய முற்பட்டால் அவர்கள் மக்களால் நிராகரிக்கப்படுவார்கள். இது கடந்த கால வரலாறாகும். இலஞ்சம், ஊழல் அற்ற அரசியல் கலாசாரத்தை உருவாக்க வேண்டும் என்பதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுதியாக உள்ளது. தேர்தலுக்காக வாக்குறுதிகளை வழங்கி விட்டு வெற்றிபெற்ற பின் தடம் மாறிச் செல்கின்ற நோக்கம் எங்களுக்குக் கிடையாது.

மாவட்ட மற்றும் பிரதேச அபிருத்திக்குழுக் கூட்டங்களில் எடுக்கப்படும் தீர்மானங்க ளில் சில நிறைவேற்றப்படுவதில்லை என இணைத்தலைமைகள் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

வியாபாரத்தோடு சம்பந்தப்பட்ட சில தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவது கடினமாக உள்ளது என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்.

வியாபார நோக்கத்தோடு இருக்கின்ற அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகள் பங்குதாரர்களாக மாறுகின்ற போது, சில ஒருங்கிணைப்புக் குழுக் கூட்ட முடிவுகளை நடைமுறைப்படுத்துவது கடினமாக உள்ளது.

மணல் அனுமதி நிறுத்தப்பட வேண்டும் எனக் கூறிவிட்டு மறுபக்கத்தில் மணல் அகழ்வதற்கான செயற்பாடுகளில் ஈடுபடும் நிலை காணப்படுகிறது. இவர்கள் யார் என்பதை மக்கள் சரியாக அடையாளம் கண்டுள்ளார்கள். மக்களை ஏமாற்றி பித்தலாட்டம் செய்து அரசியலில் ஈடுபடுபவர்களுக்கு மக்கள் சரியான தீர்ப்புக்களை வழங்குவார்கள் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலம் சரியான தகவல்களைப் பெற்று, இவ்வாறு இரட்டை வேடம் போடும் அரசியல்வாதிகள் துணைநிற்கும் அதிகாரிகளை ஊடகங்கள் வெளிக்கொண்டுவர வேண்டும். ஊடகங்கள் சரியாகக் கடமையாற்றுகின்ற போது இவ்வாறானவர்கள் மக்களிடம் இரட்டை வேடத்தில் நடிக்க முடியாது - என்றார்.

ஆலயத் தலைவர் மா.முத்துலிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நீர்ப்பாசனத் திணைக்கள உறுகாமப் பிரிவு பொறியியலாளர் ச.நிறோஜன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஐ-10, 47)

## மயிலிட்டி அபிவிருத்தி தொடர்பாகக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஓக.28
அண்மையில் மீளக் குடியமர்ந்த மயிலிட்டி மக்களின் தேவைகள், பிரதேசத்தின் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பருத்தித்துறைக் கிளை அலுவலகத்தில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்றது. அதில் நாடாளுமன்ற உறுப்பினர எம்.ஏ.சுமந்திரனும், மயிலிட்டிப் பிரதேசத்தைச் சேர்ந்த மீனவ அமைப்புக்களும், முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.



மயிலிட்டியில் தற்போது பகுதியளவான காணிகளே விடுவிக்கப்பட்டுள்ளன. அவற்றால் முழுமையான பயனைப் பெற முடியாதுள்ளது. மேலதிக காணிகள் விடுவிக்கப்படும் பட்சத்திலேயே அந்தப் பகுதி மக்கள் தொழில் செய்ய முடியும் என்று கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் சுட்டிக்காட்டினர்.

எதிர்வரும் வாரத்தில் இராணுவத் தளபதி தலைமையில் மயிலிட்டியில் கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்து அங்குள்ள தேவைகள் தொடர்பாகக் கலந்துரையாடுவது என கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. அங்குள்ள நிலமைகளை நேரில் சென்று பார்வையிட்டு இது தொடர்பில் ஆராய்வது என்றும் தீர்மானிக்கப்பட்டது. (ற-26)

## உப்பு உற்பத்தி நிறுவனத்துக்கு மாந்தையில் நேற்று அடிக்கல்

மன்னார், ஓக. 28
மன்னார் 'மாந்தை சோல்ட் லிமிற்றெற்' உப்பு உற்பத்தி நிறுவனத்தின் புதிய அலுவலகக் கட்டடத்துக்கு நேற்று அடிக்கல் நடப்பட்டது. இதன் போது நிறுவனத்தின் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட அரச சுற்றுலா விடுதியும் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சர் ரிசாத் பதியுதீன் கட்டடத்துக்கான அடிக்கலை நட்டார். அரச சுற்றுலா விடுதியையும் திறந்து வைத்தார்.

நிகழ்வில் மன்னார் மாந்தை சோல்ட் லிமிற்றெற் நிறுவனத்தில் பல வருடங்களாகக் கடமையாற்றிய பணியாளர்கள் கௌரவிக்கப்பட்டனர். அவர்களின் பிள்ளைகளுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. மன்னார் மாந்தை சோல்ட் லிமிற்றெற்றின் தலைவர் எம்.எம்.அமீன் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

அதில் மன்னார் மாவட்ட மேலதிக செயலர் திருமதி நந்தினி ஸ்ரான்லி டி மெல், மன்னார் பிரதேச செயலர் என்.பரமதாசன்,மாந்தை மேற்குப் பிரதேச செயலர் எஸ்.கேதீஸ்வரன்,தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மாகாண பணிப்பாளர் என்.எம்.முன்பர் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஐ-10, 56)



## துயிலும் இல்லத்தில் துப்புரவு

முல்லைத்தீவு, ஓக.28
முல்லைத்தீவு - முள்ளிவாய்க்கால் மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்று துப்புரவுப் பணிகள் நடைபெற்றன என்று தெரிவிக்கப்பட்டது. துப்புரவுப் பணிகளை பொது மக்களும், ஜனநாயக போராளிகள் கட்சியினரும் மேற்கொண்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. போரின் பின்னர் கவனிக்கப்படாதிருந்த பல துயிலும் இல்லங்கள் அண்மைக் காலமாக துப்புரவாக்கப்பட்டு வருகின்றன. மக்கள் அந்தப் பணிகளில் ஆர்வத்துடன் பங்கேற்கின்றனர்.(ற)



## தென்பகுதி மாணவியின் நிதிப்பங்களிப்புடன் டிறிபேக் கல்லூரியில் கழிப்பறைகள் அமைப்பு

சாவகச்சேரி ஓக. 28
சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில், தென்பகுதியைச் சேர்ந்த மாணவியின் நிதிப் பங்களிப்புடன் 523ஆவது படையணியினரால் நிர்மாணிக்கப்பட்ட கழிப்பறைக் கட்டடத் தொகுதி நேற்றுக் கல்லூரி நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டது.

சுமார் 3 லட்சம் ரூபா செலவில் இந்தக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. அமெரிக்கா நியூயோர்க் பாடசாலையில் கல்வி பயிலும் (17 வயது) ஒனேலி எஸ்.ரணசிங்க என்பவர் தான் சேமித்த நிதியூடாக இந்த உதவித் திட்டத்தை வழங்கியுள்ளார்.

கல்லூரி அதிபர் ந.ஜெயக்குமாரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், மாணவி ஒனேலி எஸ்.ரணசிங்க தனது பெற்றோருடன் வருகை தந்து கழிப்பறைக் கட்டடத்தை திரைநீக்கம் செய்து அதிபரிடம் கையளித்தார்.

52ஆவது படையணியின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் டி.எம்.ரி.பி.திஸாநாயக்காவின் வழிநடத்தலில் 523 ஆவது படையணியினரால் இந்தக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.



இந்த நிகழ்வில் 523ஆவது படையணி கட்டளைத் தளபதி லெப்.கேணல் பிரதீப் ரத்நாயக்கா மேஜர் ரவீந்திரா மேஜர் பண்டார, கல்லூரியின் ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ-9)

## மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழப்பு

தொழில் புரிந்த இடத்தில் மின்சாரம் தாக்கி நபரொருவர் உயிரிழந்தார். இயந்திரத்தில் ஏற்பட்ட மின்கசிவி னால் அவர் மின்சாரத்தால் தாக்கப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் அனுராதபுரம் பலாடிகுளம் பிரதேசத்தில் நேற்று நடந்தது. உயிரிழுந்தவர் பலாடிகுளம் பிரதேசத்தைச் சேர்ந்த 48 வயது மதிக்கத் தக்க நபர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார். இயந்திரத்துக்கு மின்சாரத்தைக் கொண்டு செல்லும் இணைப்பில் ஏற்பட்ட பழுது காரணமாக மின்சாரக் கசிவு ஏற்பட்டுள்ளது என்று ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. (ஐ)

# 180 நாள்களை கடந்து தொடரும் போராட்டம்




முல்லைத்தீவு, ஓக. 28
தமக்குச் சொந்தமான காணிகளை விடுவிக்கக் கோரி கேப்பாபிலவு மக்களால் முன்னெடுக்கப்பட்டு வரும் தொடர் போராட்டம் நேற்றுடன் 180 ஆவது நாளைக் கடந்துள்ளது.

138 குடும்பங்களுக்குச் சொந்தமான 482 ஏக்கர் காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி அவர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் 6 மாதங்களைக் கடந்துள்ளது.

"இன்று விடுவிக்கப்படும் நாளை விடுவிக்கப்படும் என்று நாங்கள் ஏமாந்து போனோம். வீதியில் எங்கள் நிலத்துக்காகக் காத்திருக்கின்றோம். பலரது வாக்குறுதிகளும் பொய்யானது. எங்கள் பூர்வீகக் காணிகளை எமக்குத் தாருங்கள்.

வயோதிபர்கள், சிறுவர்கள், நோயாளர்கள் என்று பலதரப்பட்டோர் இந்தப் போராட்டத்தில் இருக்கிறார்கள் அவர்களும் நோய்வாய்ப்பட்டு இறக்கும் நிலை வந்தாலும் அரசு முடிவு தராது என்று நினைக்கிறோம். எங்களது பொறுமையைச் சோதிக்க வேண்டாம். மண்ணுக்காக உயிரை விடவும் தயாராக இருக்கிறோம். காணி விடுவிக்கும் வரை நாங்கள் போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை. நிம்மதி இல்லாமல் இருக்கின்றோம்" என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

அதேவேளை தமக்கான நிதி கிடைத்ததும், முல்லைத்தீவில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள காணிகள் விரைவில் விடுவிக்கப்படும் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ரொசான் செனவிரத்ன தெரிவித்திருந்தார். முல்லைத்தீவிலுள்ள இராணுவத்தின் தலைமையகம் உள்ளிட்ட பகுதிகளை வேறு இடத்தில் அமைப்பதற்கு அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் 148 மில்லியன் ரூபா வழங்குவதாகக் கூறியிருந்தார். நிதி கிடைத்த பின்னர் முல்லைத்தீவில் இராணுவத்தின் முக்கிய முகாம்கள் வேறிடத்தில் அமைப்பதற்கான நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்படும்.

அதனடிப்படையில் முல்லைத்தீவில் உள்ள 111 ஏக்கர் காணி விரைவில் விடுவிக்கப்படும் எனவும் அவர் கூறியிருந்தார்.

ஐக்கிய நாடு கள் சபையின் பொதுச் செயலாளர், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மற்றும் வெளிநாடுகளின் தூதுவர்களுக்கு கூட்ட மைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் கடிதம் அனுப்பி வைத்திருந்தார்.

அத்துடன் காணி விடுவிப்புத் தொடர்பில் அரச தலைவருடன் நேரடியாகப் பேச்சு நடத்தியிருந்தார் .

எனினும் கேப்பாப்பிலவு மக்களின் போராட்டத்துக்கு இதுவரை தீர்வு கிடைக்கப்பெறவில்லை. (ஐ)

# வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 160,000 வீடுகள் இன்னமும் தேவை

## அமைச்சர் சுவாமிநாதன் தெரிவிப்பு



மட்டக்களப்பு, ஓக. 28
வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் ஒரு இலட்சத்து 60 ஆயிரம் வீடுகள் இன்னமும் தேவைப்படுகின்றன.

அவர்கள் அனைவருக்கும் வீடுகள் வழங்க வேண்டும் என்பதே எமது நோக்கம். போரால் பாதிக்கப்பட்ட மக்களை மீளக் கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு எமக்கு உள்ளது. இவ்வாறு சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சால் டி.எம். சுவாமிநாதன் தெரிவித்தார். மீள்குடியேற்ற மற்றும் மறுவாழ்வு அமைச்சால், மட்டக்களப்பு முறக்கொட்டாஞ்சேனையில் போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிர்மாணிக்கப்பட்ட 78 வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

அதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரித்தார். அவர் தெரிவித்ததாவது; மட்டக்களப்பு முறக்கொட்டாஞ்சேனையில் கைவிடப்பட்ட நிலையில் உள்ள அரிசி ஆலையைப் புதுப்பித்து இந்தப் பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்துவோம்.

நாங்கள் வேலை செய்வது மக்களின் முன்னேற்றத்துக்காகவே. சமுதாயம் முன்னேற வேண்டும் என்பதே எமது இலக்கு. சமுதாயத்தினரும் முன்னேற்றத்துக்கான கடமையை ஏற்றுக்கொண்டு எமக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் எமக்கு ஒத்துழைப்புத் தருகிறார்கள். அவர்களின் ஒத்துழைப்புடன் இந்த சமுதாயத்தைக் கட்டியெழுப்ப வேண்டும்.

பனை சார்ந்த பொருள்களை வாங்குவதற்கு வெளிநாடுகள் தயாராக உள்ளன. பனை மரங்களை வளர்ப்பதில் எமது மக்கள் ஆர்வம் காட்டினால் பனை சார் உற்பத்திப் பொருள்களை வெளிநாடுகளுக்கு அனுப்ப நான் தயாராகவுள்ளேன் - என்றார். (ஐ-10, 47)

# சைட்டத்துக்கு எதிரான போராட்டம்; கலைஞர்கள் சிலரும் ஆதரவு

கொழும்பு, ஓக. 28
மாலபே தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிராக பல்கலைக்கழக மாணவர்களால் முன்னெடுக்கப்படும் போராட்டம் நேற்று ஏழாவது நாளாகவும் தொடர்ந்தது. கொழும்பு கோட்டைத் தொடருந்து நிலையத்துக்கு முன்பாக மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களின் போராட்டத்துக்கு உள்நாட்டுக் கலைஞர்களும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

"அரசு எமது போராட்டத்தை வெறுமனே மாணவர்களின் போராட்டமாகவும், மருத்துவர்களின் போராட்டமாகவும் கணிக்கும் பட்சத்தில் அதற்கான விளைவுகளுக்கு நேரடியாக முகங்கொடுக்க நேரிடும்" என்று அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் லஹிரு வீரசேகர தெரிவித்துள்ளார். (ஐ-10)

## சிறு குற்றங்கள்: 343 பேர் சீர்திருத்தப்பணியில்

மட்டக்களப்பு, ஓக. 28
மட்டக்களப்பில் சிறு குற்றச் செயல்களில் ஈடுபட்ட 343 பேர் கடந்த ஆண்டு சமுதாயஞ்சார் சீர்திருத்தப்பணி களில் ஈடுபடுத்தப்பட்டனர் என்று மட்டக்களப்பு சமுதாயஞ்சார் சீர்திருத்த உத்தியோகத்தர் கனகசபை சுதர்சன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது; சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்ட சிறு குற்றவாளிகளாக இனங்காணப்பட்டோர் நெறிப்படுத்தப்பட்டு மீண்டும் சமுதாயத்தில் இணைய வேண்டும் என்பதற்காக அவர்கள் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் சமுதாயஞ்சார் சமூக நல சிரமதானப் பணிகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

மட்டக்களப்பு நீதிமன்றம் மற்றும் ஏறாவூர் சுற்றுலா நீதிவான் நீதிமன்றம் ஆகியவற்றில் சிறுகுற்றவாளி களாகக் காணப்பட்ட 321 ஆண்களும், 22 பெண்களுமாக மொத்தம் 343 பேர் சமுதாயஞ்சார் சீர்திருத்தப்ப ணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர். அவர்களில், 235 பேர் மதுபாவனையால் குடும்ப, வீட்டு மற்றும் சமூக வன்முறைகளில் ஈடுபட்டனர். ஏனையோர் போதைப் பொருள் பாவனை, சட்டவிரோத சாராயம், பிற சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டோராக இனங்காணப்பட்டனர். கடந்த ஆண்டில் சமுதாயஞ்சார் சீர்திருத்தப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்ட 343 சிறு குற்றவாளிகளில் 328 பேர் விடுவிக்கப்பட்ட னர். 25 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் - என்றார். (ஐ-10, 46)

# டெங்கு ஒழிப்புச் செயற்றிட்டம் வவுனியாவில் முன்னெடுப்பு

வவுனியா, ஓக. 28
வவுனியா நகரசபைக்கு உட்பட்ட பகுதிகளில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டங்கள் நேற்று முன்தினம் முன்னெடுக்கப் பட்டன. நேற்று முன்தினம் காலை 8 மணியளவில் ஆரம்பமான வேலைத்திட்டம் மாலை வரையும் நடைபெற்றது.

டெங்கு நுளம்பு பெருகும் இடங்களை இனங்கண்டு அவற்றை அழித்தல், டெங்கு நுளம்புப் பெருக்கத்தைக் குறைக்கும் நடவடிக்கை மேற்கொள்ளல், இருப்பிடங்களைத் துப்புரவு செய்தல், சட்ட நடவடிக்கை மேற்கொள்ளல் போன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. வவுனியாவில் சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் எஸ். லவன் தலைமையில் இந்தச் செயற்திட்டம் முன்னெடுக் கப்பட்டது. அதில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள், குடும்பநல உத்தியோகத்தர்கள், இராசேந்திரகுளம் ஆடைத் தொழிற்சாலை பணியாளர்கள், நகரசபை ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

அவர்கள் பொது இடங்கள் மற்றும் வீடுகளுக்கு நேரடியாகச் சென்று பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர். அத்துடன் டெங்கு நுளம்பின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள் தொடர்பாக மக்களுக்குத் தெளிவுபடுத்தினர்.

வாகனங்களில் விழிப்புணர்வுப் பதாகைகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. இதன் போது துண்டு அறிக்கைகளும் விநியோகிக்கப் பட்டன. (ஐ-10)



# பள்ளிவாசல் மீது கல்வீச்சு சந்தேகநபர்கள் ஐவர் கைது

கொழும்பு, ஓக.28
நாரம்மல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பொல்கஹயாய பகுதியில் உள்ள மஸ்ஜித் அந்நூர் ஜூம் ஆ பள்ளிவாசல் மீது திட்டமிட்ட குழுவொன்றால் நேற்றுக் கல்வீச்சு நடத்தப்பட்டுள்ளது. அது தொடர்பில் ஐந்து பேர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர தெரிவித்தார்.

ஒரே வாரத்துக்குள் அந்தப் பகுதியில் தாக்குதலுக்கு உள்ளாகும் மூன்றாவது பள்ளிவாசல் இதுவாகும். இது தொடர்பில் விசேட அவதானம் செலுத்தி சிறப்புப் பொலிஸ் குழு மூலம் விசாரணைகள் நடைபெறுகின்றன என்று அவர் குறிப்பிட்டார்.

நேற்று அதிகாலை மோட்டார் சைக்கிளில் வந்த குழுவொன்று பள்ளிவாசல் மீது கல்வீச்சு நடத்தியுள்ளது. பள்ளிவாசலின் கண்ணாடிகள் பல சேதத்துக்கு உள்ளாகின. தாக்குதல் நடந்தபோது சிலர் பள்ளிவாசலுக்குள் இருந்துள்ளனர். அவர்கள் துரிதமாக செயற்பட்டு ஒலிபெருக்கி மூலம் தாக்குதல் சம்பவத்தை அறிவித்தனர். அதனால் பிரதேச மக்கள் விழித்துக் கொண்டனர்.

அந்தப் பகுதியில் கிராமத்தவர்கள் ஒன்றுகூடினர். எனினும் தாக்குதலாளிகள் தப்பிச் சென்றனர். அந்தப் பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டது. பொலிஸார் சம்பவ இடத்துக்குச்சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். அந்தப் பகுதியில் சந்தேகத்துக்கு இடமான முறையில் இனங்காணப்பட்ட 5 பேர் கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களிடம் தீவிர விசாரணைகள் நடத்தப்படுகின்றன. அந்தப் பிரதேசத்தில் ஏற்கனவே பள்ளிவாசல்கள் தாக்கப்பட்டமைக்கும் இவர்களுக்கும் தொடர்புகள் உள்ளனவா என்றும் அவதானம் செலுத்தப்படுகின்றது எனத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 22, 23 ஆம் திகதிகளில் நாரம்மல மடிகே பெந்தனிகொட கிராமத்தில் உள்ள இரு பள்ளிவாசல்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது.

இவை தொடர்பில் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. (ற-31)

## நவாலி வடக்கு புலவர் சாலையை சீரமைக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக.28
கல் பறிக்கப்பட்டுப் பல மாதங்கள் ஆன நிலையிலும் நவாலி வடக்குப்புலவர் சாலை (பிப்பிலி) இன்னமும் சீரமைப்புச் செய்யப்பட வில்லை என பிரதேசவாசிகள் தெரிவிக் கின்றனர்.

வலி.தென்மேற்குப் பிரதேசசபைக்குட்பட்ட சாலையே இவ்வாறு கல்லுப்பறிக்கப்பட்டும் சீரமைப்புச் செய்யப்படாது போக்குவரத்துக்கு இடையூறாக காணப்படு கின்றது. கடந்த 30 வருடங் களுக்கு மேலாக மறு சீரமைப்பு இன்றிச் சேதமடைந்த நிலையில் இருந்த சாலையைச் சீரமைப்புச் செய்ய வீதி அபிவிருத்தித் திணைக்களம் நடவடிக்கை கள் எடுத்து ஒப்பந்தகாரர் மூலம் கற்கள் பறிக்கப்பட் டன. இவ்வாறான கற்கள் பறிக்கப்பட்ட சாலையில் (புலவர் வீதி) வீதி மின்விளக்கு க ளும் பொருத்தப்படவில்லை. சாலையின் இரு மருங்கி லும் கொங்கிறீட் கற்கள் பறிக்கப்பட்டுள்ளன.

இதனால் இரவு வேளைக ளில் பயணிப்போர் அருகில் உள்ள கொங்கிறீட் கற்கள் மீதுமோதி காயமுற்று வருகின்றனர். எனவே மாரிமழைக்கு முன்னர் வடக்கு மாகாண போக்குவ ரத்து அமைச்சு உடன் மறு சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ளவேண்டும் என நவாலிஹேமலதா ஞாபகார்த்த சனசமூக நிலைய நிர்வா கம் கேட்டுள்ளது. (ய-50)

டெங்குக் கட்டுப்பாட்டு வாரத்தின் போது;

## டெங்கு நுளம்பு பெருகும் சூழல் காணப்படின் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

### யாழ்ப்பாணம்மாநகர சுகாதாரமருத்துவ அதிகாரிஎச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஓக.28
இம்முறை இடம்பெறவுள்ள டெங்குக் கட்டுப்பாட்டு வாரத்தில் டெங்கு பெருக் கத்துக்கு சாதகமான நிலமைகள் காணப்படும் அனைத்து அரச, தனி யார் நிறுவனங்கள் மற்றும் பாடசா லைகள், வீடுகள், மண்டபங்கள், ஆலயங்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ்ப்பாணம் மாந கர சபையின் சுகாதார மருத்துவ அதிகாரிதயாளினி சிவதாசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவரால் அனுப்பி வைக்கப்பட்ட செய்திக்குறிப்பில் மேலும்தெரிவிக்கப்பட்டதாவது; சிறப்பு டெங்கு நுளம்புக் கட்டுப்பாட்டு வாரம் நாளை 29 ஆம் திகதியில் இருந்து 31 ஆம் திகதிவரை கடைப்பி டிக்கப்படவுள்ளது. டெங்கு பெருகக்கூ டிய சூழலை அகற்றி அதன் தாக்கத்தி லிருந்து எம்மைப்பாதுகாக்கும்முகமா கத் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்ப டல் வேண்டும்.

இதன்மூலமேஅதிகரித்துவரும்டெங்கு நோய்த்தாக்கத்திலிருந்து விடுபடமுடி யும். இந்தத் தேசிய நிகழ்வு, அதன் நோக்கத்தை நிறைவு செய்யும் வகை யில்அமைந்திடசகலரும்ஒத்துழைப்பு வழங்கவேண்டும். வாழிடங்கள், சமய நிறுவனங்கள், அரச, தனியார் நிறுவனங்கள் மற்றும் பொதுச்சந்தை கள், மயானங்களின் சுற்றுச்சூழலைத் துப்பரவாகப் பேணுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இந்தநாள்களில்நாளை 29ஆம்திகதி வண்ணார்பண்ணை ஜே 98, ஜே 100, ஜே 102 ஆகிய இடங்களிலும், 30ஆம் திகதி நாவாந்துறை ஜே85, ஜே87, ஜே88 ஆகிய இடங்களிலும் மறுநாள் 31ஆம்திகதிஜே109, ஜே108, ஜே107 ஆகிய இடங்களிலும் டெங்குக் களத் தரிசிப்பு நடைபெறும். இந்த முறை டெங்கு பெருக்கத்துக்கு சாதக மான நிலமைகள் காணப்படும் அனைத்து அரச தனியார் நிறு வனங் கள் மற்றும் பாடசாலைகள், வீடுகள், மண்டபங்கள், ஆலயங்கள்மீது கடு மையானசட்ட நடவடிக்கைஎடுக்கப்ப டும்.

எனவே, அனைவரும் தங்கள் சூழலை டெங்கு பெருகாதவாறு சுத்த மாக வைத்திருக்கவேண்டும். அத்து டன் அன்றைய தினம் தங்கள் வீடுக ளில் இருந்து களத்தரிசிப்புக்கு வருப வர்களுக்குஒத்துழைப்புவழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன் என்றுள்ளது. (ய-21)


## சனசமூக நிலையங்களுக்கு தளபாடங்கள்

யாழ்ப்பாணம், ஓக.28
வடக்கு மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீ பன் தனது 2017ஆம் ஆண்டுக்கான மாகா ணசபையின்குறித்தொ துக்கப்பட்ட நிதி பொதுக் கீட்டின் கீழ் தாவடி காளி யம்பாள் சனசமூக நிலையம், சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் சனசமூக நிலையம் ஆகியவற்றுக்கான தள பாடங்களை வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை காலை 10 மணியள வில் வலி.தெற்குபிரதே சசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

இரு சனசமூக நிலை யங்களுக்குமான தள பாடங்கள் மாகாண சபை உறுப்பினரால் நிர்வாகத்தினரிடம் கையளிக்கப்பட்டன.

நிகழ்வில் மாகாண சபை உறுப்பினருடன், வலி.தெற்கு பிரதேச சபையின் செயலாளர் சுதர்சன், வலி.தெற்கு பிரதேசசபையின் சனச மூகநிலைய அபிவி ருத்தி உத்தியோகத்தர் திருமதி.மலர்மகள் மற் றும் குறித்த சனசமூக நிலையங்களின்நிர்வா கிகள்எனப்பலரும்கலந்து கொண்டனர். (ய-21)



## கொடியேற்ற திருவிழா

யாழ்ப்பாணம், ஓக.28
ஆனைக்கோட்டை வரத விக்ன விநாயகர் (சம்பந் தப்பிள்ளையார்) ஆலயத்தின்வருடாந்தத்திருவிழா இன்று முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத் துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 5ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல்10மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் முற்பகல் 10.45 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டது. (8-21)

+++++++++++++++

யாழ்ப்பாணம், ஓக.28
யாழ்ப்பாணம் இன்பர்சிட்டி வியாபாரி மூலை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வருடாந்த திருவிழா இன்று திங்கட்கிழமை காலை 9.10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பாகி தொடர்ந்து 19 நாள்கள் திருவிழா நடைபெறும்.

காலைநேரப்பூசைகள் 5.45 மணிக்கும், மாலை நேரப்பூசைகள் 4.30மணிக்கும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. (ய-ரி)


# ஊடகவியல் அறிமுகம்

## (அச்சு / இலத்திரனியல்)

சான்றிதழ் பயிற்சி நெறி

ஊடகத் துறையில்
ஆர்வம் உடையோருக்கு
வாய்ப்பு

- 10 நாள் பயிற்சிகள்.
- ஒரு பிரிவில் ஆகக் கூடியது 20 பேர் மட்டுமே.
- இருபாலாருக்குமானது
- பயிற்சியின் முடிவில் சான்றிதழ்.
- கட்டணம் இல்லை.
- பயிற்சிகள் உதயன் பணிமனையில் நடைபெறும்.

விண்ணப்ப முடிவுத் திகதி:
**31.08.2017**

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில்
'ஊடகப் பயிற்சி நெறி' எனக் குறிப்பிட்டு
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்**
என்ற முகவரிக்கு அனுப்புங்கள்

**விண்ணப்பப் படிவம்**

முழுப் பெயர்: ...
வதிவிட முகவரி: ...
பிறந்த ஆண்டு: ...
கைபேசி இலக்கம்: ...
ஆம் / இல்லை
கல்வித் தகைமை:
சாதாரண தரம் -
ஆண்டு: ... பெறுபேறு: ...
பாடம் பெறுபேறு
1. 2. 3. 4. 5. 6. 7. 8. 9. 10.
உயர்தரம் -
ஆண்டு: ... பெறுபேறு: ...
பாடம் பெறுபேறு
1. 2. 3. 4.
கையொப்பம்

## தலையில் குத்தியிருந்த கிளிப் தலைக்குள் ஏறியது

யாழ்ப்பாணம், ஒக. 28
மோட்டார் சைக்கிளின் சில்லுக்குள் புடைவை சிக்கியதில் இடம்பெற்ற விபத்தில் தலையில் அணிந்திருந்த கிளிப் தலைக்குள் ஏறியதால் அவர் மயங்கிச் சரிந்தார். சுயநினைவை இழந்த பெண்ணொருவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வேலணையில் இடம்பெற்றது.
குறித்த பெண் தனது கணவனுடன் மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளார். இவரது சேலை மோட்டார் சைக்கிளின் சில்லுக்குள் சிக்கியதில் விபத்து ஏற்பட்டது. விபத்தில் அந்தப் பெண்ணினுடைய தலையில் குத்தியிருந்த கிளிப் கழன்று தலைக்குள் குத்திச் செருகியதில் அவர் சுயநினைவை இழந்தார் என தெரிவிக்கப்பட்டது. சுயநினைவை இழந்த அவர் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டார். (ய-8-ரி1)

# வறட்சி நிவாரணம் முதலில் விவசாயிகளுக்கே

*யாழ். விவசாய சம்மேளனம் மாவட்டச் செயலரிடம் கோரிக்கை*

யாழ்ப்பாணம், ஒக.28
யாழ்ப்பாண மாவட்டத்தில் 2016 ஆம் ஆண்டில் இருந்து வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கே முதலில் அரசின் இடர் நிவாரணம் வழங்கப்படவேண்டும். அதிலும் கமநலசேவை நிலையம் ஊடாக வறட்சிக்கான காப்புறுதி (சொற்பிரதி) நிதிபெற்ற விவசாயிகளுக்கே இடர் முகாமைத்துவ அமைச்சின் நிதியை வழங்க மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் முன்வரவேண்டும். இவ்வாறு மாவட்ட விவசாய சம்மேளனங்களின் தலைவர் கோரிக்கை விடுத்துள்ளார்.
இது தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது; முதற்கட்டமாக கிராம மட்டத்தில் இடர் பாதிப்புக்குள்ளாகிய விவசாய கூலித் தொழிலாளர்களுக்குப் பிரதேச செயலாளர்களின் பரிந்துரை ஊடாக நிவாரணம் வழங்கப்படுகிறது. இதேவேளை யாழ்ப்பாண மாவட்டத்தில் நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் (2016) பெருந்தொகை பணம் செலவு செய்த போதும் எந்தவிதமான மீள் வருமானங்களையும் நெல்லில் இருந்து பெறமுடியாது அவஸ்தைப்பட்டு மனம் வருந்தினர். இவர்களில் பலர் கமநல சேவை நிலையம் ஊடாக அழிவடைந்த நெற்பயிர்காப்புறுதிப் பணம் பெற்றுக் கொண்டனர். எனவே, மாவட்டச் செயலர் கமநல சேவைநிலையம் ஊடாக காப்புறுதி பெற்ற அனைத்து விவசாயி களுக்கும் இடர் முகாமைத்துவ அமைச்சின் கீழான நிவாரணப்பொதியை வழங்க முன்வரவேண்டும்-என்றார். (ய-50)

## ஊரெழுவில் இடம்பெற்ற இருவேறு விபத்துக்களில் நால்வர் காயம்

யாழ்ப்பாணம் ஒக. 28
சாலையைக் கடந்த குடும்பத்தலைவர் விபத்துக்குள்ளாகி படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். சம்பவத்தில் ஊரெழு மேற்கைச் சேர்ந்த செல்லர் இராசலிங்கம்(வயது- 56) என்ற குடும்பத் தலைவரே காயமடைந்தார்.
குறித்த நபர் ஊரெழு அம்மன் ஆலயத்துக்கு அண்மையில் சாலையைக் கடக்க முற்பட்ட வேளை அவ்வழியே வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றதாக கூறப்படுகின்றது.
இதே வேளை ஊரெழுப் பகுதியில் மோட்டார் சைக்கிளும் துவிச்சக்கர வண்டியும் மோதி விபத்துக்குள்ளானதில் மூவர் காயமடைந்துள்ளனர். இவர்களும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
இந்த சம்பவத்தில் மயிலங்காட்டைச் சேர்ந்த இன்பதாசன் தினேஷ்(வயது -19), தர்மகுலசிங்கம் யசிந்தன் (வயது- 19), புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த நாதன் சரவணபவான்(வயது- 56) ஆகியோரே காயமடைந்தனர். (21-8-ரி1)

# மயிலிட்டியில் தொழில் செய்ய மேலதிக இடத்தைத் தாருங்கள்

*மீனவ சங்கத்தினர் கோரிக்கை*

யாழ்ப்பாணம், ஒக. 28
மயிலிட்டி துறைமுகத்தில் தொழில் செய்வதற்கு ஏற்றதாக இடவசதி போதாதுள்ளது. எனவே இராணுவத்தினர் கையகப்படுத்தியுள்ள நிலப்பரப்பில் மேலும் ஒருபகுதியை விடுவிக்க வேண்டும் என்று பிரதேச மீனவர்கள் கோரியுள்ளனர்.
அது தொடர்பில் கலந்துரையாடல் ஒன்றை நடத்துவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.
பருத்தித்துறையில் உள்ள இலங்கைத்தமிழரசுக் கட்சி அலுவலகத்தில், மயிலிட்டியில் தொழில் செய்யும் மீனவ சங்கம் உள்ளிட்ட மயிலிட்டியில் உள்ள பல சங்கங்களின் நிர்வாக உறுப்பினர்களுடனான சந்திப்பு ஒன்றை சுமந்திரன் ஏற்பாடு செய்திருந்தார். அதன்போது, மயிலிட்டி துறைமுகத்தில் தொழிலுக்கான மீன்பிடிவலைகளைச் செப்பனிடல், படகு வேலைகளை மேற்கொள்ளல் எனப் பல தேவைகளுக்கும் நிலப்பகுதி போதியதாக இல்லை. கடற்படையினரிடமிருந்து மேலும் ஒரு பகுதி நிலப் பகுதியை விடுவித்துத் தரவேண்டும்.
மயிலிட்டியில் தமது பகுதியில் மாத்திரம் 600 வீடுகள் அழிக்கப்பட்டுள்ளன. அவற்றை மீளவும் அமைத்துத் தரவேண்டும். மருத்துவமனை உள்ளிட்ட முக்கிய பகுதிகளைச் சீரமைக்க விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உட்படப் பல கோரிக்கைகளை அவர்கள் சுமந்திரனிடம் முன்வைத்தனர்.
குறித்த பிரதேசம் பகுதி பகுதியாக அபிவிருத்தி செய்யப்படும். தொழிலுக்கான நில விடுவிப்புத் தொடர்பில் அடுத்த வாரம் கூட்டம் ஒன்றை நடத்த ஏற்பாடு செய்வதாகவும் அதில் குறித்த பிரச்சினை தொடர்பில் ஆராயலாம் என்றும் சுமந்திரன் தெரிவித்தார். (4-26)

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 60 | 60 | 80 | 60 | 60 |
| கத்தரி | 120 | 140 | 160 | 150 | 120 |
| மரவள்ளி | 80 | 80 | 80 | 60 | 70 |
| பயிற்றை | 100 | 80 | 100 | 80 | 80 |
| பாகல் | 180 | 160 | 200 | 160 | 160 |
| க.கிழங்கு | 100 | 120 | 120 | 120 | 90 |
| பெ.வெங்காயம் | 130 | 140 | 130 | 140 | 120 |
| சி.வெங்காயம் | 160 | 180 | 180 | 200 | 120 |
| பூசணி | 60 | 40 | 60 | 50 | 40 |
| தக்காளி | 150 | 140 | 160 | 160 | 140 |
| வாழைக்காய் | 100 | 80 | 100 | 80 | 100 |
| கீரை | 30 | 30 | 40 | 20 | 30 |
| பொன்னாங்காணி | 25 | 20 | 30 | 30 | 30 |
| ப.மிளகாய் | 300 | 250 | 300 | 280 | 260 |
| புடோல் | 70 | 80 | 80 | 80 | 60 |
| கோவா | 130 | 80 | 120 | 100 | 80 |
| வெண்டி | 80 | 60 | 50 | 80 | 40 |
| போஞ்சி | 120 | 180 | 200 | 160 | 160 |
| லீக்ஸ் | 100 | 100 | 120 | 100 | 100 |
| தேங்காய் | 60 | 70 | 70 | 60 | 60 |
| உ.கிழங்கு | 100 | 90 | 100 | 100 | 120 |
| தேசிக்காய் | 60 | 120 | 100 | 100 | 100 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 15 | 15 |
| கறிமிளகாய் | 140 | 120 | 160 | 140 | 100 |
| கரட் | 160 | 160 | 240 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 70 | 100 | 100 | 30 | 80 |

# கரவெட்டியில் நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக.28
டென்மார்க் தருமன் தர்மகுலசிங்கத்தின் "என் வாழ்க்கை ஒரு அழகான கதை" நூல் வெளியீட்டு விழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கரவெட்டி இருதயக் கல்லூரியில் முனைவர் சி.சதீஸ்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது.
முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே, சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் தூதரக கொன்சியூலர் ஆ.நட ராஜன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.
நூல் வெளியீட்டுரையை யோ.புரட்சி வழங்குவார். மாத்தளை வடிவேலன், கே.அருந்தாகரன், த.கலாமணி ஆகியோர் நூல் நயப்புரை ஆற்றுவர். வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் சிறப்புரை ஆற்றுவார். நூல் வெளியீட்டைத் தொடர்ந்து சான்றோர் கௌரவிப்பும் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (4)

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்

| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 700 | 700 | 1000 | 1000 |
| நண்டு | 400 | 400 | 500 | 300 |
| கணவாய் | 800 | 600 | 800 | 1000 |
| பாரை | 600 | 500 | 700 | 800 |
| சுறா | 600 | 700 | 1000 | 900 |
| சீலா | 500 | 400 | 500 | 600 |
| விளை | 600 | 400 | 500 | – |
| முரல் | 400 | 350 | 450 | – |
| கும்பிளா | 300 | 300 | 500 | 500 |
| கிளாக்கன் | 800 | – | 500 | – |
| ஓரா | 400 | 300 | 300 | 400 |
| திரளி | 200 | 200 | 400 | 200 |
| நகரை | 300 | 150 | 200 | 200 |
| சூடை | 250 | 100 | 200 | 150 |
| ஒட்டி | 250 | 200 | 300 | 300 |
| திருக்கை | 350 | 200 | 400 | – |
| மதனம் | 250 | 150 | 250 | – |
| கொய் | 150 | 30 | 80 | 100 |
| பாலை | 200 | 200 | 500 | – |
| | 200 | 200 | 400 | – |

## விபத்தில் முறிந்தது கால்

மோட்டார்சைக்கிளும்துவிச்சக்கர வண்டியும் மோதி விபத்துக்குள்ளானதில் குடும்பத்தலைவர் ஒருவரது கால் முறிந்த சம்பவம் ஆவரங்காலில் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் புத்தூர் வடக்கு கலைமதியைச் சேர்ந்த தியாகராஜா ராஜ்மோகன் (வயது 30) என்பவரே காயமடைந்தார். கால்முறிவடைந்த அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளார். குறித்தநபர் நேற்றுமுன்தினம் ஆவரங்கால் சந்திப்பகுதியில் துவிச்சக்கர வண்டியில் பயணித்துக்கொண்டிருந்த போது மோட்டார் சைக்கிள் ஒன்று மோதியது எனதெரிவிக்கப்பட்டது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ய-8-ரி)




ஆண்களுக்கான கைக்கடிகாரங்கள் நவீன வடிவில் சந்தைக்கு வந்துள்ளன. இவை 2 ஆயிரத்து 200 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.

# மருத்துவர்கள் உட்பட வளப்பற்றாக்குறைகளுடன் பளை மருத்துவமனை

## அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் மன்றாட்டம்

கிளிநொச்சி ஓக. 28

பளை பிரதேச மருத்துவமனையில் நிலவும் மருத்துவர்பற்றாக்குறைஉள்ளிட்ட ஆளணி வளங்கள் நிரப்பட்டு,அவசரநோயாளர்களைக்கொண்டுசெல்வதற்கான நோயாளர் காவு வண்டி வசதிகளும் வழங்கப்படவேண்டும். இல்லை எனில் அங்கு செல்லும் நோயாளர்கள் உயிழக்கும் சம்பவங்களும் ஏற்படும் என பிரதேசவாசிகள் கோரிக்கைவிடுக்கின்றனர்.

அண்மையில் வெடிவிபத்தில் படுகாயமடைந்த ஒருவரை பாளை மருதடதுவமனைக்குக் கொண்டுசென்றபோது அங்கு மருத்துவரும் இருக்கவில்லை,நோயாளர் காவுவண்டியும் இல்லை எனக் கூறி எம்மை வேறு மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லுமாறுகூறப்பட்டது என பிரதேச வாசியொருவர் தெரிவித்தார்.

பளைப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை வெடிவிபத்தில் படுகாயமடைந்த தாயையும், மகளையும் அப்பகுதிமக்கள்பளைமருத்துவமனைக்குக் கொண்டு சென்றுள்ளனர். இதன் போது மருத்துமனை ஊழியர்கள்முதலுதவிகூடவழங்காமல் காயமடைந்தவர்களைத் திருப்பி அனுப்பியுள்ளனர்.

இதனால் அவ்விருவரும் முச்சக்கரவண்டியில் சாவகச்சேரிமருத்துவனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அவ்வழியேவந்தமிதிவெடி அகற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தினர் குறித்தநோயாளிகளின்நிலமையைக் கருத்தில் கொண்டு அவர்களைதமது வாகனத்தில் ஏற்றிச்சென்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில்சேர்தனர். பளைமருத்துவமனையின்இந்தமனிதநேயமற்ற செயற்பாடுதொடர்பில்உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாதிக்கப்பட்டவர்கள்தெரிவிக்கின்றனர்.

பளை பிரதேசம் விபத்துக்கள் அதிகம் இடம் பெறும் பிரதேசமாக அடையாளம் காணப்பட்டுள்ளது. மாவட்டத்தின் முதன்மை மருத்துவ மனைகளில் பளையும் உள்ளடங்கும். மருதங்கேணிஉட்படஅதிக தூர பிரதேசங்களில் இருந்தும் நோயளாகள் அவசரஅவசரமாகசிகிட்கைக்காக இங்கேயே கொண்டுவரப்படுகின்றனர்.

எனினும் இங்கு நிலவும் குறைபாடுகள்காரணமாகச் சிகிச்சை வழங்குவதற்கு தாமதம் ஏற்படுகிறது. இதனால்சிலநேரங்களில்உயிரிழப்புகளும் ஏற்படக்கூடும் எனமக்கள்அச்சம்தெரிவிக்கின்றனர். மருத்துவனைக்கென ஒரு நோயாளர் காவு வண்டியே இருப்பதாகக் கூறப்படுகின்றது. அது பணியின் நிமித்தம் வெளியில் செல்லும்போது அவசரமாக வரும் நோயாளருடைய நிலை அந்தோ கெதியாகிவிடும். எனவே சம்பந்தப்பட்டவர்கள் மேலதிகமாக நோயாளர்காவுவண்டியை வழங்கவேண்டும். கடந்த திங்கட்கிழமை கையில் கண்ணாடி வெட்டிய நிலையில் குருதி சொட்டச்சொட்ட மருத்துவமனைக்கு வந்த ஒருவருக்கு முதலுதவிகூட வழங்கப்படவில்லைஎனக் கூறப்படுகின்றது.

மருத்துவரும் இருக்காத நிலையில் வெட்டுக்காயத்துக்குக் கட்டுப் போடுவதற்காக ஒரு துண்டு துணியைக்கூட தருவதற்கு ஊழியர்கள் மறுத்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. காயத்துடன் சென்ற நபர், கடமை நேரஊழியரிடம்குருதிவருகிறது கட்டுவதற்குத் துணி தாருங்கள் என கேட்ட போது,அதற்கும்மருத்துவர் வரவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

அடுத்து 10 நிமிடங்களின் பின்னர்கைவேதனையாக உள்ளதுமாத்திரைஏதாவது தாருங்கள் என கேட்டபோதும் மருத்துவர் வர வேண்டும் என தெரிவித்துள்ளார். இவ்வாறுசுமார்1மணிநேர தாமதத்திற்குப் பின்னர் மருந்து கட்டப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

"மனிதாபிதான அடிப்படையில் கட்டுவதற்குத் துணி வழங்கப்பட்டிருக்க வேண்டும். இது பளை மருத்துவமனையின் பொறுப்பதிகாரியின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டுநடவடிக்கை எடுக்கப்படும். மேலும்வெடிவிபத்தில்காயமடைந்த நோயாளி திருப்பி அனுப்பப்பட்டமைதொடர்பிலும் நாம் ஆரம்ப விசாரணையை மேற்கொண்டோம். இருந்த ஒரு நோயாளர் காவு வண்டி ஏற்கவே விபத்தில்சிக்கியநபரினைக் கொண்டு சென்றிருந்தது. இதுஎனக்குதெரிவிக்கப்பட்ட போது, கண்ணிவெடி அகற்றும் இராணுவத்தனர் மற்றும்கண்ணிவெடிஅகற்றும் பிரிவினர் தமது வாகனத்தில் கொண்டு செல்வதாகத் தெரிவித்ததைத் தொடர்ந்து நோயாளர்கள்மாற்றம்செய்யப்பட்டனர்" என கிளிநொச்சி பிராந்திய சுகாதார பணிப்பாளர் கார்திகேயன் தெரிவித்தார். (ய-21-8-6)

# போரின் பின்னர் கிளிநொச்சியில் அமைக்கப்பட்ட இராணுவச் சின்னத்தை அகற்றுமாறு கடிதம்

## ஒருங்கிணைப்புக் குழுவின் தீர்மானத்துக்கு அமைய அரசதலைவருக்கு மாவட்ட செயலகம் அனுப்பியது

கிளிநொச்சி, ஓக.28

கிளிநொச்சி நகரின் டிப்போச் சந்தியில் அமைக்கப்பட்டுள்ள, தேசிய நல்லிணக்கத்துக்குப் பொருத்தமற்றதாகக் கருதப்படும் இராணுவ நினைவுச் சின்னத்தினை அகற்றி மாவட்டத்தின் அபிவிருத்திக்கு உதவுங்கள் என அரசதலைவருக்கு மாவட்டச் செயலர் சு. அருமைநாயகம் கடிதம் அனுப்பியுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டம் ஒரு நகரமாக வளர்ச்சியடையாது இருப்பதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் இராணுவம்ஆகிய இருதரப்புமேதடையாக இருப்பதாகக்கடந்த மேமாதம்29ஆம்திகதி இடம்பெற்றமாவட்டஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில்நாடாளுமன்றஉறுப்பினர்சி.சிறிதரன் குற்றம் சாட்டியிருந்தார். இதற்கு நகரின் மத்தியில் உள்ள இராணுவச்சின்னமே முக்கிய காரணம். எனவே இதனை நகர அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகளும்கண்டுகொள்வதில்லை. இவ்வாறு நகரத்திட்டமிடல் பற்றி எந்த அக்கரையும் இன்றி அதிகாரிகள் செயற்படு வதனால் இராணுவத்தினரும் தமதுபோக்கிலேயே செயல்படுகின்றனர் என அவர் தெரிவித்திருந்தார். கிளிநொச்சி டிப்போச் சந்தியில் அமைத்துள்ள இராணுவச் சின்னம் யாருக்காக இருக்கிறது? டிப்போச் சந்தியில் இருக்கின்ற செங்கல் சுவர்கள் எப்போது அமைக்கப்பட்டன? எங்கிருந்து செங்கற்கள் கொண்டுவரப்பட்டன? 2009க்குமுன் இடம்பெயர்ந்து சென்றபோது அந்த இடத்தில் அப்படி எதுவும் இருக்கவில்லை. எனவே இராணுவச்சின்னத்தை அமைக்க நகர அவிருத்தி அதிகாரசபையும் உடந்தையாக இருக்கிறதா எனவும் கேள்வி எழுப்பினார். கிளிநொச்சிமாவட்டமும்ஓர்நகரமாவதற்குநகர அபிவிருத்தி அதிகாரசபை விடுகிறார்கள் இல்லை எனவும் அவர் பகிரங்கமாகக் குற்றம்சாட்டியி ருந்தார். இந்தக் குற்றச்சாட்டின் பெயரில் கிளிநொச்சி டிப்போச் சந்தியில் உள்ள இராணுவ நினைவுச் சின்னம் நல்லிணக்கத்துக்கு பொருத்தமானது இல்லைஎன்பதால்அதனைஅங்கிருந்துஅகற்றுமாறுஒருங்கிணைப்புக்குழுவில்தீர்மானமாகநிறைவேற்றப்பட்டதோடு அரசதலைவருக்குமாவட்டச்செயலர் கடிதம்அனுப்பவேண்டும் என்றும் தீர்மானமா னிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறு தீர்மானம் நிறை வேற்றப்பட்டு 80 நாள்கள் கடந்துவிட்ட நிலையில் தற்போது மாவட்டச் செயலகத்தினால் குறித்த கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு கடிதம் அனுப்பியமை குறித்து மாவட்டச் செயலரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத் தீர்மானத்தின் பிரகாரமே கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றார். (ய-21-101)

# ஒற்றுமையுடன் செயற்பட்டால் மலைபோல் காரியங்களை சாதிக்கலாம்

## இராசநாயகம் அறிவுரை

வடக்கு மாகாண அமைச்சர்கள், உறுப்பினர்கள் ஒற்றுமையுடன் செயற்பட்டால் மலை போல் காரியங்களைச் சாதிக்கலாம் என வடக்கு மாகாண முன்னாள் தலைமைச் செயலாளரும், கிளிநொச்சி மாவட்ட முன்னாள் மாவட்டச் செயலரும், மகாதேவா சைவசிறார் இல்லத் தலைவருமான திருநாவுக்கரசு இராசநாயகம் தெரிவித்தார்.

தி. இராசநாயகத்துக்கு அண்மையில் பணிநயப்பும் இமயம் நூல்வெளியீட்டு விழாவும் கிளிநொச்சியில் இடம்பெற்றது. விழாக் குழுத் தலைவரும் முன்னாள் உதவி மாவட்டச்செயலருமான பொன். நித்தியானந்தன் தலைமையில் இடம்பெற்ற விழாவில் ஏற்புரையாற்றுகையிலேயேஅவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது ; எமக்குக் கிடைத்த வடக்கு மாகாணசபை பெரும் பொக்கிசம். இந்த மாகாண சபையூடாக 5 மாவட்டங்களினதும் பாரிய அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து மக்களின் தேவைகளை முழுமையாக நிறைவேற்றலாம். எமது முதலாவது மாகாணசபை எமது முதல்வர் விக்னேஸ்வரன் தலைமையில் முன்னெடுக்கப்படுகிறது. அனைத்து அமைச்சர்களும் மாகாண சபை உறுப்பினர்களும் ஒருங்கிணைந்து ஒற்றுமையாய் கைகோர்த்து பலம் கொடுப்பதன் ஊடாக பலம்மிக்க சபையூடாக நல்லெண்ண அபிவிருத்திகள் ஏற்படுத்தலாம். மாகாணசபை உறுப்பினர்கள் அமைச்சர்கள் நீங்கள் ஒற்றுமையுடன் செயற்பட்டால் மலைபோல் காரியங்களைச் சாதிக்கலாம். எனவே எல்லோரும் கைகோர்த்துப் பணியாற்றி வடக்கில் அழிந்து போன பிரதேசங்களின் அபிவிருத்திக்கு உதவுங்கள் என்றார். (ய-21)

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை
இன்று (28.08.2017) திங்கட்கிழமை
6 ஆம் திருவிழா



மஞ்சமதில் ஏறியருட் கருணை சொரிவாய்
தெல்லிநகர் தன்னிலருள் தந்தெமையாளும்
தேசுடைய வீரசக்தி துர்க்கையெம்தாயே
அல்லிமலர் விழியழகி அம்பிகை நீயே
ஆற்றல்மிகு தந்துமெமை காத்தருளும்
கல்லும் கசிந்துருகக் கருணை சொரியும்
காட்சியது கண்டுநெஞ்சம் தானுமுருக
நல்லமணி மஞ்சமதில் ஏறியே வந்தும்
நற்காட்சி காட்டியருள் செய்திடும்தாயே
அனுசரணை:
ஜனா சிவில் என்ஜினியரிங் கொன்ஸ்ரக்சன்,
கே.கே.எஸ். வீதி, தெல்லிப்பழை.
இந்து இளைஞர் சங்கம் - தெல்லிப்பழை.

கட்சித் தலைமைகளே உறுப்பினர்களை

# அவமரியாதை செய்யாதீர்கள்!

## மாகாணசபை உறுப்பினர் தியாகராசா வேண்டுகோள்



வவுனியா. ஓக.28
கட்சி உறுப்பினர்களை கட்சியின்தலைமைப்பீடத்தைக் கண்டபடி திட்டி அவமரியாதை செய்வதை நிறுத்தவேண்டும் என வடக்கு மாகாணசபை உறுப்பினர்ம.தியாகராஜா தெரித்தார்.

வவுனியா மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் 19ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம்நேற்றுமுன்தினம்வவுனியா விடுதியொன்றில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: வடக்கு மாகாணசபையைப் பொறுத்தவரை ஒரு வெட்கக்கேடான விடயம். ஒவ்வொருகட்சிகளும்தங்களுக்குள் பிரசாரம் செய்து கொண்டிருக்கின்றன. கட்சி உறுப்பினர்களுக்கிடையில் பிளவுகள்உள்ளன. நேற்றுக்கூட (நேற்றுமுன்தினம்) ஒரு கட்சியின் மாகாணசபை உறுப்பினரை அந்தக் கட்சியின்செயலாளர்பெரும்கேவலமாக பேசியிருக்கிறார்.

இதனால்பாதிக்கப்பட்டஅந்த மாகாணசபை உறுப்பினர் "பிழை செய்யும்போது அந்தக் கட்சிகள் பராமுகமாக இருந்துவிட்டுத் தற்போது தவறாக பேசுகிறார்கள் என்று"எனக்குச்சொன்னார். தேர்தல் காலங்களில் இது ஒரு மாதிரி, அதன்பின்னர் இது இன்னுமொருமாதிரி நடைபெறுகிறது.

படித்த இந்த மகாணசபை உறுப்பினரைக்கேவலமாக அந்தச் செயலாளர் திட்டுவது ஏற்கமுடியாது. கட்சித் தலைமைகள் நிச்சயமாக உறுப்பினர்களை கேவலப்படுத்துகின்ற நிலையைத் தவிர்க்க வேண்டும். இதே நிலையில் நானாக இருந்தால் விலகியிருப்பேன். இவ்வாறான சர்ந்தப்பங்களிலேயே கட்சி உறுப்பினர்கள் கட்சியை விட்டு விலகுவதாக நான் அறிகிறேன்.

இவ்வாறானநிலைஇனியும் எமது மண்ணில் தொடரக்கூடாது. எந்த ஒருகட்சியும் அதன் உறுப்பினர்களை மரியாதையுடன்வழிநடத்துவதுதான்நாகரிகம்என்றார்.

இந்த நிகழ்வில் 30 வறிய மாணவர்களுக்கு 10ஆயிரம் ரூபா பணம் வவுனியா மாவட்ட தனியார் பேரூந்து சங்கத்தினால் வழங்கழ வைக்கப்பட்டது. நிகழ்வில் வடக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சரும்மாகாணசபை உறுப்பினருமான மருத்துவர் பா. சத்தியலிங்கம், வடக்கு மாகாணசபை உறுப்பினர் ம.தியாகராசா வடக்கு மகாணசபையின் முன்னாள் உறுப்பினர் செ.மயூரன் வவுனியா மாவட்ட மேலதிக செயலர் தினேஸ்குமார் மற்றும் தனியார் பஸ் உரிமையாளர்கள் சாரதிகள்மாணவர்கள்நலன் விரும்பிகள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

(ய-21-402)

# வவுனியா புதிய பஸ்நிலையத்தில் சேவைகள் நடைபெற வேண்டும்

## மாகாணசபை உறுப்பினர் சத்தியலிங்கம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம். ஓக.28
தனியார் பஸ் உரிமையாளர்களின் கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு சுமுகமாகபுதியபஸ்நிலையத்தில்சேவைகள் ஆரம்பிக்கப்படல் வேண்டும் என வடக்கு மாகாணசபை உறுப்பினர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட தனியார் பேரூந்து உரிமையாளர் சங்கத்தின் 19ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் நேற்று முன்தினம்வவுனியாவிடுதியொன்றில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;
பொதுமக்களுடைய வரிப்பணத்திலே கிட்டதட்ட 200மில்லியன் ரூபா நிதி வவுனியாபுதியபேருந்துநிலையத்துக்காகச் செலவழிக்கப்பட்டது. இந்த பஸ் நிலையம் பயன்படுத்தப்படாதிருப்பது மனவருத்தத்துக்குரியது. இனி இந்த பஸ் நிலையத்தைப் பயன்படுத்துவதாயின் அதனை திருத்த வேலைக்குட்படுத்தவேண்டும்.

மாகாணசபையின் தற்போதய போக்கிலே இந்தபஸ்நிலையத்தைஎவ்வாறு பயன்படுத்தப்போகிறார்கள் என்பது கேள்விக்குறியாகவுள்ளது. வடக்கு மகாணசபையிலே அமைச்சரவை மாற்றம் நடைபெற்றிருக்கிறது.

வடக்குமகாணசபைஇன்றுசாரத்தைக் கழட்டியெறியும் நிலையில் தான் உள்ளது. இதுபோல் தான் வவுனியாவில் உள்ள புதிய பஸ்நிலையத்துக்கும் ஏற்படும் என்று நினைக்கிறேன். இதனைச் சிரிப்பதற்காகக் கூறவில்லை மனவருத்தத்துடன் தான் சொல்கிறேன். தனியார்பஸ் உரிமையாளர்கள் இன்று பஸ்களை கடன்பட்டு வாங்கி விட்டு வட்டிகட்ட முடியாது கஸ்டப்படுகிறார்கள். இந்த மாவட்ட மக்களுக்கு தனியார் பஸ்கள் சேவை தொடர்ந்து சுமுகமாக நடைபெற வேண்டுமாயின் இந்தப்புதியபஸ்நிலையம்திறக்கப்படல் வேண்டும் என்றார்.

பின்னணி
"வவுனியாவில் 195 மில்லியன் ரூபா செலவில் இலங்கையில் நவீன வசதிகளுடன் கூடியதாக அமைக்கப்பட்ட புதிய பேரூந்துநிலயம்கடந்தஜனவரிமாதம் 16ஆம் திகதி கொழும்பு போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறி பால டி செல்வாவினால், மக்களின் பாவனைக்குத் திறந்துவைக்கப்பட்டது. திறந்து வைக்கப்பட்டதிலிருந்து இ.போ.ச மற்றும் தனியார் பேருந்துச் சாரதிகளிடையே முறுகல்நிலைகள்ஏற்பட்டது. இ.போ.ச சாலை ஊழியர்கள் தமக்குப் பழைய பேருந்து நிலையத்தில் சேவைகள் மேற்கொள்வதற்கு அனுமதிக்குமாறு கோரி தொடர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். வவுனியாமாவட்டசெயலகத்தில் நீண்ட பேச்சுக்கள் இடம்பெற்றன.

இணைந்த நேர அட்டவணை தயாரிக்கும் வரை புதிய பேருந்து நிலையத்தில் எந்த விதமான சேவைகளும் மேற்கொள்ளப்பட மாவட்டாது எனவும், அது வரை பழைய பேருந்து நிலையத்தில் இருந்து தனியார் இ.போ.ச. பேருந்துகள்சேவைகளைமேற்கொள்ளமுடியும் என்றும் முடிவு செய்யப்பட்டது. ஒப்பந்தத்தில் இரு தரப்பினரும் கைச்சாத்திட்டனர்.

அதன்பின்னர்புதியபேருந்துநிலையத்தில்எந்தவிதமானசேவைகளும்இடம் பெறவில்லை.

குறித்த பேருந்து நிலையம்தொடர்பாக வடக்கு மாணத்துக்கு போக்குவரத்து அமைச்சராக இருந்த பா. டெனீஸ்வரனிடம் அப்போது கேட்ட போது சட்ட நடவடிக்கை எடுக்க இருப்பதாகத் தெரிவித்திருந்தார். இன்று 8 மாதங்கள் கடந்து விட்டன இதுவரை பேருந்து நிலையம் தொடர்பான எந்த முன்னேற்ற கரமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை"

(ய 21,402)

# இலவச பிரதிபலிப்பு சிகிச்சை

யாழ்ப்பாணம். ஓக.28
இந்தியாவின் பிரபல பிரதிபலிப்புச் சிகிச்சை நிபுணர் திருமதி இராஜேஸ்வரியின் இலவச மருத்துவமும் இலவசப் பயிற்றுவிப்பும் நடைபெறவுள்ளது.

கொழும்பு, யாழ்ப்பாணம், பருத்தித்துறை, சாவகச்சேரி, திருகோணமலை, வவுனியா, மன்னார் மற்றும் கிளி நொச்சி ஆகிய இடங்களில் ஏற்கனவே மருத்துவமும் பயிற்றுவிப்பும் இடம்பெற்றுள்ளது.

எனவே, இந்தமுறைஇவை தவிர்ந்த ஏனைய இடங்களில் இந்த செயற்திட்டம் இடம்பெறவுள்ளது என அறிவிக்கப்பட்டது. ஆகவே இந்த சேவை தேவைப்படுபவர்கள் செயலாளர், ஸ்ரீராம் சந்த்ரமிஷன், 33ஏ மல்லிகா லேன், வெள்ளவத்தை, கொழும்பு 6 (தொ.பே.இல0718361706)என்ற முகவரியுடன்தொடர்புகொள்ளவும். பாரிசவாதம், கைநடுக்கம் போன்ற நோய்களுக்கு கடந்த முறை சிகிச்சை தொடங்கியவர்கள் திருமதி இராஜேஸ்வரி கொழும்பில் தங்கியிருக்கும் சமயத்தில் அவருடன்தொடர்புகொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டது.

(ய-21)

# கஞ்சாப் பொதியென நினைத்து பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட உரப்பைக்குள் காத்திருந்த பசளைகள்

## பொலிஸாருக்கு அதிர்ச்சி

தென்மராட்சி.ஓக. 28
கஞ்சா இருக்கிறது என்ற சந்தேகத்தில் பிரிக்கப்பட்ட பொதிக்குள் ஆட்டுப்பிளுக்கையும், மாட்டு எருவும் இருந்த சம்பவம் ஒன்று சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிளில் கஞ்சா கடத்தப்படுவதாக யாழ்ப்பாணம் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது. பொலிஸார் சாவகச்சேரி பொலிஸாரின் உதவியுடன் நாவற்குழியில் காத்திருந்தனர். அவ்வழியே சந்தேகத்திற்கிடமான முறையில் உரப்பையில் பொருள்களைக் கொண்டு சென்ற மோட்டார் சைக்கிளை பொலிஸார் மறித்தனர்.

உரப்பையுடன் மோட்டார் சைக்கிள் செலுத்தி வந்தவரைக் கைதுசெய்து சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து வந்துள்ளனர்.

அங்கு பொதிணைப் பிரித்து பரிசோதித்தபோது அதனுள் பூக்கன்றுகளுக்கு உரமிடுவதற்காக நாவற்குழிப் பகுதியிலிருந்து கொண்டு செல்லப்பட்ட ஆட்டுப் புளுக்கையும், மாட்டு எருவுமே இருந்துள்ளன.

சுமார் 3 லட்சம் ரூபா பெறுமதியான கஞ்சா கடத்தப்படுவதாகவே பொலிஸாருக்குத் தகவல் கிடைத்திருந்தாகத் தெரிவிக்கப்பட்டது. (ய-21-9)

# புதிய பிரதேசசபைகள் வெகுவிரைவில் மலரும்

## சுமந்திரன் எம்.பி. நம்பிக்கை

யாழ்ப்பாணம். ஓக.28
வடக்குமாகாணத்தில் இன்றுவரை பிரதேசசபைகளே இல்லாத இடங்கள் தொடர்பிலும், ஓர் மாவட்டத்தின் நகரமே பிரதேச சபையாகவும் உள்ளமை தொடர்பிலும் தலைமை அமைச்சர் சிறப்பு கவனம் செலுத்தியுள்ளார். இதனையடுத்து உடனடியாகக் குறித்த விவரங்களை சமர்ப்பிக்குமாறு உள்ளூராட்சி சபைகள் அமைச்சரிடம் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இதுதொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் மேலும் தெரிவித்ததாவது: வடக்குமாகாணத்தில் இன்றுவரை பிரதேசசபைகளே இல்லாத 5 இடங்கள் தொடர்பிலும் ஓர் மாவட்டத்தின் நகரமே பிரதேச சபையாகவும் உள்ளமை தொடர்பிலும் தலைமை அமைச்சர் கவனத்தினைக்கொள்ள வேண்டும். வடக்கு மாகாணத்தின் கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேசசபையானது தற்போது இருபிரதேச செயலாளர் பிரிவினை உள்ளடக்கியுள்ளது.

இங்குள்ள இரு முக்கிய பிரதேச செயலகங்களை உள்ளடக்கிய வகையில் மிகப்பெரும் நிலப்பரப்பில் அதிக மக்களுக்கு ஒரு சபையாக இயங்குவதோடு அதுவே கடைநிலையான சபையாகவும் உள்ளது.

இச்சபையினை நகரசபையாக அபிவிருத்தி செய்வது தொடர்பிலும், கரைச்சிப் பிரதேசசபையினை கரைச்சி, கண்டாவளை ஆகிய இரு சபைகளாக உருவாக்குவது தொடர்பிலும் கவனமெடுக்குமாறு கோரினோம். அத்தோடு ஏற்கனவே உள்ளூராட்சி அமைச்சருக்கு இது தொடர்பில் கடிதம் அனுப்பப்பட்டிருந்தது. வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் மருதங்கேணி, முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான், மன்னார் மாவட்டத்தில் மடு ஆகிய பிரதேசே செயலாளர் பிரிவுகளுக்கு இன்றுவரை உள்ளூராட்சி சபைகளே கிடையாது.

இதனையும் சுட்டிக்காட்டி அப்பிரதேசங்களுக்கும் தனிச் சபைகளை உருவாக்க நடவடிக்கை எடுக்குமாறும் கோரியிருந்தோம். குறித்த மாற்றத்தினை எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்னரே மேற்கொள்ளுமாறு கோரியிருந்தோம். போர் காரணமாக 30 ஆண்டுகளாகக் கைவிடப்பட்டிருந்த வடக்கு மாகாணத்தின் நிலமைகளையும் கவனத்தில் எடுக்குமாறும் அவசரமாக கோரிக்கை விடுத்திருந்தோம்.

இவற்றினை ஆராய்ந்த தலைமை அமைச்சர் உடனடியாக இதன் விவரங்களை உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைசல் முஸ்தபாவிடம் சமர்ப்பிக்குமாறு தெரிவித்துள்ளார்.

எனவே இதற்கான சாத்தியப்பாடுகள் உண்டு என நம்புகின்றோம் என்றார்.

(ய -101)

# நவீன தெங்கு உற்பத்தி: பெங்களூரில் கற்கைநெறி பூர்த்தி

பெங்களூர் மாநிலத்தின் பெருந்தோட்ட முகா மைத்துவ நிறுவனத்தில் நவீன தென்னைப்பயிர்ச்செய்கை தொடர்பான கற்கை நெறியைப் பூர்த்தி செய்த தென்னைவள உத்தியோகத்தர் ஜெ.சத்தியேந்திரன் நாடு திரும்பியுள்ளார்.

யாழ்ப்பாணம் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் இவர் இலங்கை அரசின் புலமைப்பரிசில் மூலம் இந்தக் கற்கை நெறிக்கு தெரிவுசெய்யப்பட்டிருந்தார். வடமாகாணத்திலிருந்து இவர் மட்டுமே தெரிவு செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ய)

# 20ஆவது திருத்தம் தொடர்பில் விக்கி இருவேறு நிலைப்பாடு

கொழும்பு, ஓக. 28
20ஆவது திருத்தச் சட்டவரைவை வடக்கு மாகாண சபை எதிர்க்கும் என்று மாகாணசபையில் தெரிவித்திருந்த முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டு மாகாணசபைகள் கலைக்கப்பட்டால், மாகாணங்களின் மேற்பார்வையில் அரசு அமைக்கப்பட வேண்டும் என்று கொழும்பு ஆங்கில ஊடகத்துக்குத் தெரிவித்துள்ளார்.

'ஒன்பது மாகாண சபைகளுக்கான தேர்தலை ஒரே நாளில் நடத்துவதற்கான 20ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்ட வரைவு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்தச் சட்டரைவு நிறைவேற்றப்பட்டால், அனைத்து மாகாணசபைகளுக்குமான தேர்தல் நடத்தும் வரை காலாவதியாகும் மாகாண சபைகளின் பதவிக்காலத்துக்குப் பின்னர், அங்கு மேற்பார்வை அரசு அமைக்கப்பட வேண்டும். கலைக்கப்பட்ட மாகாணசபைகளை தேர்தல் நடத்தும் வரையில் கொழும்பு அரசின் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதை அனுமதிக்க முடியாது. அது அதிகாரப்பகிர்வு கோட்பாட்டுக்கு எதிரானது. அத்தகைய சூழலில், குறிப்பாக, வடக்கு கிழக்கு மாகாண சபைகளின் நலன்களுக்குத் தீங்கு விளைவிக்கும் சட்டங்களை கொழும்பு அரசினால் வகுக்க முடியும்' என்று முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு மாகாணசபையின் கடந்த அமர்வில், வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், 20ஆவது திருத்தச் சட்ட வரைவை எதிர்ப்போம் என்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

# வாட்டிய வறட்சி நெல் உற்பத்தி மோசமான வீழ்ச்சி

## நெருக்கடியைச் சமாளிக்குமா இலங்கை ?

கொழும்பு, ஓக. 28
8 லட்சம் ஹெக்டேயரில் நெல் பயிரிடப்பட்டபோதும் அவற்றில் அரைவாசி 4 லட்சம் ஹெக்டேயர் கடும் வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் துமிந்த திசநாயக்க தெரிவித்தார். இது மிக மோசமான நிலைமை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் அரிசித் தேவையின் பெரும்பகுதி வடமேல், வடமத்தி மற்றும் வடக்கு மாகாணங்களில் பயிரிடப்படும் நெல் மூலமாகவே பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றது. கடந்த 40ஆண்டுகளில் இல்லாத அளவு வறட்சி நாட்டில் வாட்டி வதைக்கின்றது. நெல் உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளது. நாட்டின் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்த வெளிநாடுகளிலிருந்து அரிசி இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

மாதாந்தம் 2 லட்சம் தொன் அரிசி இலங்கைக்குத் தேவையாக இருக்கின்றது. இந்தியாவிலிருந்து வருடாந்தம் 3 லட்சம் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டு வருகின்றது. வறட்சி காரணமாக வெளிநாடுகளிலிருந்து அதிகளவான அரிசி இறக்குமதி செய்வதன் மூலமே, உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வறட்சி தொடர்ந்தால், 800 மில்லியன் அமெரிக்க டொலரை, அரிசி இறக்குமதி மற்றும் எரிபொருளுக்கு செலவிட வேண்டிய நிலை காணப்படுவதாக, இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

வறட்சி காரணமாக 1.3 மில்லியன் மக்கள் நாட்டில் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர்முகாமைத்துவ மைய நிலையம் தெரிவித்துள்ளது. நாட்டிலுள்ள 25 மாவட்டங்களில் 20 மாவட்டங்கள் வறட்சிப் பாதிப்புக்குள்ளான மாவட்டங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. (5)

# கட்டுப்பாடு நீக்கம் அரிசிவிலை கண்மூடித்தனமாக அதிகரிப்பு

கொழும்பு, ஓக. 28
கடந்த வாரம் அரிசிக்கான கட்டுப்பாட்டு விலைகள் நீக்கப்பட்டதையடுத்து வியாபாரிகள் தாம் நினைத்தவாறு விலைகளை உயர்த்தி வருவதாகப் பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

புறக்கோட்டை மொத்த வியாபாரத்தில் அரிசிக்கான மொத்த விற்பனை விலை 75 தொடக்கம் 92 ரூபாவாகவும், இறக்குமதி செய்யப்பட்ட நாடு, பொன்னி, வெள்ளை அரிசி முறையே 65, 75, 80 ரூபாவாகவும், உள்நாட்டு சிவப்பரிசி 78 ரூபாவாகவும் சம்பா 92 ரூபாவாகவும் உள்ளன.

விலைக்கட்டுப்பாடு நீக்கப்பட்டதையடுத்து அரிசியின் சில்லறை விலை 4 தொடக்கம் 5 ரூபாவரை அதிகரித்துள்ளது. இறக்குமதி செய்யப்பட்ட நாட்டரிசி 85 ரூபாவாகவும் சம்பா 95 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றன. தற்சமயம் 45 ஆயிரம் மெட்ரிக்தொன் அரிசி கையிருப்பில் உள்ளதாகவும் அது இந்த வாரத்தில் லக் சதொச விற்பனைக் கூடங்கள் மூலம் விநியோகிக்கப்படும் என்று நெல் சந்தைப்படுத்தும் சபையின் தலைவர் எம்.பி.திசாநாயக்க தெரிவித்திருக்கிறார். (5)

# நம்பிக்கையில்லா பிரேரணையின் பின்னணயில் யார்?

## அம்பலப்படுத்துகிறார் ராஜித

கொழும்பு, ஓக. 28
சிகரெட் விற்பனையைக் கட்டுப்படுத்த இல்லாதொழிக்க எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட பல்தேசிய நிறுவனங்களே, எனக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையின் பின்னணியில் இருக்கின்றன. இவ்வாறு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

மகிந்த அணியினரால் ராஜிதவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை சபாநாயகரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரேரணை தொடர்பில் ராஜித மேலும் தெரிவித்ததாவது:

சிகரெட் பாவனையால் நாம் பல உயிர்களைப் பறிகொடுக்கின்றோம். சிகரெட்டைக் கட்டுப்படுத்துவதற்காக அதன் விலையை அதிகரித்துள்ளோம். எதிர்காலத்தில் தனி ஒரு சிகரெட்டை விற்பனை செய்ய முடியாத நிலையை உருவாக்கவுள்ளோம். ஒரு சிகரெட்டுக்காக ஆயிரம் ரூபா வரையில் செலவு செய்ய வேண்டிய நிலை ஏற்படும். சிகரெட் பாவனை தானாகவே குறைந்து விடும். மக்கள் புற்றுநோயின் காரணமாக இறக்கும் வீதமும் குறைவடையும்.

புகையிலை மற்றும் மருந்துகளுக்கு எதிராக நாம் மேற்கொண்டுள்ள நடவடிக்கையால் பாதிக்கப்பட்டுள்ள நிறுவனங்களே, நம்பிக்கையில்லாப் பிரேரணைக்குப் பின்னணியில் இருக்கின்றன.

இந்த உலகில் இப்போது இரண்டு வகையிலான வியாபாரம் மூலமாகத்தான் அதிக இலாபம் பெற்றுக் கொள்ளலாம். ஆயுத வியாபாரம் மற்றையது மருந்து வியாபாரம். இந்த வியாபாரத்துக்காக மக்களைப் பாதிக்கும் எந்த நடவடிக்கையையும் ஏற்றுக் கொள்ள முடியாது - என்றார். (5-31)

# சீனாவின் தலையீடு இலங்கையில் அதிகரிப்பு

## கவலைப்படுகிறார் இந்திய இராணுவத் தளபதி

கொழும்பு, ஓக. 28
பிராந்திய பாதுகாப்புச் சூழலில் சீனா தனது தலையீட்டை தொடர்ந்தும் வலுப்படுத்தி வருவதாக இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் பிபின் ராவத் குற்றம்சாட்டியுள்ளார்.

இந்தியாவின் அயல் நாடுகளான இலங்கை, பாகிஸ்தான், மாலைதீவு, மியன்மார் போன்றவற்றுடனான பாதுகாப்பு மற்றும் பொருளாதார ஒத்துழைப்பை சீனா அதிகரித்து வருகிறது.

பாகிஸ்தானின் கட்டுப்பாட்டில் உள்ள காஷ்மீர் வழியாக, சீனா பாகிஸ்தான் பொருளாதார பாதை அமைக்கப்படுவது. இந்தியாவின் இறைமைக்கு சவாலாக உள்ளது என்றும் அவர் கூறியுள்ளார். (5)

மரண அறிவித்தல்



நாகலிங்கம் முத்துலிங்கம்
(நயினாதீவு)
(உரிமையாளர் - ஜீவமுத்து ரெக்ஸ் ஸ்ரைல் - வவுனியா)

நயினாதீவு, 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வவுனியா, தோணிக்கல், லக்சபானா வீதியை வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் முத்துலிங்கம் 25.08.2017 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், விசாலாட்சியின் அன்புக் கணவரும், லக்சகா (கனடா), சுபாஸ் (ஆசிரியர் - வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம்), சோபனா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுந்தரலிங்கம் (கனடா), சர்மிளா, கருணடாசன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான மாரிமுத்து, புவனேஸ்வரி, கற்பகம், சுப்பிரமணியம், சரஸ்வதி, நடராஜா, சீவரெத்தினம் மற்றும் மனோன்மணி மகேஸ்வரி ஆகியோரின் சகோதரரும், பொன்னம்மா, புவனேஸ்வரி, ராசலிங்கம், தனலெட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும், கனகம்மா, காலஞ்சென்றவர்களான கந்தையா, சோமசேகரம், சரஸ்வதி, வீரபாகு, பரமசாமி, முத்தையா, பொன்னுத்துரை, பத்மநாதன் மற்றும் சோதீஸ்வரி, புஸ்பராணி, இலட்சுமணன் ஆகியோரின் சகலனும், ஜனந்தி, மிருணா, வினிக்ஷன், விதுசிகன், சிஷானிகன், கேசவி, அபிலாஸ் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.08.2017) திங்கட்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தோணிக்கல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.133/02, சிறி லக்சுமி வீதி,
தோணிக்கல், வவுனியா.

தகவல்
சுபாஸ் (மகன்)

077 348 4469

# உள்ளூராட்சித் தேர்தல் ஐ.தே.க கூட்டாகவே களமிறங்கும்



கொழும்பு, ஓக. 28
உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சிறிய கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்தே ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய தேசிய முன்னணியாக யானைச் சின்னத்தில் போட்டியிடும். இவ்வாறு அந்தக் கட்சியின் மூத்த உறுப்பினரும் பிரதி அமைச்சருமான அஜித் பீ.பெரேரா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ் முற்போக்கு கூட்டணி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உட்பட சிறிய கட்சிகளுடன் ஒன்றிணைந்து ஐக்கிய தேசிய முன்னணியாக யானைச் சின்னத்தில் ஐக்கிய தேசியக் கட்சி போட்டியிடவுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்கான 50 சதவீத பணிகள் நிறைவு பெற்றுள்ளன - என்றார். (5,31)

## விஜயதாசவுக்கு செங்கம்பளம் விரிக்கிறது மகிந்த அணி

முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்சவை மகிந்த அணியில் இணைத்துக்கொள்வது தொடர்பில் பேச்சு நடத்தவுள்ளதாக மகிந்த அணியின் செயற்பாட்டாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான குமார வெல்கம தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

விஜயதாச ராஜபக்ச இலங்கையின் அரசியலில் மிக அவசியமான நபராகவுள்ளார். அவரின் தேவையை நாம் அறிந்து கொண்டுள்ளோம். அது தொடர்பில் அவருடன் பேச்சு நடத்தி அவரின் இணக்கத்துடன் கட்சியில் இணைத்துக்கொள்ள முயற்சிக்கின்றோம்.

இது குறித்து மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சகலருடனும் பேசிய பின்னர் அவர்களுடைய தீர்மானத்தையும் அறிந்து கொண்டு முன்னாள் நீதி அமைச்சருடன் பேசுவதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

இதேவேளை, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான துமிந்த திசாநாயக்க, முன்னாள் அமைச்சர் விஜயதாச ராஜபக்சவை கட்சிக்கு அழைப்பது கட்சியின் கொள்கைகளுக்கு முரணான செயற்பாடாக அமையும். கட்சியின் கொள்கைகளுக்கு முரணாக செயற்படும் நோக்கத்தில் நாம் இல்லை - என்றார். (5)

## சட்டமாஅதிபர் திணைக்களம் அரச தலைவர் மைத்திரி வசம் ?

கொழும்பு, ஓக. 28

சட்டமா அதிபர் திணைக்களத்தை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தனது நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ்கொண்டு வரவுள்ளார் என்று, கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பரபரப்பாகப் பேசப்பட்டதாக, ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

நீதி அமைச்சின் கீழேயே இதுவரை காலமும் சட்டமா அதிபர் திணைக்களம் இருந்து வருகிறது. முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச அமைச்சராக இருந்த போது, சட்டமா அதிபர் திணைக்களம் சரியாகச் செயற்படவில்லை என்று அரசில் அங்கம் வகிக்கும் ஐக்கிய தேசியக் கட்சியினர் கடுமையான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றனர்.

இவ்வாறானதொரு நிலையிலேயே, சட்டமா அதிபர் திணைக்களத்தை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தனது நேரடிக் கட்டுப்பாட்டில் கொண்டு வரலாம் என்று நம்பப்படுகிறது.

நீதி அமைச்சராக தலதா அத்துகோரள நியமிக்கப்பட்டுள்ள நிலையில், அவரின் அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்கள், துறைகள் பற்றிய வர்த்தமானி அறிவிப்பு இன்னமும் வெளியிடப்படவில்லை. அந்த வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்படும் போது, சட்டமாஅதிபர் திணைக்களத்தை அரச தலைவர் மைத்திரிபால தனது நேரடிக் கண்காணிப்பில் கொண்டு வரக் கூடும் என்றும் கூறப்படுகிறது. அரச தரப்பு இதனை இன்னமும் உறுதிப்படுத்தவில்லை. (5)

### ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 07 . 01 . 1928

மறைவு 24 . 06 . 2012

**திருமதி கனகம்மா சிவசம்பு**

திதி : பூர்வபக்க சப்தமி (28.08.2017)


எங்கள் அன்பின் உருவான அம்மாவே ! பாச நிழலாய்
எங்கள் குடும்பத்தின் விருட்சமாய் கருணை
வடிவமாய் வாழ்ந்தீர்கள் உங்களைப்
பிரிந்து 5 ஆண்டுகள் என்ன ஓராயிரம்
ஆண்டுகள் சென்றாலும் எங்கள் இதயத்தில்
என்றும் நீங்கள் ஜொலித்துக் கொண்டிருப்பீர்கள்

என்றும் திருவெண்காட்டுப் பிள்ளையார் அருளால்
உங்கள் ஆத்மாசாந்தி பெறட்டும்.

மண்டைதீவு - 06 குடும்பத்தினர்.

### 31ஆம் நாள் நினைவஞ்சலி

**அமரர் நாகர் ஆழ்வார்**



அன்னை மடியில் 30.11.1925

ஆண்டவன் அரவணைப்பில் 29.07.2017

நேற்றுவரை வாழ்ந்தவரே -
இன்று
நீண்ட தூரம் போனதெங்கே
தளராத மனத்தோடு
தரணியில் வாழ்ந்தவரே
நிஜமான உங்கள் வாழ்வு இன்று
நிழலாகி விடவே - என்றும்
இப் பூவுலகில் உங்கள் நாமம்
அழியாது மறையாது

குடும்பத்தினர்.
இடைக்குறிச்சி,
வரணி.

## அரசியல் அழுத்தங்களால் அரசசேவை தொடர்பில் பொதுமக்கள் அதிருப்தி

கொழும்பு, ஓக. 28

அரசியல் ரீதியான நியமனங்கள் மற்றும் அரசியல் ரீதியான தொழிற் சங்கங்கள் காரணமாக பொதுமக்கள் அரச பணிகள் தொடர்பில் அதிருப்திக்கு உள்ளாகியிருப்பதாக தேசிய தொழிற்சங்க சம்மேளனம் தெரிவித்துள்ளது.

அரச பணிகளை சுயாதீனமாக முன்னெடுத்துச் செல்வதற்காக அரசியல் தலையீட்டுடனான நியமனங்களை உடனடியாக நிறுத்த வேண்டும். பரீட்சைகள் ஊடாக மற்றும் பொலிஸ் அறிக்கைகளை உள்ளடக்கிய வகையில் அனைத்து ஆவணங்களையும் கவனத்திற் கொண்டு தொழில் வாய்ப்புகளை வழங்க வேண்டும்.

அரச பணியாளர்கள் சுயாதீனமாகச் செயற்பட இடம் வழங்க வேண்டும் என்று அந்தச் சங்கம் கோரியுள்ளது. (5)

### 19ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் பொன்னையா தியாகராசா**

(சாலைப்பரிசோதகர் C.T.B.கிளிநொச்சி,
பருத்தித்துறை சாலைகள்)

தோற்றம் 11.11.1939

மறைவு 28.08.1998

ஆண்டுகள் பத்தொன்பது ஆனது அப்பா ஆறவில்லை
எம்துயரம்
ஆயிரம் உறவுகள் இருந்தாலும் அப்பா உங்கள் உறவுபோல்
வருமா?
உங்களை மெழுகாக உருக்கி எங்களுக்காக வாழ்ந்த நீங்கள்
பாதியில் போனது ஏனோ?
உங்களது பாசத்தைக் காண ஏங்கி நிற்கின்றோம் நாம்இங்கு
எத்தனை ஜென்மங்கள் எடுத்தாலும் எமக்கு அப்பாவாக
மீண்டும் ஒருமுறை இவ்வுலகில் பிறந்திட வேண்டுகின்றோம்

அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனை
வேண்டுகின்றோம்.

47, பெனிக்கோமபுரா லேன்,
யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.

### 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 15 . 04 . 1933

மறைவு 29 . 07 . 2017

**பர்வதம் சங்கரப்பிள்ளை**



அம்மா! உமையிழந்து நாள்கள்
முப்பத்தொன்று ஆனதுவோ?
ஆசைமுகம் மறைந்து அவலம்தான் சூழ்ந்ததுவோ?
செம்மையிடும் சிரிப்பு செந்தளிப்பாம் பூவதனம்
சேர்ந்து மகிழ்ந்திருந்த செய்தியெல்லாம்
மறைந்திடுமோ?
உம்மைக் காக்க உழைத்தோம் முடியவில்லை
ஒவ்வோர் பொழுதுமிங்கு உம் நினைவில்
வாடுகின்றோம்
எம்வீட்டு நாயகியே! என்றென்றும்
நாம் மறவோம்
இறைவன் தாள் மலரில் நீரமரப் பிரார்த்திப்போம்
ஓம் சாந்தி!

687/6, மானிப்பாய் றோட்,
ஓட்டுமடம். குடும்பத்தினர்.
077 653 0915

## அரசுக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 28

ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்தில் வரி அறவிடும் தீர்மானத்தை அரசு உடனடியாக கைவிடவேண்டும். இல்லையெனின் அதற்கு எதிராக அடுத்த மாத முற்பகுதியில் நிதியமைச்சை முற்றுகையிட்டு போராட்டத்தை முன்னெடுப்போம் என்று ஒன்றிணைந்த நிறுவனங்களின் தொழிற்சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மருதானை சனசமூக நிலையத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அந்தச் சங்கத்தின் இணைப்பாளர் வசந்த சமரசிங்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (5)

# நெடுஞ்சாலை நிர்வாகம் தனியாரிடம்

## வழங்கும் முற்பணத்தில் வீதி அபிவிருத்தியாம்

கொழும்பு, ஓக. 28

தற்போது பாவனையிலுள்ள மூன்று அதிவேக நெடுஞ்சாலைகளின் நிர்வாகத்தை வெளிநாட்டு நிறுவனமொன்றுக்கு ஒப்படைக்க அரசு ஆலோசித்து வருவதாக நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பல வெளிநாட்டு நிறுவனங்கள் நெடுஞ்சாலைகளைக் கேட்டு விண்ணப்பம் செய்துள்ளன. அவற்றின் விலைமனுக்களின் அடிப்படையில் ஒரு நிறுவனம் தெரிவு செய்யப்படும். அந்த நிறுவனத்திடமிருந்து 25 வருடங்களுக்கான முற்பணம் பெறப்படும்.

அந்தப் பணம் ருவன்புர, தம்புள்ள, யாழ்ப்பாணம் அதிவேக நெடுஞ்சாலைகளை அமைக்கப் பயன்படுத்தப்படும்.

நெடுஞ்சாலைகளைப் பொறுப்பேற்கும் நிறுவனம் அந்த வீதிகளின் உட்பிரவேசிக்கும், வெளியேறும் வாயில்களில் மேலதிக நவீன உபகரணங்களைப் பொருத்தி நிர்வாகத்தை மேலும் அபிவிருத்தி செய்யும். பாதை அபிவிருத்தி அதிகாரசபையினர் தொடர்ந்தும் இந்த வீதிகளின் நிர்வாகத்தில் இணைந்திருப்பர்.

புதிய மூன்று நெடுஞ்சாலைகளையும் அமைக்க கிட்டத்தட்ட 440 பில்லியன் ரூபா தேவைப்படும். இந்தப் பெரிய தொகையை மொத்தமாகத் திறைசேரியிடமிருந்து எதிர்பார்க்க முடியாது என்பதாலேயே தற்போதுள்ள மூன்று வீதிகளையும் வெளிநாட்டு நிறுவனத்துக்கு ஒப்படைத்து முற்பணத்தைப் பெறத் தீர்மானிக்கப்பட்டுள்ளது - என்றார். (5)



# கூட்டு அரசே குற்றவாளிதான்

## ஜே.வி.பியின் குற்றச்சாட்டு இது

கொழும்பு, ஓக. 28

கூட்டு அரசில் ராஜித மாத்திரமா குற்றவாளி என்ற கேள்வியைக் கேட்டால் முழு அரசின் மீதும் விரல் நீட்டவேண்டிய நிலைமை உருவாகும். அமைச்சர் ராஜித சேனாரத்ன தனது கடமைகளைச் சரியாக முன்னெடுக்கவில்லை. தனிப்பட்ட சில நலன்களைக் கருத்திற் கொண்டு செயற்படுகின்றார். இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திசநாயக்க தெரிவித்தார்.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள மக்கள் விடுதலை முன்னணியின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பிலான சட்டம் கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டது. இது சனநாயக ரீதியிலான ஒரு வெற்றியாகவே எம்மால் கருதப்படுகின்றது.

2012ஆம் ஆண்டு முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்சவால் கொண்டுவரப்பட்ட உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் தொடர்பிலான சட்ட வரைவானது இரு பிரதான கட்சிகளைத் தவிர, ஏனைய அனைத்துக் கட்சிகளுக்கும் பெரிய பாதிப்பாகவே அமைந்திருந்தது. அப்போது தயாரிக்கப்பட்ட எல்லை நிர்ணயம்கூட ஒரு சில தொகுதி அமைப்பாளர்களின் வீட்டில் வைத்துத்தான் தயாரிக்கப்பட்டது. இதன் காரணத்தாலேயே நாம் இதற்கு கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்திருந்தோம். தற்போது நிறைவேற்றப்பட்டுள்ள புதிய சட்டம் மேற்கண்ட பல்வேறுபட்ட குறைகளை நிவர்த்தி செய்துள்ளதுடன், பெண் பிரதிநிதித்துவம், தொகுதிக்குப் பொறுப்புக்கூறும் பிரதிநிதி முறைமை, தேர்தல் செலவின்மை உள்ளிட்ட பல சிறந்த சரத்துக்களையும் உள்ளடக்கி வந்துள்ளமையானது அனைவரதும் வெற்றியாகவே கருதப்படுகின்றது. இனியும் காரணங்களைக் கூறி தேர்தலை தாமதப்படுத்திக் கொண்டிருக்காமல் டிசெம்பருக்குள் தேர்தலை நடத்தி சனநாயகத்தை நிலைநாட்டவேண்டும் - என்றார். (5)

**தளபாடங்கள் விற்பனைக்குண்டு**

பாவித்த நிலையில் உள்ள வீட்டுத் தளபாடங்கள் மேசை, கதிரை, கட்டில், குசன்செற், அலுமாரி ஆகியன கச்சேரி நல்லூர் வீதியில் உள்ள வீட்டில் விற்பனைக்குண்டு.

077 494 0523

(CS 7302) (14)

**வைத்தியம்**

தலைமுடி உதிர்தல், முள்ளந்தண்டுப் பிரச்சனை, சலரோகம், பாரிசவாதம், உடல் பருமன் குறைத்தல் அல்லது கூட்டுதல் (வயிறு, மார்பு, கை), ஆண்மை குறைபாடுகள், குழந்தையின்மை போன்றவற்றிற்கு சிகிச்சை வழங்கப்படும்.

தொடர்பு: Shan's Health Care
255, K.K.S. Road, Kokuvil.
T.P.:077 035 7307

**காயத்திரி திருமாங்கல்ய சேவை**
GAYATHRI MATRIMONY

ஞான வைரவர் கோயிலடி
உரும்பிராய் தெற்கு
Viber No:- 076 941 6424 /
T.P:-021 223 2222
உரும்பிராய்
E.mail: gayathri.matrimony.srilanka@gmail.com
F.B-Gayathri Matrimony.Srilanka.
Skype-Gayathri Matrimony.Srilanka.

# வன்புணர்வு முயற்சி; மருத்துவர்கள் கைது

கொழும்பு, ஓக. 28

வீதியில் சென்று கொண்டிருந்த பெண்ணை வன்புணர்வுக்கு உட்படுத்த முயற்சித்த கேகாலை மருத்துவமனையின் மருத்துவர்கள் இருவர் பிரதேச வாசிகளால் பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்ட பின்னர் கேகாலைப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கேகாலை நகரிலுள்ள ஹொட்டலொன்றின் முன்னால் கடந்த வெள்ளிக்கிழமை இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

இது தொடர்பில் பொலிஸார் தெரிவித்ததாவது:

தனது பிள்ளையைப் பிரத்தியேக வகுப்பிலிருந்து அழைத்துச் செல்வதற்காக வந்த பெண்ணை மதுபோதையிலிருந்த இவர்கள் கையைப் பிடித்து இழுத்துச் செல்ல முயன்றிருக்கிறார்கள். பெண்ணின் அவலக்குரலைக் கேட்டு அங்கு திரண்ட நகரவாசிகள் அவர்கள் இருவரையும் பிடித்து நையப்புடைத்தபின் எம்மிடம் ஒப்படைத்துள்ளனர்.

இவர்களில் ஒருவர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டார் எனவும் மற்றவரை கேகாலை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகவும் கேகாலை பொலிஸார் தெரிவித்தனர். (5)

**கட்டட நிர்மாணத் தொழிலாளர் தேவை**

யாழ்.திருநெல்வேலியில் இடம் பெறுகின்ற கட்டடமொன்றில் சீமெந்துக்கல் சுவர் கட்டுவதற்கு, பூச்சு வேலைக்கு, பெயின்டிங் வேலைக்கு, மாபிள் வேலைக்கு நன்கு அனுபவமும், திறமையுமுள்ள தொழிலாளர் தேவை.

077 347 8251

(CS-7303) (14)

**உற்சவகால அதிஸ்டலாப சீட்டிழுப்பின் முடிவுகள்**

யாழ் விழிப்புலனற்றோர் சங்கத்தினால் வருடாந்தம் நல்லூர் உற்சவகாலத்தை தொடர்ந்து நடத்தப்பட்டு வரும் அதிஸ்டலாப சீட்டிழுப்பு 2017 இற்கான வெற்றி இலக்கங்கள் முறையே

| | | |
|---|---|---|
| முதலாம் பரிசு இல | - | 38274 |
| 2ஆம் பரிசு இல | - | 21718 |
| 3 ஆம் பரிசு இல | - | 27722 |

**5 ஆறுதல் பரிசில்கள் இல**

1) 18058
2) 00689
3) 45767
4) 15137
5) 16405

குறிப்பு : பரிசில்களை ஆகஸ்ட் 28 ஆம் திகதி முதல் செப்டெம்பர் 30 ஆம் திகதிக்குள் காரியாலய நாள்களில் பெற்றுக் கொள்ளலாம்.

செயலாளர்.



**தெல்லிப்பழை**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**
**திருமஞ்சத்திருவிழா - 2017**

அம்பாள் அடியார்களே!
துர்க்கை அம்பாளின் திருமஞ்சத் திருவிழாவைத் தரிசித்து நல்லருள்பெறுவீராக.

காலம்:
ஆவணி 12 ஆம் நாள்
இன்று (28.08.2017) திங்கட்கிழமை
மாலை 6.00 மணி

திருவிழா உபயகாரர்கள்:
நிர்வாக சபை
ஸ்ரீதுர்க்கா தேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை.



**Yarl Beauty & Language's Skills College**
YBLSC

மகளிருக்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன!
30% OFF + சாறி பிளவ்ஸ் பயிற்சி இலவசம்
அழகுக்கலை
கேக் ஐசிங்
தையல்
SPECIAL OFFER
சனி, ஞாயிறு பிரிவுகள் 03.09.2017 அன்று 10.00 மணிக்கு
கிழமை நாள் பிரிவுகள் 04.09.2017 அன்று 10.00 மணிக்கு
பயிற்சிகள் அனைத்தும் செய்முறை விளக்கத்தோடு இடம்பெற்று நிறைவில் அங்கிகாரம் பெற்ற சான்றிதழ்கள் வழங்கப்படும்.
மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் அலுவலக நேரத்தில் வருகைதரவும்.
இல.17, 3ம் ஒழுங்கை, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(ராசி கலெக்சனுக்கு அருகில் உள்ள ஒழுங்கை)

# படையினரின் கோரிக்கைக்கு அரசு செவிசாய்க்கவேண்டும்

## கோரிக்கை விடுக்கிறார் மகிந்த ராஜபக்ச

கொழும்பு, ஓக. 28
படையினரின் கோரிக்கைகளைச் செயற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.
போரில் அங்கவீனமான படையினர் சிலரைத் தனது உத்தியோக பூர்வ இல்லத்தில் முன்னாள் அரச தலைவர் கடந்த வெள்ளிக்கிழமை சந்தித்திருந்தார்.
'அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன ஐக்கிய தேசியக் கட்சியின் தீர்மானங்களுக்கு அடிபணியாமல், அங்கவீனமான படையினர் குறித்து சிறப்புக்கவனத்தைச் செலுத்த வேண்டும்' என்று முன்னாள் அரச தலைவர் மகிந்த இதன் போது கூறி யுள்ளார். (5)

## பிணைமுறி விவகாரம்

# பேர்ப்பச்சுவல் நிறுவனம் ஆணைக்குழுவுக்கு தகவல்களை மறைக்கிறதா?

## கேள்வி எழுப்பியது சட்டமா அதிபர் திணைக்களம்

கொழும்பு, ஓக. 28
பேர்ப்பச்சுவல் ட்ரசரீஸின் கொடுக்கல் வாங்கலுடன் தொடர்புடைய அலைபேசி உரையாடல்களின் குரல்ப் பதிவுகள் காணாமற்போனமை தொடர்பில் அரச தலைவர் ஆணைக்குழுவில் கேள்வி எழுப்பபப்பட்டுள்ளது.
பிணைமுறி மோசடி தொடர்பில் அரச தலைவர் ஆணைக்குழு விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றது. பேர்ப்பச்சுவல் ட்ரசரீஸ் நிறுவனத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரி கசுன் பாலிசேன நேற்று முன்தினம் விசாரணைக்குழுவில் முன்னிலையாகியிருந்தார்.
பேர்ப்பச்சுவல் ட்ரசரீஸ் நிறுவனம் தமது முதலாவது திறைசேரி முறிகள் விற்பனையை ஊழியர் சேமலாப நிதியத்திற்கு 2015ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 27ஆம் திகதி ஏலமிட்டு, 2015ஆம் ஆண்டு ஜூன் 5ஆம் திகதி விற்பனையை மேற்கொண்டிருந்தது.
'இந்த விற்பனை நேரடியாக இடம்பெறவில்லை எனவும் தரகர் மூலமே இடம்பெற்றது. ஆவணத்துவத்தை துரிதப்படுத்தும் நடவடிக்கைகளில் தரகர் அவதானம் செலுத்தினார்' என்று பேர்ப்பச்சுவல் ட்ரசரீஸ் நிறுவனத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரி கசுன் பாலிசேன ஆணைக்குழு வில் தெரிவித்தார்.
பேர்ப்பச்சுவல் ட்ரசரீஸ் நிறுவனம் 2015ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5ஆம் திகதிக்கான உரையாடற் பதிவை இலக்க வரிசையின் பிரகாரம் ஏனைய உரையாடல் பதிவுடன் சமர்ப்பித்திருந்தது. இந்த விடயம் 4 ஆவது உரையாடல் பதிவில் வெளிப்படுத்தப்படுவதுடன், அந்த உரையாடல் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டிருந்த இறுவட்டில் காணப்படவில்லை. ஒப்பந்த உறுதிப்படுத்தல் தொடர்பிலான அலைபேசி உரையாடற் பதிவினை இனங்காண முடியாமை குறித்து சட்ட மா அதிபர் திணைக்களம் கேள்வி எழுப்பியிருந்தது.
கோரப்பட்ட அனைத்து குரல்ப் பதிவுகளும் வழங்கப்பட்டதாக இதற்கு முன்னர் ஆணைக்குழுவிற்கு கசுன் பாலி சேன தெரிவித்திருந்தார். எனினும், தற்போது இந்த விடயம் முரண்பாட்டைத் தோற்றுவித்துள்ளது. (5)

# இரண்டு பிள்ளைகளை வன்கொடுமைக்குள்ளாக்கிய 50வயது தந்தை கைது

## மட்டக்களப்பில் நடந்த துயரம்

கொழும்பு, ஓக. 28
6 மற்றும் 8 வயதான தனது மகள்களைப் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டில் 50 வயதான தந்தை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். எதிர்வரும் 8 ஆம் திகதி வரையில் அவர் விளக்கமறியலில் அடைக்கப்பட்டுள்ளார்.
மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்தச்சம்பவம் நடைபெற்றுள்ளது.
விசாரணைகளை முன்னெடுத்த காத்தான்குடிப் பொலிஸார் தெரிவித்ததாவது:
சிறுமிகளின் தாயும் தந்தையும் ஏற்கனவே பிரிந்து வாழ்கின்றனர். தந்தை மறுமணம் செய்துள்ள நிலையில் சிறுமிகள் தாயுடன் வசித்து வருகின்றனர். தந்தை தங்களை அழைத்துச் செல்லும் சந்தர்ப்பங்களில் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தியதாகச் சிறுமிகள் தாயிடம் தெரிவித்தனர். தாய் பொலிஸில் முறைப்பாடு செய்தார் என்று குறிப்பிட்டனர்.
தந்தையையும் சிறுமி களையும் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தி எதிர்வரும் 8ஆம் திகதி நீதிமன்றத்தில் அறிக்கை சமர்பிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்ட நீதிபதி எம்.கணேசராஜா, சந்தேக நபரான தந்தையை அன்று வரை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டுள்ளார். (5)

### பிறந்த தினம்



முன்னாள் எதிர்கட்சித் தலைவர் அமிர்தலிங்கத்தின் 90 ஆவது பிறந்ததினம் நேற்று முன்தினம் சனிக்கிழமை தமிழர் விடுதலைக் கூட்டணிக் காரியாலயத்தில் நடைபெற்றது. (5)

# கிழக்கிலும் காணி விடுவிப்பு வேண்டும்

## சுவாமிநாதனிடம் சிறிநேசன் கோரிக்கை

மட்டக்களப்பு, ஓக. 28
வடக்கு மாகாணத்தின் முல்லைத்தீவு மாவட்டத்தில் கேப்பாபிலவில் மக்களின் காணிகளை இராணுவத்தினரிடமிருந்து விடுவிப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளைப் போன்று கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்திலும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் தெரிவித்தார்.
மீள்குடியேற்ற மற்றும் மறுவாழ்வு அமைச்சினால் மட்டக்களப்பு முறக்கொட்டாஞ்சேனையில் போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அமைக்கப்பட்ட 78 வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. அதில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
முறக்கொட்டாஞ்சேனை தேவபுரம் பகுதியின் சொத்தான அரிசி ஆலை ஊடாக நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆயிரம் பேர் தொழில் வாய்ப்பு பெறக் கூடிய நிலமை காணப்பட்டது. அரிசி ஆலை இருந்த கட்டமைப்புக்கள் அனைத்தும் சிதைக்கப்பட்டுள்ளது. இதை மறுசீரமைத்து எமது மக்களுக்கு தொழில்வாய்ப்பு வழங்க வேண்டும்.
கும்புறுமூலையில் அமைக்கப்பட்ட அரச அச்சகத்தின் ஊடாகப் பிரதேசத்தில் பல தொழில்வாய்ப்புக்களை வழங்கியிருக்க முடியும். வாழைச்சேனை காகித ஆலை 16 கோடி ரூபாய் முதலீடு செய்து ஆரம்பத்தில் 600 பேருக்கு தொழில்வாய்ப்புக்களை ஏற்படுத்தக் கூடிய விடயம் பேசப்பட்டது. திடீரென அதில் ஒரு தேக்க நிலை காணப்பட்டது. அது தொடர்பாக அமைச்சர் கவனம் செலுத்த வேண்டும். இங்குள்ள இளைஞர்களுக்குத் தொழில் வாய்ப்பு ஏற்படுத்துவதன் மூலம் அவர்களை விரக்தி நிலையிலிருந்து விடுவிக்க முடியும்.
முறக்கொட்டாஞ்சேனை இராணுவ முகாம் விடுவிப்புத் தொடர்பாகப் பாதுகாப்பு அமைச்சில் கூட்டம் நடைபெற்றது. ஆறு மாதத்திற்குள் அதை விடுவிப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. தற்போது நான்கு மாதங்கள் முடிவடைந்துள்ளது. கேப்பாபிலவுப் பகுதியில் மக்களின் காணிகள் விடுவிப்புக்கு அமைச்சர் நடவடிக்கையெடுப்பது போல் மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதுகாப்புத் தரப்பினரின் வசமுள்ள காணிகள் விடுவிப்பதற்கு உதவிசெய்ய வேண்டும்.
மீள்குடியேற்ற அமைச்சரின் கரத்தைப் பலப்படுத்துவதன் மூலம் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் அழிவுக்குள்ளாக்கப்பட்ட கிராமங்கள் பிரதேசங்களை மீளக்கட்டியெழுப்பக்கூடிய கருமங்கள் அனைத்ததையும் செய்து முடிப்பார் என்று நம்புகிறோம் - என்றார். (5,46)

# ஓ.எல். சித்தியடையாத 4,500பேர் ஏ.எல்லுக்கு அனுமதி

புதிய கல்வி மறுசீரமைப்புப் திட்டத்திற்கு அமைவாகக் கடந்த ஆண்டில் சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடையாத 4 ஆயிரத்து 500 மாண வர்களுக்கு உயர்தரத்தில் கல்வியைத் தொடர்வதற்கான வாய்ப்புக் கிடைக்கவுள்ளது.
ஒக்ரோபர் மாதத்திருந்து மாணவர்களுக்கு இந்த வாய்ப்புக் கிடைக்கவுள்ளதாகக் கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.
இனங்காணப்பட்ட 43 பாடசாலைகளில் 26 தொழில்நுட்பம் சார்ந்த பாடநெறிகளைத்தொடர்வதற்கு மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வுள்ளதாகவும், அனைத்து மாணவர்களுக்கும் தரம் 13 வரை கட்டாயக்கல்வியை வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாகவும் கல்வியமைச்சு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)

# சட்டமா அதிபர் திணைக்களம் பக்கச்சார்பானது

## மருத்துவ அதிகாரிகள் சங்கமும் குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 28
சட்டமா அதிபர் திணைக்களம் பக்கச் சார்ப்பாகச் செயற்பட்டுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகளின் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.
சைட்டம் நெருக்கடி தொடர்பில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை சிறப்புக் கலந்துரையாடல் நடைபெற்றது. சந்திப்பின் பின்னர், அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலர் ஹரித அலுத்கே மேலும் தெரிவித்ததாவது:
சைட்டம் தொடர்பில் அரச தலைவருடன் கலந்துரையாடினோம். எமது நிலைப்பாடுகளை அரசுக்கு ஏற்கனவே அறிவித்தும் விட்டோம். அரசின் நிலைப்பாட்டைச் சட்டமா அதிபர் திணைக்களம் நீதிமன்றில் முன்வைக்கவில்லை என்று அரச தலைவரிடம் சுட்டிக்காட்டினோம் என்றார்.
சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு எதிராக அரசின் அமைச்சர்கள் குற்றம் சுமத்தி வருகின்ற நிலையிலேயே, அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் இவ்வாறு கூறியுள்ளது. (5)

# மகிந்த காலத்து பிணைமுறி மோசடி விரைவில்விசாரணை

கொழும்பு, ஓக. 28
பிணை முறி விவகாரம் தொடர்பில் விசாரணை நடத்தி வரும் அரச தலைவர் ஆணைக்குழுவின் விசாரணைகள் முடிவடைந்த பின்னர், மகிந்த ஆட்சிக் காலத்தில் நடந்த பிணை முறி மோசடிகள் குறித்து விசாரணை நடத்தப்படவுள்ளது.
மகிந்த ராஜபக்ச ஆட்சியில் 2011ஆம் ஆண்டு, 33 மில்லியன் யூரோ பெறுமதியான கிறீஸ் நாட்டின் பிணை முறிப்பத்திரங்களை இலங்கை மத்திய வங்கி 22.16 மில்லியன் யூரோக்களுக்குக் கொள்வனவு செய்திருந்தது. இந்தக் கொடுக்கல் வாங்கல்களில் மேற்கொள்ளப்பட்ட தலையீடுகள் மூலம் நிதி மோசடிகள் நடந்துள்ளது.
இலங்கைக்கு 2 ஆயிரத்து 100 மில்லியன் ரூபா இழப்பீடு ஏற்பட்டுள்ளது. நாட்டில் கையிருப்பில் இருந்த பணம் மற்றும் கடனாகப் பெற்ற பணமே கிறீஸ் பிணை முறிப்பத்திரங்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தன.
இதன் காரணமாக நாட்டின் நிதிக் கையிருப்பை நிலையாக வைத்திருக்க அடிக்கடி கடனைப் பெற்றமை மற்றும் அவசிய தேவைகளுக்கு கடனைப் பெற்றமை மூலமாக நாட்டுக்குப் பெரும் நிதி நிலைப் பாதிப்பு ஏற்பட்டது.
இதுதொடர்பிலேயே அரச தலைவர்கள் ஆணைக்குழுவிசாரணைநடத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)

# சட்டத்தரணிகள் சங்கத்துக்கே சவால் விடுக்கிறார் ராமநாயக்க

கொழும்பு, ஓக. 28
சட்டத்தரணிகள் சங்கத்தின் எந்த வழக்கையும் எதிர்கொள்வதற்குத் தயாராகவே இருக்கின்றேன். இவ்வாறு பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்தார்.
ஊழல் மிக்க சட்டத்தரணிகள், நீதிபதிகள் தொடர்பான விபரங்கள் தன்னிடம் இருப்பதாகப் பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்திருந்தார். இந்தக் கருத்தைக் கண்டித்த சட்டத்தரணிகள் சங்கம், பெயர்களை ப்பிரதி அமைச்சர் பகிரங்கப்படுத்தாவிடின் அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்று எச்சரித்திருந்தது.
இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ள தாகச் சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் யு.ஆர். டி.சில்வா தெரிவித்திருந்தார்.
இது தொடர்பில் கொழும்பு ஊடகம் பிரதி அமைச்சரிடம் கேட்ட போது அவர் மேலும் தெரிவித்ததாவது.
என்னிடம் போதியளவு சாட்சியங்கள் காணப்படுகின்றன. இதனால் வழக்கு விசாரணைகள் குறித்து அஞ்சப் போவதில்லை. வழக்கு தொடர்ந்தால் அதனை எதிர் கொள்ள முடியும் - என்றார். (5)

# ஐ.தே.கட்சிக்காகக் குரல் கொடுக்கிறது சுதந்திரக் கட்சி

## முறுகல் நிலை முடிவுக்கு வருகின்றதா?

கொழும்பு, ஓக. 28

அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை அவரின் அரசியல் பயணத்துக்கான ஓர் ஆசீர்வாதம் இவ்வாறு அமைச்சரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலருமான எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்துள்ளார்.



கடந்த சில மாதங்களாகக் கூட்டு அரசிலுள்ள ஐக்கிய தேசியக் கட்சிக்கும், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் மோதல்ப் போக்கு நிலவி வந்தது. இரு கட்சிகளும், கூட்டு அரசுக்கான உடன்படிக்கை நிறைவுக்கு வந்ததும் தனித் தனியே ஆட்சி அமைக்க வேண்டும் என்று பகிரங்கமாகக் கருத்துத் தெரிவித்து வந்தன.

இந்த நிலையிலேயே ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர் ராஜிதவுக்கு எதிராக முன்வைக்கப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராகச், சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க கருத்து வெளியிட்டுள்ளார்.

பேருவளையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்விலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது,

ராஜிதவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டால், அதற்கு எதிராகச் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் செயற்படுவார்கள்.

அமைச்சர் ராஜிதவுக்கு எதிராக கொண்டுவரவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையில், மாலபே நெவில் பிரணாந்து மருத்துவமனை மற்றும் சைட்டம் விவகாரம் என்பனவே உள்ளது. இந்த இரண்டு குற்றச்சாட்டுகளுக்கும் உரியவர்கள் முறைப்பாட்டைமுன்வைக்கும்மகிந்த அணியினரே - என்றார். (5)

# கூட்டுஅரசில் இருவருக்கு 'ஆப்புத்' தயார்!

கொழும்பு, ஓக. 28

கூட்டு அரசில் மேலும் இரண்டு அமைச்சர்களுக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானத்தை கொண்டுவர மகிந்த அணியினர் தீர்மானித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியை பிரதிநிதித்துவம் செய்யும் இரண்டு அமைச்சர்களுக்கு எதிராகவே பிரேரணை கொண்டு வரப்படவுள்ளது என்றும் இந்த அமைச்சர்கள் தொடர்பில் லஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு பிரிவினருக்கும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. நம்பிக்கையில்லாத் தீர்மானம் குறித்து விரைவில் இறுதித் தீர்மானம் எடுக்கப்பட்டு சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் ஒப்படைக்கப்படும் என்று மகிந்த அணியினர் தெரிவித்துள்ளனர். (5)

# மகாசங்கத்தினரை மதிப்பதில்லை கூட்டு அரசு

## குற்றச்சாட்டு முன்வைக்கிறது மகிந்த அணி

கொழும்பு, ஓக. 28

கூட்டு அரசு மகா சங்கத்தினரின் பேச்சைக் கொஞ்சம் கூடக் கேட்காது செயற்படுகின்றது என்று முன்னாள் முதலமைச்சரும் மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு மகா சங்கத்தினரின் ஆதரவு இல்லாமல் போயுள்ளது. சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர்கள் உள்ள இந்த அரசில் தேரர்களின் தலை வெடிக்க அடிக்கின்றனர். 68 தேரர்கள் அரசியல் பழிவாங்கலுக்காகச் சிறைப்படுத்தப்பட்டுள்ளனர்.

தேரர்கள் சொல்வதை இந்த அரசு கேட்கிறதா? அஸ்கிரிய மகாநாயக்க தேரர் விஜயதாச ராஜபக்சவை நீக்க வேண்டாம் எனக் கூறினார்.

அவர் திருடர் அல்லவெனவும், நாட்டுக்காக செயற்பட்ட ஒருவர். பௌத்த மதத்துக்காகக் குரல் கொடுத்த ஒருவர் எனவும் அஸ்கிரிய மகா நாயக்க தேரர் கூறினார். ஆனால் என்ன செய்தார்கள் ? இதுதான் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கையா? - என்றார். (5)

# வடக்குக் கடலில் தங்கக் கடத்தல்: 'நேவிக்கு' தொடர்பா ?

கொழும்பு, ஓக. 28

தங்கக் கடத்தல் சம்பவத்துடன் இலங்கை கடற்படையைச் சேர்ந்த சில உறுப்பினர்களுக்குத் தொடர்பு இருக்கின்றது என்று கடற்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

2014ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி 45 கிலோகிராம் தங்கத்தை இந்தியாவுக்கு கடத்திச் செல்ல முற்பட்ட இருவரைக் கடற்படையினர் கைது செய்திருந்தனர்.

அந்தத் தங்கம் வட பிராந்தியக் கடற்படைத் தளபதியின் உத்தரவின் அடிப்படையில் சுங்க திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டது. ரணதீர என்ற கப்பல் மூலம் வடபகுதி கடலில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போது இந்தத் தங்கம் கைப்பற்றப்பட்டது.

இந்த நடவடிக்கையில் பங்கேற்ற கடற்படையினர் மற்றும் சுங்க அதிகாரிகளுக்கு வழங்க வேண்டிய சிறப்புக் கொடுப்பனவுகள் இதுவரை வழங்கப்படவில்லை எனக் கூறப்படுகிறது.

தேடுதல் நடத்தப்பட்டமை சம்பந்தமாகக் கடற்படை வெளியிட்ட அறிக்கையில் காணப்பட்ட குறைப்பாடுகளே இதற்குக் காரணம் என்று தெரியவருகிறது.

இந்த தங்கக் கடத்தல் சம்பவத்துடன் இலங்கை கடற்படையைச் சேர்ந்த சில உறுப்பினர்களுக்குத் தொடர்பு இருப்பதாகச் சம்பவங்கள் சிலவற்றின் மூலம் தெளிவாகியுள்ளன என இது குறித்துத் தகவல் வெளியிட்ட கடற்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தத் தகவல்கள் ஏதோ ஒரு அழுத்தம் காரணமாகவே மறைக்கப்பட்டு வருவதாகக் கூறப்படுகின்றதுடன், வடபகுதிக் கடலில் மேற்கொள்ளப்படும் தங்கக் கடத்தலுடன் கடற்படையினரில் சிலருக்குத் தொடர்பு இருப்பதாகவும் கூறப்படுகின்றது. (5)

# அலைபேசியைக் களவாடியவர்கள் உடனடியாக நாடு கடத்தப்பட்டனர்

கொழும்பு, ஓக. 28

கட்டுநாயக்கப் பன்னாட்டு வானூர்தி நிலையத்தில் குடிவரவு அதிகாரியொருவரின் அலைபேசிகள் இரண்டைத் திருடிய இந்தியர்கள் இருவர் உடனடியாகவே நாடு கடத்தப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சென்னையில் இருந்து வானூர்தியில் இலங்கைக்கு வந்த இரண்டு இளைஞர்களே இவ்வாறு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். இளைஞர்கள் இருவரும் அடிக்கடி இலங்கை வந்து செல்லும்நபர்கள் என்றும் விசாரணையில் தெரிவிக்கப்படுகின்றது.

குடிவரவுப் பரிசோதனையின் போது அதிகாரியின் அலைபேசிகள் இரண்டைத் திருடிய இளைஞர்கள், அங்கிருந்து வேகமாக அகன்று சென்றுள்ளனர். அவர்கள் சுங்கப் பரிசோதனைப் பகுதிக்கு விரைந்து சென்றுள்ளனர். அலைபேசியைப் பறிகொடுத்த அதிகாரி மறைகாணி (சிசிரிவி) ஊடாக ஆராய்ந்துள்ளார். இளைஞர்களின் திருட்டு அம்பலமானதுடன் அவர்கள் சுங்கப் பரிசோதனைப் பகுதியில் நிற்பதையும் அவதானித்துள்ளார்.

உடனடியாக இரு இளைஞர்களையும் கைது செய்து அவர்களிடமிருந்து அலைபேசியை மீட்டெடுத்துள்ளனர். இந்தக் குற்றத்துக்காக இருவரும் நாடு கடத்தப்பட்டதுடன் அவர்களது பெயர்களைக் கறுப்புப் பட்டியலில் இணைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக், கட்டுநாயக்க பன்னாட்டு வானூர்தி நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பாதுகாப்பு மாநாடு

# இந்திய உயர்மட்டக்குழு இலங்கைக்கு வருகிறது

கொழும்பு, ஓக. 28

அமெரிக்கா, இந்தியா, ஈரான் உள்ளிட்ட 17 நாடுகள் பங்கு பற்றும் இந்து சமுத்திரப் பாதுகாப்பு மாநாடு எதிர்வரும் வியாழக்கிழமை அலரி மாளிகையில் இரண்டு நாள்கள் நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்கு இந்தியாவின் முன்னாள் அரச தலைவர் பிரணாப் முகர்ஜி, அயலுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ், ரயில்வே அமைச்சர் ஸ்ரீ சுரேஷ் பிரபு மற்றும் அயலுறவுச் செயலர் எஸ்.ஜெயசங்கர் உள்ளிட்ட உயர் மட்டக் குழுவினர் நாளை மறுதினம் புதன் கிழமை இலங்கை வரவுள்ளனர்.

சீனா பட்டுப்பாதைத் திட்டத்தைக் கடல் மற்றும் நிலம் மார்க்கமாக நட்பு நாடுகளின் ஒத்துழைப்புக்களுடன் மிக வேகமாக முன்னெடுத்து வருவதால் இந்தியாவின் ஆதிக்கத்திற்குச் சவாலாகவுள்ளது.

இந்து சமுத்திரத்தின் பாதுகாப்பு விடயத்தில் இந்தியா முன்பை விட தற்போது கூடிய அக்கறையுடன் செயற்பட்டு வருகிறது. சீனாவின் பட்டுப்பாதைத்திட்டத்தில் ஒன்றே அம்பாந்தோட்டைத் துறைமுக ஒப்பந்தம் என்று நன்கு அறிந்த இந்தியா இங்குள்ள நிலைமைகளைச் சரிசெய்வதற்கும் இந்து சமுத்திரத்தில் தனது ஆதிக்கத்தைத் தொடர்ந்து தக்கவைத்துக்கொளவதற்குமான நகர்வுகளை மேற்கொண்டு வருகிறது.

இந்தச் சூழ்நிலையில் இலங்கையில் இடம்பெறவுள்ள இந்து சமுத்திரப் பாதுகாப்பு மாநாட்டைத்தனக்குச் சார்பாக்கிக்கொள்ளும் முழு மூச்சுடனே இந்தியாவின் நடுவண் அரசின் இரண்டு அமைச்சர்கள் உட்பட உயர் மட்டக் குழுவை டில்லி இலங்கைக்கு அனுப்பி வைக்கவுள்ளது. பல முக்கிய நாடுகளின் பிரமுகர்களின் பங்களிப்புடன் கொழும்பில் இடம்பெறவுள்ள மாநாட்டில் கடற்பாதுகாப்புச் சார்ந்த பல விடயங்கள் குறித்துப் பொது இணக்கப்பாடுகள் எடுக்கப்படவுள்ளன. (5)

# மகிந்தவை சிறையில் அடைக்கவே சிறப்பு நீதிமன்றம்

நாட்டை அழித்த புலிகளைச் சிறையில் இருந்து விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ள அரசு நாட்டைப் புலிகளிடம் இருந்து காப்பாற்றிய மகிந்தவைச் சிறையில் அடைப்பதற்குச்சிறப்புநீதிமன்றத்தை அமைக்கவுள்ளது என்று மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் ஜானக வகும்புர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மகிந்த புலிகளை ஒழித்துப்போரை நிறைவு செய்தமையைப் பன்னாட்டுச் சமூகம் ஏற்கவில்லை. அந்த நாடுகள் பயங்கரவாதத்துக்கு எதிராகப் பேசினாலும் இலங்கை போன்ற நாடுகளில் பயங்கரவாத ச்செயற்பாடுகள் இருக்க வேண்டும் என்றே விரும்புகின்றன. இதனால்தான் போர்க் காலத்தில் போரை நிறுத்துமாறு அந்த நாடுகள் மகிந்தவுக்கு அழுத்தம் கொடுத்தன.

அவர் எந்தவோர் அழுத்தத்துக்கும் அடி பணியவில்லை. நாட்டைப் பற்றி மாத்திரமே சிந்தித்தார். நாடு பயங்கரவாதத்தில் இருந்து முழுமையாகச் சுதந்திரம் அடைய வேண்டும் என்று நினைத்தார். அதற்காகப் பாடுபட்டு இறுதியில் வெற்றியும் கண்டார்.

இந்த வெற்றியைப் பன்னாட்டுச் சமூகத்தால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. மகிந்தவை எப்படியாவது பழி வாங்க வேண்டும் என்று திட்டமிட்டன.

அந்தத் திட்டத்தின் அடிப்படையில் தான் மகிந்தவை அரச தலைவர் தேர்தலில் கவிழ்த்தனர். இன்று அவரை எப்படியாவது சிறைக்கு அனுப்ப வேண்டும் என்று துடிக்கின்றனர்.


மகிந்தவைச் சிறைக்கு அனுப்புவதற்கான சட்ட ஏற்பாடுகளைச் செய்யவில்லை என்ற காரணத்தால் தான் விஜயதாசவை இந்த அரசு அமைச்சுப் பதவியில் இருந்து விலக்கியது. நாட்டை அழித்த புலிகளைச் சிறையில் இருந்து விடுதலை செய்வதற்குஅரசுநடவடிக்கை எடுத்துள்ளது. அவ்வாறான 88 பேரை விடுதலை செய்வதற்கு அரசு திட்டமிட்டுள்ளது.

அதேவேளை, நாட்டைப் புலிகளிடம் இருந்து காப்பாற்றிய இந்த நாட்டுக்கு முழுமையான சுதந்திரத்தைப் பெற்றுக்கொடுத்த மகிந்தவைச் சிறையில் அடைப்பதற்குச்சிறப்புநீதிமன்றத்தைஅமைக்கவுள்ளது.

இதற்குப் பெயர்தான் நல்லாட்சி. புலிகளினதும் பன்னாட்டுச் சக்திகளினதும் தாளத்துக்கே இந்த அரசு ஆடுகின்றது - என்றார். (5,3)



## பீகார் வெள்ள இடரை பார்வையிட்டார் மோடி



புதுடெல்லி, ஒக. 28
பீகாரில் இடம்பெற்ற வெள்ளப்பெருக்கால் உயிரிழந்தவர்க
ளின் எண்ணிக்கை 448ஆக அதிகரித்துள்ள நிலையில்
வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட இடங்களை இந்தியத் தலைமை
அமைச்சர் மோடி நேற்றுமுன்தினம் பார்வையிட்டார்.
பீகார் மாநிலத்தின் வட பகுதியில் கடந்த இரு வாரத்துக்கும்
மேலாகப் பெய்து வரும் பலத்த மழை காரணமாக பல நதிக
ளில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. கிசன்கஞ்ச், சமஸ்திபூர்,
தர்பங்கா உள்பட 18 மாவட்டங்கள் மழை, வெள்ளத்தால்
முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. சுமார் ஒரு கோடியே 50
லட்சம் மக்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் பாதிக்கப்பட்
டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
வெள்ளத்தில் பரிதவித்துக் கொண்டிருந்த சுமார் 7 லட்சம் மக்
கள் தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.
வெள்ள இடரில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை
448ஆக அதிகரித்துள்ளது. மீட்புப் பணிகள் தொடர்ந்து நடை
பெற்று வருகின்றன. இந்த நிலையில் வெள்ள இடர் பாதித்த
இடங்களை இந்தியத் தலைமை அமைச்சர் மோடி நேற்றுமுன்
தினம் பார்வையிட்டார். (ம)

## வடகொரியச் சோதனைகள் தோல்வியில் முடிந்துள்ளன

### அமெரிக்கா சொல்கிறது

வொஷிங்டன், ஒக. 28
வடகொரிய இராணுவம், நேற்றுமுன்தினம் மூன்று ஏவுகணைச் சோத
னைகளை நடத்தியது என்றும், அவை அனைத்தும் தோல்வியில்
முடிந்தன என்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.
ஐ.நா. மற்றும் உலக நாடுகளின் கண்டனங்களை பொருட்படுத்தாமல்
வடகொரியா தொடர்ந்து ஏவுகணைகளைப் பரிசோதித்து வருகிறது.
இதனால், அமெரிக்காவுக்கும் வடகொரியாவுக்கும் இடையே போர்
மூளும் சூழல் உருவானது. தற்போது, போர்பதற்றம் சற்றே தணிந்துள்ள
நிலையில் வடகொரியா மீண்டும் ஏவுகணைச் சோதனையை நடத்தி
யுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.
வடகொரியாவின் கிட்டயராங் பகுதியில் இருந்து மூன்று ஏவுகணை
களை வடகொரியா சோதனை செய்ததாக அமெரிக்கா குறிப்பிட்டுள்ளது.
அந்த ஏவுகணைகளில் முதலாவது மற்றும் மூன்றாவது சோதனை
செய்யப்பட்ட ஏவுகணைகள், பறக்கத் தவறியதாவும், இரண்டாவதாகச்
சோதனை செய்யப்பட்ட ஏவுகணை, ஏவப்பட்ட சிறிது நேரத்தில்
வெடித்துச் சிதறியதாகவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது. (ம)



## சட்டசபையில் போதைப்பொருள் விவக

# தி.மு.கழகத்தினர் மீ பாய்கிறது நடவடிக்

### தற்காலிகமாகப் பதவிநீக்கம் செய்துவிட்டு ஆட்சியை தக்கவைக்க எடப்பாடி வியூகம்



சென்னை, ஒக. 28
சட்டசபையில் போதைப் பொருள
களை வைத்திருந்த குற்றச் சாட்டுக்
காக தி.மு. கழகத்தினர் மீது ஒழு
காற்று நடவடிக்கை எடுத்து ஆட்சி
யைத் தக்கவைக்க எடப்பாடி அரசு
முடிவெடுத்துள்ளது. இதனால்
தமிழகத்தில் பதற்றநிலை மீண்டும்
உச்சம் தொட்டுள்ளது.
கடந்த ஒரு மாதத்தின் முன்னர்
நடைபெற்ற சட்டசபைக் கூட்ட
மொன்றில், தி.மு. கழகத்தினர்
சிலர் தடைசெய்யப்பட்ட போதைப்
பொருட்களை வைத்துக்கொண்டு
“இவ்வாறான பொருட்கள் தமிழக
மெங்கும் பரவலாகக் கிடைக்கின்
றன. அ.தி.மு. கழகத்தின் ஆட்சி
யில் போதைப் பொருள் கலாசாரம்
மிகையாக அதிகரித்துள்ளது''
என்று வாதிட்டனர்.
சட்டசபையில் போதைப் பொருட்
களைக் கொண்டு சென்றால் அந்
தச் சட்டமன்ற உறுப்பினர்கள் மீது
ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்து
தற்காலிகமாக அவர்களை நீக்கி
விட முடியும். இதனால் போதைப்
பொருளை வைத்திருந்த சட்ட
மன்ற உறுப்பினர்கள் மீது ஒழுக்
காற்று நடவடிக்கை எடுக்க முடி
வெடுத்துள்ளார் எடப்பாடி பழனிச்
சாமி. சபாநாயகர் தனபாலும் அதற்
குரிய அறிகுறிகளை வெளிப்படுத்
தியுள்ளார்.
தி.மு. கழகத்தின் மீது எடுக்கப்பட
வுள்ள இந்த ஒழுகாற்று நடவடிக்
கையை எடப்பாடி தனது ஆட்சி
யைத் தக்கவைக்க மேற்கொண்
டுள்ள வியூகமாகவும் கொள்ளமுடி
யும். தமிழக சட்டசபை மொத்தம்
234 சட்டமன்ற உறுப்பினர்க
ளைக் கொண்டது. 117 சட்டமன்ற
உறுப்பினர்களின் ஆதரவு இருந்
தால் ஆட்சியைப் பிடிக்க முடியும்.
தி.மு.கவுக்கு தற்போது 89 சட்ட
மன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.
தினகரனின் பக்கமாக 21 சட்ட
மன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.
காங்கிரஸ் கட்சிக்கு 8 சட்டமன்ற
உறுப்பினர்கள் உள்ளனர்.
தி.மு.க. ஆதரவு பெற்ற இந்தியன்
யூனியன் முஸ்லிம் லீக் கட்சிக்கு
ஒரு சட்டமன்ற உறுப்பினர் உள்
ளார். மொத்தத்தில் 119 சட்டமன்ற
உறுப்பினர்கள் எடப்பாடி அரசுக்கு
எதிராக உள்ளனர். எடப்பாடிக்கு
ஆதரவாக 115 சட்டமன்ற உறுப்பி
னர்களே உள்ளனர். எனவே
பெரும்பான்மைப் பலத்தை நிரூ
பிக்கக்கோரி எதிர்கட்சிகள் போர்க்
கொடி தூக்கினால் ஆட்சி நிச்சயம்
கவிழும்.
இதனால் ஒழுக்காற்று நடவ
டிக்கை என்றதன் அடிப்படையில்
சில சட்டமன்ற உறுப்பினர்களை
பதவி நீக்கம் செய்துவிட்டால் ஆட்
சியைத் தக்கவைக்க முடியும்.
இதற்காகவே இந்தத் திடீர் நடவ
டிக்கை என்றும் எடுத்துக் கொள்ள
லாம்.
எதிர்கட்சித் தலைவரான ஸ்டாலி
னும் இவ்வாறான ஓர் கருத்தையே
குறிப்பிடுகிறார். “போதைப்பொருள்
விவகாரம்
குள் உரின
கூட்டி நடவ
வரவேற்பே
கள் கழித்து
வைக் கூட்ட
என்ன என்
தெரிகிறது.
வைத்து 10
பெரும்பான்
கொல்லை
வழியை
தக்கவைத்
கருதுகின்ற
வதில்லை"
தெரிவித்தா

## தலை துண்டிக்கப்பட்ட நிலையில் 500 சடலங்கள் ஈராக்கில் மீட்பு

பக்தாத், ஒக. 28
ஈராக்கில் இரண்டு புதைகுழிகளில் தலைதுண்
டிக்கப்பட்ட நிலையில் 500 சடலங்கள் மீட்கப்
பட்டுள்ளன. ஈராக்கில் கடந்த 2014ஆம் ஆண்டு
ஐ.எஸ்.ஐ. எஸ். அமைப்பின் ஆதிக்கம் ஆரம்ப
மானது. அந்த அமைப்பின் பிடியில் ஈராக்கின்
இரண்டாவது நகரமான மோசூல் அகப்பட்டது.
இது இந்த வருடத்தின் ஆரம்பத்திலேயே திரும்
பக் கைப்பற்றப்பட்டது. அங்கு தற்போது பல்வேறு
சோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன.
அவ்வாறு நடத்தப்பட்ட சோதனையொன்றில்
இரண்டு மிகப்பெரும் புதைகுழிகளில் தலை
துண்டிக்கப்பட்ட நிலையில் 500 சடலங்கள்
கண்டெடுக்கப்பட்டுள்ளன என்று பன்னாட்டு
ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)



பிரேசிலின் அமேசானியா மாநிலத்தின் தென்பகுதியில்
பகுதி எரிந்து சாம்பராகியுள்ளது. தீயைக் கட்டுக்குள்
வானூர்களும், 30 தீயணைப்பு வாகனங்களும் தீயைக்

வகாரம்

மீது
கை

# மணிக்கு 251 கிலோமீற்றர் வேகத்தில் டெக்சாஸைத் தாக்கியது புயல்



வொஷிங்டன், ஒக. 28
மணிக்கு 251 கிலோ மீற்றர் வேகத்தில் அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலத்தை புயல் தாக்கியுள்ளது. இந்தப் புயலுக்கு 'ஹஸ்லே' என்று பெயரிடப்பட்டுள்ளது.

மெக்சிக்கோ வளைகுடாப் பகுதியில் இந்தப் புயல் உருவாகியது. நேற்றுமுன்தினம் டெக்சாஸ் மாநிலத்தில் கரையைக் கடந்து சென்றது. இதனால் கடலின் நீர்மட்டம் வழக்கத்தைவிட 12 அடி உயர்ந்துள்ளது. டெக்சாஸ் தென் கடலோர பகுதியில் பள்ளிகளுக்கு விடுமுறை விடப்பட்டன. தாழ்வான பகுதிகளில் வாழும் மக்கள் வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான பகுதிகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இந்தப் புயல் நேற்று முன்தினம் கரையைக் கடக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. புயல் கரையைக் கடக்கும் போது மணிக்கு 201 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசும் என்று கணக்கிடப்பட்ட போதிலும் அதைவிட அதிகமாக மணிக்கு 231 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசியது. மரங்கள் முறிந்து வீதிகளில் விழுந்ததால் போக்குவரத்து மிகையாகப் பாதிக்கப்பட்டது. மின்கம்பங்கள் அடியுடன் முறிந்து மண்ணில் சாய்ந்தன. இதனால் பல இடங்களில் மின்சாரம் தடைப்பட்டது. சுமார் 3 லட்சம் வீடுகள் மின்சாரம் இல்லாமல் இருளில் மூழ்கின. ஏகப்பட்ட கால்நடைகள் உயிரிழந்துள்ளன. மனிதர்களின் உயிரிழப்புத் தொடர்பில் எவ்வித உத்தியோகபூர்வத் தகவலும் வெளிவரவில்லை. (ம)



...விகாரம் நடந்த 10 தினங்க ளுக் ...ள் உரிமை மீறல் குழுவைக் ...ட்டி நடவடிக்கை எடுத்திருந்தால் ...ரவேற்போம். ஆனால், 40 நாட் ...ள் கழித்து உரிமை மீறல் குழு ...வைக் கூட்ட வேண்டிய அவசியம் ...ன்ன என்பது மிகத் தெளிவாக ...தரிகிறது. இதைக் காரணமாக ...வைத்து 10 பேரை நீக்கி விட்டால் ...பருமம்பான்மையை நிரூபித்து, ...கால்லைப்புறமாக குறுக்கு ...ழியை கையாண்டு ஆட்சியை ...க்கவைத்துக் கொள்ளலாம் என ...ருதுகின்றனர். இது நடக்கப்போ ...தில்லை" என ஸ்டாலின் மேலும் ...தரிவித்தார். (ம)

## சட்டசபையை கூட்டவேண்டும்; தி.மு. கழகம் ஆளுநரிடம் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், ஒக. 28
தமிழக ஆளுநர் வித்யாசாகர் ராவை நேற்றுச் சந்தித்த தி.மு. கழகத்தினர் சட்டசபையைக் கூட்டி பெரும்பான்மை பலத்தை நிரூபிக்க உத்தரவிட வேண்டும் என்று வலியுறுத்தினர்.

நேற்றுக் காலை 10.30 மணியளவில் ஆளுநர் மாளிகையில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது. தி.மு. கழகத்தின் மட்டுமல்லாது, காங்கிரஸ், இந்திய முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகளைச் சேர்ந்தோரும் சென்று ஆளுநரைச் சந்தித்தனர்.

"எடப்பாடி அரசு தனது பெரும்பான்மையை இழந்துள்ளது. எனவே எடப்பாடி அரசு தனது பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும்' என்று அவர்கள் ஆளுநரிடம் வலியுறுத்தினர். (ம)







# ஜமுனா நதியில் இறங்கியபடி தமிழக விவசாயிகள் போராட்டம்

சென்னை, ஒக. 28
பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழக விவசாயிகள் இந்தியத் தலைநகர் டெல்லியில் தொடர்ந்து போராட்டத்தை நடத்தி வருகின்றனர். சுமார் 40 நாள்கள் முடிந்துவிட்ட போதிலும் அவர்களின் போராட்டம் தொடர்ந்து வருகிறது. பருவ மழை பொய்த்ததால், விவசாயிகள் பெற்றுள்ள பயிர்க்கடன் அனைத்தையும் தள்ளுபடி செய்ய வேண்டும், வரட்சி நிவாரணம் வழங்க வேண்டும், கடன் சுமையால் உயிழந்த விவசாயிகளின் குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும், காவிரி நதிநீர் பங்கீட்டை முழுமையாக மேற்கொள்ள வேண்டும். அதைக் கண்காணிக்க தனி வாரியம் அமைக்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி இந்தியத் தலைநகர் டெல்லியில் தமிழக விவசாயிகள் தொடர்ந்து போராட்டங்களை நடத்தி வருகின்றனர். சுமார் நாற்பது நாள்கள் கடந்துள்ளது அவர்களின் போராட்டம். இந்தக் கோரிக்கைகளுக்கு முடிவு காணப்படாவிட்டால் போராட்டம் தொடரும் என்று விவசாயிகள் அறிவித்துள்ளனர். இலைகளை கட்டிக் கொள்தல், ஒப்பாரி வைத்தல், யோகா செய்தல் உள்ளிட்ட பல்வேறு விதங்களில் போராட்டம் நடத்திய விவசாயிகள் நேற்றுமுன்தினம் மண்ணுக்குள் தம்மைப் புதைத்துக் கொண்டும், நேற்று ஜமுனா நதியில் இறங்கியும் போராட்டம் நடத்தினர். (ம)



...ன்பகுதியில் மிகப்பெரும் காட்டுத் தீ ஏற்பட்டுள்ளது. பல்லாயிரக் கணக்கான ஹெக்ரயர் காட்டுப் ...ட்டுக்குள் கொண்டு வருவதற்கு கடும் முனைப்பு மேற்கொள்ளப்படுகிறது. சுமார் 20 உலங்கு ...ும் தீயைக் கட்டுப்படுத்தக் களத்தில் இறக்கப்பட்டுள்ளன. (ம)

# ஆப்கானில் தற்கொலைத் தாக்குதல் உயிரிழப்பு 30ஆக அதிகரித்துள்ளது

காபுல், ஒக. 28
ஆப்கானிஸ்தானின் தலைநகரான காபுலில் உள்ள சியா மசூதிக்குள் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 30ஆக அதிகரித்துள்ளது.

காபுல் நகரின் மையப்பகுதியில் சியா பிரிவைச் சேர்ந்த முஸ்லிம்கள் தொழுகை நடத்தும் காலா நஜாரா மசூதி உள்ளது. நேற்று முன்தினம் தொழுகைக்காக ஏராளமானவர்கள் திரண்டிருந்த போது, தற்கொலைத்தாரியொருவன் நடத்திய தாக்குதலிலேயே 30 பேர் உயிரிழந்தனர். தலிபன் அமைப்பு தாக்குதலை நடத்தியிருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் தலிபன் அமைப்பு ஆதிக்கம் செலுத்தி வருகிறது. நீண்டகாலமாக இந்தப்போர் நடைபெற்று வருகிறது. எனினும் தலிபன் அமைப்பை மழுமையாகக் கட்டுப்படுத்த முடியவில்லை.

தலிபன்களை ஒடுக்க அமெரிக்கா களமிறங்கிய போதிலும் அது சாத்தியப்படவில்லை. இதனால் அங்கு முகாமிட்டிருக்கும் அமெரிக்கச் சிப்பாய்களின் எண்ணிக்கையை அதிகரித்துள்ளார் ட்ரம்ப். இதற்கு தலிபன் மைப்பு கண்டனம் தெரிவித்தது. "ஆப்கானிஸ்தான் விரைவில் சுடுகாடாகும்" என்று எச்சரித்தது. இந்தப் பின்னணியில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)



உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



## முதலமைச்சர் தெளிவுபடுத்துவாரா?

கோவலனுக்கு அநீதி இழைத்த பாண்டிய அரசனுக்கு முன்னால் தன் சிலம்புடன் எழுந்து நின்ற கண்ணகியைப் போன்று தன் கணவன் மீது சுமத்தப்பட்ட பழிக்காக வெகுண்டு எழுந்திருக்கிறார் ஒரு பெண். புளொட் அமைப்பின் உறுப்பினரும் சுட்டுக்கொல்லப்பட்டவருமான ஊத்தை பவான் எனப்படும் கந்தையா செல்வராசாவின் விதவை மனைவி.

போர்க் காலங்களில் புளொட் அமைப்பு இராணுவத்துடன் சேர்ந்தியங்கியது என்பதும் வவுனியாவில் கடும் அட்டூழியங்கள் செய்தது என்பதும் ஒன்றும் இரகசியங்கள் அல்ல. கொழும்பு அரச இராணுவத்தின் துணைப் படையாக அது இயங்கியது என்பதும் எல்லோருக்கும் தெரிந்த ஒன்றுதான்.

அந்த அமைப்பின் இராணுவத் தளபதியாக விளங்கியவரான மாணிக்கதாசன் ஒருகாலத்தில் மிகக் கொடூரமானவராகக் கணிக்கப்பட்டார். புளொட் அமைப்பின் யாழ். மாவட்டப் பொறுப்பாளராக இருந்த ஒருவர் யாழ்ப்பாணத்தில் கொல்லப்பட்டபோது அவரைக் கொன்றவர்களுக்கு அவரை அடையாளம் காட்டினார் என்று கருதப்பட்ட ஒரு இளைஞரின் தலை வெட்டப்பட்டு யாழ். நகரில் போடப்பட்ட பயங்கரம்கூட நடந்திருக்கிறது.

மாணிக்கதாசனைப் பார்த்து கட்சிக்குள் இருந்தவர்களே அச்சப்படும் அளவுக்குக்கூட நிலமைகள் இருந்தன. கடைசியில் அவரது அலுவலகத்தின் உள்ளே வெடித்த கிளைமோர் குண்டுக்கு அவர் இரையானார். அதுவும்கூட உட்கட்சி வேலைதான் என்கிற குற்றச்சாட்டும் உண்டு.

எனவே அந்த அமைப்பில் இருந்தவரான ஊத்தை பவான் புனிதமானவர் என்றோ குற்றங்கள் எதிலும் தொடர்புபடாதவர் என்றோ எழுந்தமானமாக நாம் சொல்லிவிட முடியாது. அது பற்றி ஒரு நீதியான விசாரணையின் முடிவுதான் சொல்லவேண்டும். ஆனால், முதலமைச்சர் சாட்டிய குற்றச்சாட்டின் மீது அவர் முன்வைத்த நீதியின் மீது நின்றுகொண்டு ஊத்தை பவானின் மனைவி கேட்கும் கேள்வி நியாயமானதே.

புளொட் அமைப்பின் மற்றொரு உறுப்பினரான தூள் பவான் எனப்படும் கந்தையா சிவநேசனுக்கு வடக்கு மாகாண அமைச்சர் பதவியை வழங்க முடியாது என்று முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்திருந்தார். பிரபல பத்திரிகையாளரும் சுட்டுக்கொல்லப்பட்டவருமான தராக்கி சிவராமின் கொலையுடன் தொடர்புபட்டார் என்று குற்றச்சாட்டுத் தெரிவிக்கப்படுவதன் காரணமாகவே அவருக்கு அமைச்சுப் பதவியைக் கொடுக்க முடியாது என்று தூள் பவானுக்கு எழுதிய கடிதத்தில் முதலமைச்சர் சுட்டிக்காட்டியிருந்தார்.

என்றாலும் அண்மையில் அமைச்சரவை மாற்றத்தின்போது தூள் பவானுக்கு விவசாய அமைச்சர் பதவி வழங்கப்பட்டது. கொலைக் குற்றத்தில் தொடர்புபட்டவர் என்று கூறி முன்னர் அவருக்கு அமைச்சுப் பதவி வழங்காது நிராகரித்தீர்களே என்று முதலமைச்சரிடம் கேட்டபோது, சம்பந்தப்பட்டவர் தூள் பவான் அல்லர் ஊத்தை பவானே என்று முதலமைச்சர் பதிலிறுத்தார்.

முதலமைச்சர் நீதியரசராக இருந்தவர். அவருக்குத் தெரியாத நீதியும் நீதி முறைமையும் சட்டங்களும் இருக்க முடியாது. அப்படி நாலும் தெரிந்த நேர்மையான மனிதர் என்பதற்காகவே அவர் ஓர் அரசியல் தலைவராகவும் மாற்றப்பட்டார். ஆகவே தூள் பவான் மீது குற்றம் சுமத்தியதற்கும் அவரை அந்தக் குற்றத்தில் இருந்து விடுவித்ததற்கும் மற்றொரு நபர் மீது அந்தக் குற்றத்தைச்சாட்டியதற்கும் முதலமைச்சருக்கு ஒரு நீதிப் பொறிமுறை இருந்தே இருக்கும்.

ஒரு பொதுமகனாக இருந்து பார்க்கும்போது, யாரோ தூள்பவான் மீது அந்தக் குற்றச்சாட்டை சுமத்தி முன்னாள் நீதியரசருக்கு அறிவித்தார்கள், அந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பில் தூள் பவான் தான் இல்லை என்று விளக்கமளித்தார், எனவே அவரைக் குற்றச்சாட்டில் இருந்து விடுவித்தார் முதலமைச்சர் என்றே அந்த நீதிப் பொறிமுறையைப் புரிந்துகொள்ள முடியும்.

ஆனால் பிரச்சினையே அங்கேதான் ஆரம்பமாகிறது. தூள்பவானைக் குற்றச்சாட்டில் இருந்து விடுவிக்க அதேபோன்ற பெயரைக் கொண்ட இன்னொருவரே அந்தக் குற்றச்சாட்டுக்கு உரியவர்கள் என்ற முன்னாள் நீதியரசரிடம் சொல்லிவிட்டார்கள். வழக்கம்போல அவரும் அதனை நம்பி பகிரங்கப்படுத்திவிட்டார். ஊத்தை பவான் இறந்துவிட்டார் என்பதால் இப்போது அவரது மனைவி களத்திற்கு வந்து தனது கணவருக்கும் அந்தக் கொலைக்கும் எந்தச்சம்பந்தமும் இல்லை என்கிறார். அதாவது பதவிக்காக இலகுவாக ஆள்மாறாட்டம் செய்து ஏமாற்றிவிட்டார்கள் என்கிறார்.

ஊத்தை பவானின் மனைவியும் புளொட் இயக்கத்தில் இருந்தவர் என்பதால் அவரது கணவரின் நடத்தை குறித்து அவர் அறிந்து வைத்திருப்பார் என்று நம்பலாம். துணிந்து பகிரங்கமாகத் தன் கணவர் மீதான குற்றச்சாட்டை அவர் மறுக்கிறார் என்கிறபோது அவரது பக்கநியாயமும் கவனத்தில் கொள்ளப்படவேண்டியதே.

அதிலும் முதலமைச்சரின் நீதிப் பொறிமுறையின்படி, அதாவது ஒருவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டு அவர் அதனை மறுத்துவிட்டால் அல்லது பழியை வேறு ஒருவர் மீது சாட்டிவிட்டால் அவர் குற்றச்சாட்டில் இருந்து விடுவிக்கப்பட்டுவிடுவார் என்கிற நியாயத்தின் பேரால் பார்த்தால் ஊத்தை பவானும் இப்போது அந்தக் குற்றச்சாட்டில் இருந்து விடுவிக்கப்படவேண்டும்.

அந்த நீதியைத்தான் கேட்கிறார் ஊத்தை பவானின் மனைவி. கண்ணகியை மாதிரி நீதிகேட்டு அவர் முதலமைச்சர் முன் நிற்கிறார். சி.வி.விக்னேஸ்வரன் இப்போது இந்தவிடயத்தை தெளிவுபடுத்துவாரா? முதலமைச்சர் சொல்வது உண்மையா? ஊத்தை பவானின் மனைவி சொல்வது உண்மையா? மக்கள் குழம்பிப் போயிருக்கிறார்கள். முதலமைச்சர்தான் நீதி சொல்லவேண்டும்.

# சீனாவின் பொறிக்குள் இலங்கை



ஆங்கில வழிமூலம்:
தடிப்ளோமற்
தமிழில்: நித்தியபாரதி

அண்மையில் இலங்கை அரசு சீன அரசுக்குச் சொந்தமான சைனா மேர்ச்சன்ஸ் போர்ட் ஹோல்டிங்ஸ் (China Merchants Port Holdings Company Limited) நிறுவனத்துடன் அம்பாந்தோட்டைத் துறைமுகம் தொடர்பான சலுகை ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டது. இந்த உடன்படிக்கையின் பிரகாரம், அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் 70 சதவீத உரிமை குறித்த சீன நிறுவனத்துக்கு வழங்கப்படுவதுடன், இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு மீதிப் பங்கு உரிமையாக வழங்கப்படுகிறது.

### குவிந்துள்ளன சர்ச்சைகள்

அம்பாந்தோட்டைத்துறைமுக உடன்படிக்கையானது பல்வேறு சர்ச்சைகளை உருவாக்கியுள்ளது. இலங்கை அரசு தன் மீதான கடன்சுமையைக் குறைப்பதற்கு அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் ஒரு பகுதியை குத்தகைக்கு வழங்குவதை மட்டுமே சிறந்த தெரிவாகக் கொண்டுள்ளது.

தற்போது சிறிலங்கா மிகையான கடன் சுமைக்குள் சிக்கித் தவிக்கின்றது. இலங்கை நடுத்தரவருமானநாடாகத்தன்னை உயர்த்திக்கொண்டுள்ள அதே வேளையில், இலங்கை அரசு பெற்றுக் கொண்ட சலுகைக் கடனானது தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் இலங்கை அரசு வர்த்தகக் கடனைப் பெற்றுக்கொள்ளவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது.

இதற்கும் அப்பால், சீனா தனது எக்சிம் வங்கியால் இலங்கைக்கு உயர் வட்டி வீதத்தில் கடன் வழங்கியுள்ளது. இதற்கான நிதியானது வர்த்தக வட்டி விகிதத்தில் இறையாண்மைப் பத்திரத்தின் ஊடாகத் திரட்டப்பட்டது.

இதன் விளைவாக, கடந்த பத்து ஆண்டுகளாக இலங்கையின் வெளிக் கடனின் அளவானது வியத்தகு அளவில் மாறியுள்ளது. 2006ஆம் ஆண்டில் இலங்கை பெற்றுக் கொண்ட வெளியகக்கடனின் 6 சதவீதம் மட்டுமே வர்த்தகக் கடனாகக் காணப்பட்டது. ஆனால் 2012ஆம் ஆண்டில் இது 50 சதவீதமாக அதிகரித்தது. குறிப்பாக இதற்கான வட்டிவீதம் மிகவும் உயர்வாகக் காணப்படுகிறது. இந்தக்கடன்சுமையானது, இலங்கையைப் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது. 2006ஆம் ஆண்டில் இலங்கையின் வெளியகக்கடன் 10.6 பில்லியன் டொலராகும். கடந்த ஒரு பத்தாண்டுக்குள் வெளியகக் கடன் 140 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. 2016ஆம் ஆண்டின் இறுதியில், இலங்கையின் வெளியகக் கடன் 25.3 பில்லியன் டொலராக அதிகரித்தது. இது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 34 சதவீதமாகும்.

இலங்கையில் பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்தக்கடன் தொகையில் 13 சதவீதம் அதாவது 3.3 பில்லியன் டொலர் சீனாவிடமிருந்து பெறப்பட்டதாகும். இதில் அதிகளவான கடன் கடந்த பத்தாண்டு காலத்துள் பெறப்பட்டதாகும்.

இலங்கை சீனாவிடமிருந்து அதிகளவான கடனைப் பெற்றுக் கொண்டமைக்கு முன்னைய அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் அரசும் பொறுப்பேற்க வேண்டும்.

### அம்பாந்தோட்டை துறைமுகம் சீனாவுக்குக் குத்தகைக்கு

மேற்குலக நாடுகளில் மகிந்த ராஜபக்ச ஒரு பிரபலமான தலைவர் அல்ல. ஆனால் ராஜபக்ச, சீனாவுடன் நெருக்கமான உறவைப் பேணியிருந்தார். அத்துடன் ராஜபக்ச தனது நாட்டில் கட்டுமானத் திட்டங்களை மேற்கொள்வதற்கான கடனை சீனாவிடமிருந்து பெற்றுக் கொள்வதில் தயக்கம் காண்பிக்கவில்லை.

அம்பாந்தோட்டைத் துறைமுகம் 99 ஆண்டுகள் காலக்குத்தகைக்கு, சீனாவுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்தத்துறைமுகமானது, சீனாவின் நிதிப் பங்களிப்பில் மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் மேற்கொள்ளப்பட்டது. சீனாவிடமிருந்து கடன் பெற்றே இந்தத்துறைமுகம் கட்டப்பட்ட போதிலும், இது சீனாவுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டது எனக் கருதமுடியாது.





ஆனால் இலங்கையில் ஆட்சிமாற்றத்தின் பின்னர் அம்பாந்தோட்டைத்துறைமுகத்தைக் கட்டுவதற்குப் பெற்றுக் கொள்ளப்பட்ட கடனைத் திருப்பிச் செலுத்துவது இலங்கை அரசுக்கு நெருக்கடியாக இருந்ததால் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை நீண்டகாலக் குத்தகைக்கு வழங்குவதென கூட்டு அரசு தீர்மானித்தது. அத்துடன் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் மீதும் அதற்கு அரு



கிலுள்ளமத்தலவிமானநிலையத்தின் மீதும் இடப்பட்ட முதலீட்டுக்கு எதிர்பார்த்த அளவு வருவாய் கிட்டவில்லை.
இதனால் சீனாவின் 'எக்சிம் வங்கி'க்குக் கடனைத் திருப்பிச் செலுத்துவது இலங்கை அரசுக்குப் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியது. இதனால் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை சீனாவிடம் பகிர்ந்து கொள்வதென கூட்டு அரசு தீர்மானித்தது.
சீனாவிடமிருந்து பெறப்பட்ட கடன் இலங்கையின் மூலோபாய அமைவிடங்களை அபிவிருத்தி செய்வதற்கு முதலீடு செய்யப்பட்டதுடன் தற்போது அவற்றில் சீனா தனது அதிகாரத்தைச் செலுத்துவதற்கும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**இருதலைக் கொள்ளி எறும்பின் நிலைக்குத் தள்ளப்பட்ட இலங்கை அரசு**

பொருளாதார இராஜதந்திரத்தின் ஊடாகதென்னாசியப்பிராந்தியத்தில் தனது அதிகாரத்தை நிலைநிறுத்தும் சீனாவின்மூலோபாயத்தைஇந்தியா மிகவும் நெருக்கமாக அவதானித்து வந்துள்ளது. இதுதொடர்பில்இந்தியா தனதுஅதிருப்தியைவெளிப்படுத்தியதுடன், அதன்விளைவாகஇலங்கை அரசுஇருதலைக்கொள்ளிஎறும்பின் நிலைக்குத்தள்ளப்பட்டது.
இலங்கைமீதானசீனாவினதுபொருளாதார அதிகாரத்துவமானது கடன் என்பதுடன் மட்டுமல்லாது. முதலீடுகளையும் நோக்காகக் கொண்டிருந்தது. 2005ஆம்ஆண்டில், சீனாவிடமிருந்து பெறப்பட்ட வருடாந்த வெளிநாட்டு நேரடி முதலீடானது ஒரு மில்லியன்டொலருக்கும்குறைவாகவே காணப்பட்டது.
ஆனால் 2014ஆம் ஆண்டில் அது



இது 400 மில்லியன் டொலர் வரை அதிகரித்தது. இந்தக் கடன் மூலமே கொழும்புத் துறைமுக நகரத் திட்டமும்ஆரம்பிக்கப்பட்டது. இந்தத்திட்டமானது பின்னர் கொழும்பு பன்னாட்டுநிதிமையமாகபெயர்மாற்றப்பட்டது. இந்தத் திட்டமானது இலங்கையின் இறையாண்மை தொடர்பான கேள்வியை எழுப்பியது. அதாவதுஇத்திட்டத்தின்மூலம்கொழும்புத் துறைமுகத்துக்கு அருகிலுள்ள நிலம் 99ஆண்டுகாலக்குத்தகைக்குசீனாவுக்கு வழங்கப்பட்டதால் அது சர்ச்சைக்குரிய திட்டமாக அடையாளம் காணப்பட்டது.
கடந்தபத்தாண்டுகள்காலத்துள்சீனாவிடமிருந்து1.1பில்லியன்டொலர்நிதி நேரடிவெளிநாட்டுமுதலீடாகப்பெறப்பட்டது. இதே காலப்பகுதியில் இலங்கையில் அமெரிக்காவிடமிருந்து 400 மில்லியன் டொலர் மட்டுமே நேரடிவெளிநாட்டுமுதலீடாகப்பெறப்பட்டது.

**சீனாவின் உதவியை நாடவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்ட இலங்கை**

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமைமீறல்கள் மேற்குலகின் அதிருப்தியைச்சம்பாதிக்கக்காரணமாகியது. இதனால்இலங்கைக்குவேறெந்தத்தெரிவும்இல்லாததால், சீனாவின் உதவியைநாடவேண்டியநிலைக்கு இலங்கை அரசு தள்ளப்பட்டது.
பணம்தேவைப்படும்இடத்தில்சீனா இருக்கும் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும்.
சீனாதனதுபூகோளஅரசியல்அமைவிடத்தை உறுதிப்படுத்துவதற்காக இந்தியக் கடல் பிராந்தியத்தில் 'ஒரு அணை ஒரு பாதை' என்கின்ற திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது. சீனா தனது இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுத்துச்செல்வதற்காகஇந்தியக்கடலில்உள்ளசில நாடுகளில் அபிவிருத்தித் திட்டங்களைமேற்கொண்டுவருகிறது. இந்தவகையில் இலங்கையும் சீனாவின்உதவியைப்பெறும்நாடுகளில் ஒன்றாக உள்ளதால், இலங்கை தனக்குக்கிடைத்தஇந்தவாய்ப்பைக் கைநழுவ விரும்பவில்லை.
இலங்கையில்மட்டுமல்லாதுபாகிஸ்தானின் குவடார் துறைமுகத்திலும் பங்களாதேஷிலும் சீனா முதலீடுகளைச் செய்துள்ளது. இந்த வகையில், இலங்கையானது வீழ்ச்சியடைந்திருந்த தனது பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கான ஒரு வாய்ப்பாக சீனாவின் உதவியைப் பயன்படுத்தியது.

**சவாலை எதிர்கொள்ளும் நிலையில் இலங்கை**

எனினும், கடன்போன்றஇராஜதந்திர நடவடிக்கைகளைச்சரியாகக்கையாளாவிட்டால் இலங்கை சீனாவின் பொறிக்குள் விழுந்துவிடும் ஆபத்து உள்ளது.
ஆகவே இலங்கை அரசு இந்த விடயத்தை மிகவும் சரியான வகையில் கையாள்வதுடன் இது இலங்கைக்கு ஒருசவாலானபணியாகவும்காணப்படும்என்பதால்தேவைப்படும்இடங்களில் விட்டுக்கொடுப்புக்களை மேற்கொள்வதன் மூலம் சமவலுவைப் பேணித் தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கான வழிவகைகளை இலங்கை அரசு கண்டறிய வேண்டும்.
அதுமட்டுமல்லாது அவசியமான வேளைகளில்தனதுநாட்டின்தேசிய நலனை உறுதிப்படுத்துவதற்கும் இலங்கைஅரசுமறந்துவிடக்கூடாது.

> கடந்த பத்தாண்டுகள் காலத்துள் சீனாவிடமிருந்து 1.1 பில்லியன் டொலர் நிதி நேரடி வெளிநாட்டு முதலீடாகப் பெறப்பட்டது. இதே காலப்பகுதியில் இலங்கையில் அமெரிக்காவிடமிருந்து 400 மில்லியன் டொலர் மட்டுமே நேரடி வெளிநாட்டு முதலீடாகப் பெறப்பட்டது.

> **இலங்கை மீதான சீனாவினது பொருளாதார அதிகாரத்துவமானது கடன் என்பதுடன் மட்டுமல்லாது, முதலீடுகளையும் நோக்காகக் கொண்டிருந்தது. 2005ஆம் ஆண்டில், சீனாவிட மிருந்து பெறப்பட்ட வருடாந்த வெளிநாட்டு நேரடி முதலீடானது 1 மில்லியன் டொலருக்கும் குறைவாகவே காணப்பட்டது. ஆனால் 2014ஆம் ஆண்டில் அது இது 400 மில்லியன் டொலர் வரை அதிகரித்தது. இந்தக் கடன் மூலமே கொழும்புத் துறைமுக நகரத் திட்டமும் ஆரம்பிக்கப்பட்டது.**





## மதத்துக்கும் அரசியலுக்கும் முடிச்சுப் போடாதீர்கள்

நானும் கத்தோலிக்க மதத்தைச் சார்ந்தவள்தான். கடந்த 23ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் யாழ். மறைமாவட்ட பொது நிலையியல் கழகம் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனுக்கு எதிராகக் கண்டனம் தெரிவிப்பதாக வெளிவந்த செய்தி முதலமைச்சரது மனதை மிகவும் புண்படுத்தியிருக்கும். குறித்த செய்தியால் எனது மனமும் சலனப்பட்டதால், எனது கருத்தைத் தெரிவிக்க முன்வந்ததில் ஏதும் தவறிருப்பின் மன்னித்துக் கொள்ளவும். "பாப்பரசரின் பகர்வுகள் போல் பலதையும் பத்திரிகைகள் ஊடாகப் பலரறியப் பகிர்ந்து கொள்வது நல்லதல்ல" என்று முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் எதிர்க்கட்சித் தலைவர் தவராசாவுக்கு கூறியதன் மூலம், பாப்பரசரை மேலும் உயர் மட்டத்தில் வைத்தே இதனைத் தெரிவித்துள்ளாரே தவிர அவரைத் தரக் குறைவாக சாதாரண மனிதர் போன்று தவராசாவுடன் ஒப்பிட்டுப் பேசியிருப்பதாக அந்த அமைப்பு எவ்வாறு அர்த்தப்படுத்தியதோ நானறியேன். பத்திரிகைகள் ஊடாக பலரறியப் பகிர்ந்து கொள்ளும் உன்னத தகைமை பாப்பரசரின் பகர்வுகளுக்கே உரித்தானது என்பதையே முதலமைச்சர் தவராசாவுக்கு உணர்த்தியதுடன், தமது பகிர்வுகளை தவராசா அவ்விதம் மேற்கொள்வது சரியல்ல என்ற கருத்துப்படவே கூறியுள்ளார். இதில் என்ன தவறு கண்டீர்களோ நானறியேன். முதலமைச்சர் தன் மீது எவர் வீண் பழிகளைச் சுமத்திக் கருத்து வெளியிட்டாலும் அதனை ஏற்றுக் கொள்வதனால் தான் (மறுத்துரைப்பின்றி) தொடர்ந்தும் அந்த அமைப்பு இரண்டாவது தடவையாகவும் கண்டனம் வெளியிட்டிருப்பது பலரது மனங்களைப் புண்படுத்தியுள்ளது. தயவுசெய்து இனிமேலாவது குற்றங் காணவிளையாதீர்கள். கண்ணில் உள்ள துரும்பை அகற்றிவிட்டு முதலமைச்சரின் கண்ணில் உள்ள துரும்பை (உண்மையில் அவர் கண்ணில் துரும்பேயில்லை) இருந்தால் அகற்ற முயலுதல் சிறப்பு.

*ஜே. சந்திரஈஸ்வரி, பண்ணாகம்.*





**பரிசில் நிகழ்வு** | 'பிரிட்டிஸ் கவுன்சில்' யாழ். கிளை நிலையத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற கட்டுரைப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கல் மற்றும் கருத்தரங்கு நிகழ்வு என்பன கடந்த 24 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் மதியம் 12 மணிவரை இடம்பெற்றன. (ஓ)

# கனடா வர்த்தகக் கண்காட்சி மற்றும் வர்த்தக மாநாட்டு நிகழ்வுகள் ஆரம்பம்

### யாழ் வர்த்தகத் தொழிற்றுறை மன்றத் தலைவர் கனடா பயணமானார்



கனேடியத் தமிழர் பேரவையின் (Canadian Tamil Congress) ஒழுங்கமைப்பில் ஏற்பாடு செய்யப்பட்ட வர்த்தகக் கண்காட்சி நிகழ்வுகள் கடந்த 26 ஆம் மற்றும் 27 ஆம் திகதிகளில் கனடா ரொறன்ரோ நகரில் இடம்பெற்றன.

கண்காட்சியை முன்னிறுத்திய வர்த்தக மாநாடு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

மேற்படி வர்த்தகக் கண்காட்சி மற்றும் மாநாட்டு நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்கு கனேடிய தமிழர் பேரவையின் விசேட அழைப்பின் பேரில் யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்றுறை மன்றத்தின் தலைவர் குலரட்ணம் விக்னேஸ் உத்தியோக பூர்வ பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

"எதிர்காலத்தில் வர்த்தகத் தொழிற்றுறை மன்றத்தின் நடவடிக்கைகளை அடுத்த கட்டத்துக்கு கொண்டு செல்லவும், கனேடியத் தமிழ் வர்த்தக சமூகத்தின் முதலீடுகளை எமது பிராந்தியம் நோக்கி கொண்டு வருவதற்கும் கனேடியத் தமிழ் வர்த்தகர்களுடனான எமது வர்த்தகர்களின் வியாபாரப் பலப்படுத்தல்களை கருத்தில் கொண்டும் இந்த பயணம் அமையப்பெற்றுள்ளது" என்று அவர் தெரிவித்தார் (ஓ)

# தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் அசைவு மாதிரி

| வருடம் | மாதம் | சுட்டெண் | சுட்டெண்ணிற்கான மாதத்திற்கு மாதம் % மாற்றம் | புள்ளிக்கும் புள்ளி பணவீக்கம் |
|---|---|---|---|---|
| 2016 | ஜூலை | 115.2 | -0.8 | 5.8 |
| | ஒகஸ்ட் | 113.3 | -1.6 | 4.5 |
| | செப்ரெம்பர் | 113.5 | 0.2 | 4.7 |
| | ஒக்ரோபர் | 114.7 | 1.1 | 5.0 |
| | நவம்பர் | 116.6 | 1.7 | 4.1 |
| | டிசம்பர் | 118.0 | 1.2 | 4.2 |
| 2017 | ஜனவரி | 119.3 | 1.1 | 6.5 |
| | பெப்ரவரி | 119.9 | 0.5 | 8.2 |
| | மார்ச் | 119.5 | -0.3 | 8.6 |
| | ஏப்ரல் | 121.0 | 1.3 | 8.4 |
| | மே | 121.8 | 0.7 | 7.1 |
| | ஜூன் | 123.4 | 1.3 | 6.3 |
| | ஜூலை | 122.4 | -0.8 | 6.3 |

தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் அசைவு மாதிரி கடந்த ஆண்டின் ஜூலை மாத காலப்பகுதியில் இருந்து ஆண்டிறுதி வரையான கால மதிப்பீடாகவும், நடப்பாண்டின் ஜனவரி மாதம் தொடக்கம் கடந்த ஜூலை மாத காலப்பகுதி வரையான மதிப்பீடாகவும் அமைந்துள்ளன.

அவை விலைச்சுட்டெண் புள்ளி. மாதத்திற்கு மாத மாற்ற விகிதம் மற்றும் புள்ளிக்குப் புள்ளி பணவீக்க மாற்ற விகிதம் என்ற ரீதியில் பதிவிடப்பட்டுள்ளன.

குறிப்பாக தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் மாதம் மீதான மாத மாற்றங்கள் ஜூன் மாத காலப்பகுதியில் 123.4ஆக அமைந்துள்ளதுடன் கடந்த ஜூலை மாதத்தில் 122.4 புள்ளிகளாக குறைவடைந்து பதிவாகியுள்ளது. இரு மாதங்களிடையேயான இந்த மாற்றம் 1.0 சுட்டெண் புள்ளி அல்லது 0.8 வீத புள்ளி என்ற விதமாக கணிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மாதாந்த மாற்றத்துக்கான காரணங்களை ஒப்பிட்டு நோக்கின் உணவுப்பொருள்களின் செலவுப் பெறுமதி 0.90 வீதமாக குறைவடைந்தும், உணவல்லாப் பொருள்களின் செலவுப் பெறுமதி 0.06 வீதத்தினால் அதிகரித்தும் காணப்படுகின்றன. (ஓ)

# இலங்கையின் பொருளாதாரம் வளர்ச்சி கண்டுள்ளது

### உலக வர்த்தக அமைப்பு கணிப்பு

WORLD TRADE ORGANIZATION

164 நாடுகளின் பொருளாதார அபிவிருத்தி குறித்து உலக வர்த்தக அமைப்பு மேற்கொண்ட கணிப்பின் அடிப்படையில் இலங்கையின் பொருளாதாரம் வளர்ச்சி கண்டுள்ளது என்ற தகவலை அந்த நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது. குறிப்பாக இலங்கையின் பணக் கொடுக்கல் வாங்கல் செயன்முறைகள் திருப்திகரமாக அமைந்துள்ளது என நிறுவனம் வெளிப்படுத்தியுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் கடந்த 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிட்டு நோக்கும்போது 2016 ஆம் ஆண்டில் அந்த அறிக்கையில் தெளிவான வளர்ச்சி நிலை தென்படுவதாகவும் குறிப்பிடப்பட் டுள்ளது. (ஓ)

# தொழிற் பயிற்சி நிறுவனங்களை அமைப்பதற்கு அரசு நடவடிக்கை

அரசு பாகுபாடின்றிய தொழிற் கல்வியை உயர்த்துவதற்கு நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்ற தகவல்களை கல்வியமைச்சர் வெளிப்படுத்தியுள்ளார்.

குறிப்பாக, "நாட்டில் தொழிற் [illegible]ச்சி நிறுவனங்களை நிறுவு[illegible]திறனான [illegible]வித் சேவைகளை வழங்கி அதனூடாகத் தொழிற்சந்தைக்கு தேவையான அளவு தொழிலாளர்களை உருவாக்கிக்கொள்ள முடியும். அதற்கான முன்னாயத்த நடவடிக்கைகளை அரசு தற்போது மேற்கொண்டுள்ளது. எந்தவொரு நாடும் வளர்ச்சியடைந்தமைக்குக் காரணம் கல்வியில் ஏற்பட்ட புரட்சியே" எனத் தெரிவித்துள்ளார். (ஓ)

# 'உதவிக்கரம்' நிச்சயம் உதவி செய்யும்

### அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன பெருமிதம்



கிராமிய மக்களின் அபிவிருத்தியை மேம்படுத்தும் விதமாக ஆரம்பிக்கப்பட்ட உதவிக்கரம் வேலைத்திட்டம் நாட்டின் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் செயற்படுத்தப்படும் என்ற தகவலை அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன வெளிப்படுத்தியுள்ளார்.

பண்டாரநாயக்க பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற 'குடிமக்களுக் கான உதவிக்கரம்' நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே இந்த விடயங்களை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது குறித்து மேலும் கருத்துக்கூறிய அவர்,

"நாட்டை மேம்படுத்துவதற்கான சவால்களின் மத்தியில் அந்தச் சவால்களுக்கு முறையான வகையில் முகம் கொடுப் பதற்கு உகந்த தரப்பினர் அவசியமாகவுள்ளனர். அந்தவகையிலே நாட்டின் குடிமக்களுக்கான உதவிக்கரம் இன்றைய சமூகம் மற்றும் நாளை பிறக்கவிருக்கும் எதிர்கால சந்ததிக்குரிய தூய்மையான எண்ணங்களுக்குரித்தான நடைமுறைவேலைத் திட்டமாக இது அமைந்துள்ளது.


குறிப்பாக 'புரவெசி அத்வெல்' (குடிமக்களுக்கான உதவிக்கரம்) மற்றும் 'கிராமசக்தி ஆகிய தேசிய வேலைத் திட்டங்கள் ஊடே நாட்டை வெற்றிப் பாதைக்குக் கொண்டு செல்லும் விரிவான பணிகளை முன்னெடுத்து வருகிறோம்." - என்றார். (ஓ)

> "நாட்டை மேம்படுத்துவதற்கான சவால்களின் மத்தியில் அந்தச் சவால்களுக்கு முறையான வகையில் முகம்கொடுப்பதற்கு உகந்த தரப்பினர் அவசியமாகவுள்ளனர். அந்தவகையிலே நாட்டின் குடிமக்களுக்கான 'உதவிக்கரம்' இன்றைய சமூகம் மற்றும் நாளை பிறக்கவி ருக்கும் எதிர்கால சந்ததிக்குரிய தூய்மையான எண்ணங்களுக் குரித்தான நடைமுறை வேலைத் திட்டமாக அமைந்துள்ளது.

# எண்ணங்களை கட்டமைத்தல்

**நேர்மறையான எதிர்மறையான எண்ணக் கோணங்கள் பற்றிய புரிதல் கொள்ளல்**

அன்ரனி பீற்றர்



மனித வாழ்வியலின் பாங்கினை எடுத்து நோக்குகின்றபோது ஒவ்வொரு உயிர்த் தனிமங்களது பிறப்பும் அவற்றின் வளர்ச்சிப் படிநிலை,அறிவூட்டம்,சமூக இணைவு என்பனவும் தனித்துவம் பெறுகிறது. இவர்கள் குடும்ப இயங்குநிலையிலும்,சமூகக் கட்டமைவிலும்அதிகபங்காற்றலையும்,பங்குபற்றுதலையும் கொண்டுள்ளனர். அந்த வகையிலே குழந்தை எனும் கருவூலம் கண்டு, உருவம் கொண்டு அவதரிக்கின்ற மேன்மையுடையபிள்ளைச்செல்வம் எனும் பேறு மகத்தானது.

ஒவ்வோர் வளர்ச்சிப் படிநிலைகளும் பணிவோடு செதுக்கப்படுகிறது. செதுக்கப்பட வேண்டும். குழந்தையின் பிறப்பில் இருந்து ஐந்து வயது வரையான காலப்பகுதிவரை அவர்களின் கிரகித்தல் என்பது புறச்சூழமைவுகளை பற்றியதாகவே ஊட்டம் பெறும். குறிப்பாக சுற்றத்திடமிருந்து வெளிப்படுகின்ற எண்ண அலைகளையும், பேச்சு வழக்கினூடான செயற்பாடுகளையும் பார்வை வெளிகொண்டு ஞாபகத் திறனின் தெளிவாக்கிக் கொள்கின்றனர்.

ஆக, இந்தக் காலப்பகுதியில் எவ்வித எண்ணங்களின் வெளிப்பாடு கண்டு குழந்தைகள் ஈர்ப்பினை பெறுகின்றனரோ அதன்பாற்பட்ட விளைதிறனே அந்தக் குழந்தையில் வெளிப்படும். சில குழந்தைகளை நாம் அவதானிக்கின்றபோது மிகச்சிறிய வயதிலேயே மற்றவர்களுடன் மரியாதையும், அன்பும் கொள்வதைக் காண்கிறோம். அவர்களின் பேச்சிலும்,நடத்தையிலும் கனிவைக் கண்டு இன்புறுகிறோம். உண்மையில் இதற்கான காரணங்களை நோக்குமிடத்து அந்தக்குழந்தையின் தாய், தந்தை, சுற்றத்தாரின் நேர்மறையான எண்ணங்களும், ஊக்குவிப்பும், பேச்சும் அது சார்ந்த நடத்தைக் கோலங்களும்.செயற்பாடுகளும் முன்னிலை பெறுகின்றன. அதேவேளை எதிர்மாறான எண்ணங்கள், தண்டனை, பேச்சு, நடத்தை, செயற்பாடு என்பன எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தி விடு கின்றன.

## பாடசாலையின் சூழமைவு

பாடசாலைக் காலத்திலே பெற்றோரிடமிருந்து பிள்ளைகள் பிரிவு கொள்கின்றனர். குறித்த நேர வரையறைக் கட்டுமாணங்களுள் அறிவின் அறிநிலை காணுதலில் கட்டமைவு பெறுகின்றனர். குறிப்பாக, 7 தொடக்கம் 10 மணித்தியாலங்கள் வரை பாடசாலையின் சுவாத்தியம் காண்கின்றனர். ஆரம்ப வகுப்புக்களிலேயே காப்பு. கணிப்பு, ஊக்குவிப்பு, தண்டனை, வார்த்தைப் பிரயோகம், செயற்பாடு என அத்தனை விடயங்களையும் உள்வாங்கிக் கொள்கின்றனர். ஆசிரியரைப் பின்பற்றுகின்றனர். அல்லது போனால் ஆசிரியரில் வெறுப்புணர்வு கொள்கின்றனர்.

இந்தக் காலப்பகுதியில் பெற்றோர்,உறவுகளின் ஆதரவு அதீதமாகக் கிடைக்க வேண்டும். கிடைக்காத சந்தர்ப்பங்களின்போதே எதிர்மறையான எண்ணங்கள் பிள்ளைகளிடம் வெளிப்படுகின்றன. காலப்போக்கில் அவற்றின் திரட்சி பண்பு சார்ந்த நடத்தையாக மாற்றங்கொள்கின்றன. அந்த நடத்தைக் கோலங்கள் சார்ந்த மனவெளி உடைவுகள் குடும்ப நிலையிலும் பின்பு சமூக நிலையிலும் ஆபத்தாக மாற்றங்கொள்கின்றன. இந்தத் தாற்பரியங்களைப் பல பெற்றோர் புரிந்து கொள்வதில்லை. புரிந்து கொள்ளும் சந்தர்ப்பத்திலே பிரச்சினைகளுக்கான தீர்வுகள் கண்டு கொள்ளப்படும். தெரிந்து கொள்ள வேண்டும்.

## சமூக வெளி

சமூகம் என்பது வரையறுக்கப்பட்டதல்ல. அது பரந்து விரிந்து காணப்படுவது. தனிமங்கள் பலதின் கூட்டிணைவால் வடிவம் பெறுவது. அங்கு நாம் பார்க்கின்ற, அறிகின்ற, கேட்கின்ற விடயங்கள் ஒவ்வோர் தனிம இயல்பு நிலையில் இருந்து உள்வாங்கிக் கொள்ளப்படுகின்றன. நீட்சி பெறுகின்ற சந்தர்ப்பங்களும், சூழ்நிலைகளும், அவை பற்றிய தான களமும் பலவித நடைமுறைகளைக் கற்பிக்கின்றன. உண்மையில் இத்துணை விடயங்களின் உள்வாங்குதலும், அவை கொள்கின்ற புதிய பரிமாணங்களும் நேர்மறையான அல்லது எதிர்மறையான தாக்க வன்மையாக உருவாக்கம் பெறுகின்றன. தவிர மரபு சார்ந்து நாம் பெற்றுள்ள உணர்வுகளும் இந்தச் செயல்நிலைகளில் பங்களிப்புச் செய்யவல்லனவாக இருக்கின்றன. நல்லவற்றை, நேர்மையானவற்றை கடைப்பிடிக்கின்றபோது நல்லவை. வல்லவை, பெறுமதியானவை, பயனுள்ளவை வினைத்திறனுடைய விளைவுகளாகச் சமூகத்தைச் சென்றடையும்.

## பிரபஞ்ச வெளி

"நாம் வாழும் இந்த உலகமென்ற பிரபஞ்சவெளியிலே எமது எண்ணங்களும், பேச்சுக்களும் நிலை கொள்கின்றன. அவற்றின் பிரதிபலிப்புக்களே விளைவுகளாக வெளிப்படுகின்றன" என்று வானியல் விஞ்ஞான ஆய்வு அறிஞர்கள் கூறுகின்றனர். எவற்றின் தாக்கம் அதிகமாக இருக்கின்றதோ அவையே முடிவுகளாக மாற்றம் பெறுகின்றன.

எனவே எமது எண்ணங்கள், சிந்தனைகள், வார்த்தைகள், பேச்சுக்கள், எழுத்துக்கள் என எல்லாமே ஆற்றல் சக்தி நிறைந்தவையாக இருக்கின்றன. 'நீ எதனை நினைக்கின்றாயோ அதுவாகவே மாறிவிடுகின்றாய் அல்லது அதுவாகவே நிகழ்த்தப் பெறுகிறது' என்பதை உளவியல் ஆய்வாளர்களும் ஆய்வுச் செயல்நிலை வழியே குறிப்பிடுகின்றனர்.

## அரசியல் வாழ்வு

அரசியல் விடுதலைக்காகப் போராடுபவர்களின் பலமாக மக்கள் எல்லோரின் எண்ணங்களும், செயல்களும் ஒருமுகப்பட்டதாக அமைகின்றபோதே விடுதலை சாத்தியமாகும். எதிர்மறையான சிந்தனைகள். பேச்சுக்கள், செயற்பாடுகள் மக்களிடையே ஏற்படுகின்றபோது பிரச்சினைகளே சாத்தியப்படுகிறது. ஒரு கூட்டத்தில் உள்ள ஆயிரம் பேரின் ஒருமனப்பட்ட எண்ணத்தை ஐந்துபேரின் முரண்பட்ட எண்ணங்கள் தீர்மானித்துவிடாது. ஆனால் இன்று அந்தச் செயற்பாடுகளுக்கே அதிக இடம் தரப்படுகிறது. அதன் வழியே மக்களின் கோரிக்கைகள் முடக்கப்படுகின்றன. இவ்வித காரணம் கொண்டே அதிகார பலமற்ற சிறுபான்மையினர் அரசியல் உரிமை பெறமுடியாமல் அலைக்கழிக்கப்படுகிறனர். இதனை மறுதலித்திருக்க முடியாது.

## பொது வாழ்வு

ஒவ்வொரு குடும்பத்திலும் ஏற்படுகின்ற சமூகக் கட்டமைப்பற்ற பேச்சுக்கள், செயல்களே சமூக வெளியில் எதிர்மறையான மாற்றங்கள் நடந்தேறக் காரணமாக அமைந்துவிடுகின்றன. கல்வியில், ஒழுக்கத்தில், ஏனைய செயற்பாடுகளில் நாம் முன்னெடுக்கின்ற நேர்மறையற்ற சிந்தனைகளும், வழிப்படுத்தல்களும், செயற்பாடுகளும் எதிர்பார்க்கும் விளைவைத் தராதவைகளாக இருக்கின்றன. மாதா, பிதா, குரு என்ற வழிகாட்டிகளின் நேர்மறையற்ற பேச்சு, செயற்பாடு, வழிப்படுத்தல என்பன பிள்ளைகளையும், இளைய சமூகத்தவரையும் இலகுவாகப் பாதிக்கின்றன. எதிர்மறையான செயற்பாடுகளில் உட்பொதித்துவிடுகின்றன. எனவே பிழைகளின் பெரும்பகுதி வழிகாட்டிகளில் இருப்பதை ஒவ்வொருவரும் சுயமதிப்பீடு செய்து கண்டுகொள்ள வேண்டும். மாற்றங்களுக்கு உட்படும் மனநிலையை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

ஒவ்வொருவரும் மற்றவரைக் குறைசொல்கின்றனர். குறைகொள்கின்றனர். இவ்விதமே சமூகத்தை நாம் காண்கின்றோம். விடாப்பிடியான வரட்டுச் சிந்தனைகள், செயற்பாடுகள், பேச்சுக்கள் வளர்ச்சிக்கு தடையாக இருக்கின்றன. தன்மானப் பிரச்சினைகள் சமூக வளர்ச்சித்திட்டங்களையே காவுகொண்டுள்ளன. வளர்சிக்குப் பதிலாக வீழ்ச்சிகளின் தேக்கநிலையே அதிகம் காணப்படுகின்றன. அன்றாட வாழ்வில் நேர்மறையான செயல்களை நாம் கைக் கொள்கின்றபோது தடைகள் ஏற்படலாம். அந்தத்தடைகளை எதிர்மறையான எண்ணங்கொண்டு கைக்கொள்ளக்கூடாது. அதிலிருந்து விலகல் கொள்ள வேண்டும். எந்த விடயங்களையும் சிந்திக்காது உடனடி முடிவுகளை மேற்கொள்ளக்கூடாது. பயனுள்ள கருத்துக்களையும், செயற்பாடுகளையும் முன்னெடுக்க வேண்டும். நற்சமுதாயம் வளர்ச்சியுற எம்மில் பல மாற்றங்களை பலமாக உருவாக்குவோம்.

*கட்டுரையாளர்: ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்*



“ எந்த விடயங்களையும் சிந்திக்காது உடனடி முடிவுகளை மேற்கொள்ளக்கூடாது. பயனுள்ள கருத்துக்களையும், செயற்பாடுகளையும் முன்னெடுக்க வேண்டும். நற்சமுதாயம் வளர்ச்சியுற எம்மில் பல மாற்றங்களை பலமாக உருவாக்கு வோம். ”



Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



# குருப்பெயர்ச்சி பலன்கள்



## மிதுனம்

மற்றவர்களை மகிழ்வித்து மகிழ்பவர்களே!

உங்கள் ராசிக்கு பூர்வ புண்ணிய ஸ்தானமாகிய 5ஆம் வீட்டில் 02.09.2017 முதல் 02.10.2018 வரை குரு பகவான் அமர இருக்கிறார். எனவே, அடிப்படை வசதிகள் பெருகும். பிரச்னை களுக்குத் தீர்வு கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்கும். கணவன் மனைவிக்கு இடையில் அந்நியோன்யம் அதிகரிக்கும். வெளிநாடு தொடர்புடைய நிறுவனத்தில் வேலை கிடைக்கும். தாயாரின் உடல் நலம் சீராகும். வழக்கு சாதகமாகும். விலகிச் சென்றவர்கள் மீண்டும் வந்து பேசுவார்கள். குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள்.

**குருபகவானின்பார்வை:** குருபகவான்5ஆம்பார்வையால் 9ஆம் வீட்டைப் பார்ப்பதால் வாழ்க்கையில் முன்னேற்றம்உண்டாகும். தொழிலதிபர்களின்நட்பு கிடைக்கும். வேலைகிடைக்கும். பூர்வீகச்சொத்துகைக்கு வரும். வெளிநாட்டுப் பயணம் அமையும். குரு பகவான் தன்னுடைய 7ஆம் பார்வையால் உங்கள் லாபவீடான11ஆம்வீட்டைப் பார்ப்பதால் புகழ், கௌரவம்உயரும். கடினமான காரியங்களையும் எளிதாக முடிப்பீர்கள். சுப நிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். வீடுவாங்கி கிரகபிரவேசம்செய்வீர்கள். குருபகவான் தன் 9ஆம் பார்வையால் ராசியைப் பார்ப்ப தால் எவரையும் வசீகரிப்பீர்கள். உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். விலை உயர்ந்த பொருள்கள் வாங்குவீர்கள்.

**குரு பகவானின் நட்சத்திர சஞ்சாரம்:** உங்கள் ராசிக்கு 6 ஆம்மற்றும் 11ஆம் வீட்டுக்கு உரிய செவ்வாயின் சித்திரை நட்சத்திரம் 3, 4ஆம் பாதம் துலாம் ராசியில்2.9.2017முதல்5.10.2017வரைகுருபகவான் செல்வதால் எதிர்ப்புகளும் விமர்சனங்களும் இருந்தாலும் அஞ்ச வேண்டாம். முன்கோபத்தைத் தவிர்ப்பது நல்லது. சகோதரர்களுடன் மனஸ்தாபம் ஏற்படும்.

6.10.2017 முதல் 7.12.2017 வரை ராகு பகவானின் சுவாதி நட்சத்திரத்தில் குரு பகவான் செல்வதால் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பூர்வீகச் சொத்தில் பிரச்னை ஏற்படக்கூடும். உறவினர் களுடன் அளவோடு பழகவும்.

உங்களின் ராசிக்கு 7 மற்றும் 10 ஆம் வீடுகளுக்கு உரிய குரு பகவான் தன் சுய நட்சத்திரமான விசாகம் நட்சத்திரம் 1, 2, 3ஆம் பாதம் துலாம் ராசியிலேயே 8.12.2017 முதல் 13.2.2018 வரை மற்றும் 4.7.2018 முதல் 2.10.2018 வரை செல்வதால் எதை யும் திட்டமிட்டுச் செய்வீர்கள். வாழ்க்கைத் துணை உங்களுடைய முயற்சிகளுக்குப் பக்கபலமாக இருப்பார். உத்தியோகத்தில் இடமாற்றம் உண்டாகும்.

**குரு பகவானின் அதிசார வக்கிர சஞ்சாரம்:** 14.2.2018 முதல் 10.4.2018 வரை விசாகம் நட்சத்திரம் 4ஆம் பாதத்தில் அதிசார வக்கிரமாக குரு சென்று மறைவதால் ஆரோக்கியம் பற்றிய கவலை வந்து செல்லும். அரச காரியங்கள் தடைப்பட்டு முடியும்.

**குரு பகவானின் வக்கிர சஞ்சாரம்:** 7.3.2018 முதல் 3.7.2018 வரை தன் சுய சாரமான விசாகம் நட்சத்திரம் துலாம் ராசியில் குரு பகவான் வக்கிர கதியில் செல்வதால் புதிய முயற்சிகள் வெற்றி அடையும். செலவுகளும் துரத்தும். புதிய நட்பால் ஆதாயமும் உண்டாகும். கோயில் விழாக்களில் கலந்துகொள்வீர்கள்.

வியாபாரத்தில் நஷ்டங்களைச் சரிசெய்வீர்கள். உத்தியோகத்தில் செல்வாக்கு கூடும். புதிய வாய்ப்புகள் வரும். பதவி உயர்வு உண்டு. மாணவர்கள் அதிக மதிப்பெண் பெறுவார்கள். கலைத்துறையினரே! வதந்திகளி லிருந்து விடுபடுவீர்கள். இந்தக் குருப்பெயர்ச்சி விரக்தியின் விளிம்பிலிருந்த உங்களுக்கு புதிய சகாப்தத்தைத் தொடங்கிவைத்துச் சாதனையாளராக மாற்றும்.

## வரலாற்றில் இன்றைய தினம் 28.08.2017

1990 - தனது நாட்டின் புதிய மாகாணம் குவைத் என ஈராக் அறிவித்தது.



1916 - முதலாம் உலகப்போரில் இத்தாலி, ஜேர்மனி மீது போர் அறிவிப்பு.

1924 - ஜோர்ஜிய எதிர்த் தரப்பால், சோவியத் யூனியனுக்கு எதிராக, ஒகஸ்ட் எழுச்சி மேற்கொள்ளப்பட்டது.

1931 - பிரான்ஸூம்சோவியத்யூனியனும்சமாதான உடன்படிக்கை.

1992 - வடக்குக் கிழக்கைப் பிரிக்குமாறு முஸ்லிம் அமைப்புக்கள் வலியுறுத்தல்.

1995 - சந்திரிகாவின் தீர்வுயோசனையால் அரசு ஆட்டம் காணும்நிலை. சுதந்திரக்கட்சியும்பிளவுபடும்நிலை.

2006 - மூதூர் கிழக்கில் கடும் சண்டை. சம்பூரைக் கைப்பற்ற அரச படைகள் தாக்குதல். ஷெல் வீச்சில் சிக்கி 20 பொது மக்கள் உயிரிழப்பு.

2016 - இலங்கையில் ஒரு சிலரே சிங்கள இனவாதிகளென ரணில் தெரிவிப்பு.

2016 - காணி விடுவிப்புத் தொடர்பில் அரசிடம் கொள்கைகள் இல்லையென சாடுகிறார் ரில்வின் சில்வா.

2016 - ஓட்டுத்தொழிற்சாலையின் பணியாளர்களுக்கு மீள் நியமனம் இல்லையேல் இழப்பீடு வேண்டுமென வடக்கு மாகாண சபையில் தீர்மானம்.

## நாளை

**29.08.2017**
செவ்வாய்க்கிழமை

**ஆவணி - 13**

திதி: அட்டமி பி.இ. 04.00 வரை
நட்சத்திரம்: அனுசம் பி.இ.12.56 வரை
சுபநேரம்: 10.35–12.05 வரை
ராகுகாலம்: 03.05–04.35 வரை

# பத்தி எழுத்து

## கூட்டமைப்பின் வெறுப்பை சம்பாதித்துள்ளார் முதலமைச்சர் விக்னேஸ்வரன்

வடக்கு மாகாண சபைக்குப் புதிதாக நியமிக்கப்பட்ட அமைச்சர்களின் பதவிகளுக்கு ஆபத்துக் காத்திருப்பதாகத் தகவல்கள் கசிந்துள்ளன.

அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்தவர் அந்தக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு மாகாணசபை உறுப்பினரானவர். ஆனால் அவரது கட்சி விரோதச் செயற்பாடுகளுக்கு எதிராக தமிழ் அரசுக் கட்சியினால் ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த நிலையில் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு எதிராகத் தமிழ் அரசுக் கட்சியினால் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. ஆனால் அனந்தி இதற்கு ஆதரவு தெரிவிக்கவில்லை. முதலமைச்சருக்கு ஆதரவான அணியுடன் அவர் ஒட்டிக் கொண்டார் இந்த நிலையில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவரை அமைச்சராக்கினார். அனந்தி தமிழ் அரசுக்கட்சியால் ஒழுக் காற்று நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதால் அவரை அமைச்சராக்க வேண்டாமெனத் தமிழ் அரசுக் கட்சியினால் தெரிவிக்கப்பட்டபோதிலும் முதலமைச்சர் அதைக் கணக்கில் கொள்ளவில்லை. இந்த நிலையில் தமிழ் அரசுக்கட்சி அனந்தியைக் கட்சியிலிருந்து நீக்குமானால் அவர் தமது அமைச்சர் பதவியை இழக்கவேண்டி வரப்போகின்றது.

இதைப்போன்றுதான் ரெலோவைச் சேர்ந்த மருத்துவர் குணசிலன் கட்சியின் விருப்பத்துக்கு மாறாக அமைச்சர் பதவியை ஏற்றமைக்காக கட்சியினால் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உள்ளாக்கப்படப்போகின்றார். இதனால் இவரும் தமது அமைச்சர் பதவியை இழக்கவேண்டி நேரிடலாம்.

இந்த விடயங்கள் முதலமைச்சருக்குத் தெரியாததல்ல. ஆனால் தெரிந்திருந்தும் தவறான நடவடிக்கைகளை அவர் மேற்கொண்டு வருகின்றார். அதிலும் அமைச்சர்களை நியமிப்பதில் அவர் தான்தோன்றித்தனமாக நடந்து கொள்வதை எந்தவகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது. ஏற்கனவே மாகாணசபையில் நிகழ்ந்த குழப்பங்களுக்கெல்லாம் அவரே காரணமாக இருந்திருக்கிறார். ஆளும் தரப்பு இரண்டாகப் பிளவடைந்தற்கும் முதலமைச்சரே முழுமுதற் காரணம் இந்த நிலையில் வடக்கு மாகாணசபை சுமுகமாக இயங்கி மக்களுக்குச் சேவையாற்றுமென எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

முதலமைச்சர் தமது வரட்டுக் கௌரவத்தைக் கைவிட்டு மற்றவர்களுக்கு மதிப்புக் கொடுத்து நடப்பதற்கு இனியாவது பழகிக்கொள்ளவேண்டும்.

முதலமைச்சர் பதவி என்பது ஒரு மாகாணத்தில் தலையாயது. மாகாணசபையின் சிறந்த செயற்பாடுகளை நெறிப்படுத்தும் பொறுப்பும் முதலமைச்சருக்கே உரியது. இந்த நிலையில் மக்களுக்கு வெறுப்பூட்டும் வகையில் முதலமைச்சர் நடந்து கொள்கின்றமை அவரது பதவிக்கு அழகு சேர்க்காது.

தற்போது கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற தமிழ் அரசுக்கட்சி, ரெலோ ஆகியவற்றின் வெறுப்பை முதலமைச்சர் சம்பாதித்துள்ளார் ஐங்கரநேசன் விடயத்தில் ஈ.பி.ஆர்.எல்.எப்க்கும் முதலமைச்சர் மீது வெறுப்பு உள்ளது. முன்னர் சிவனேசன் தொடர்பாக முதலமைச்சர் வெளியிட்ட கருத்தால் புளொட்டுக்கும் அவர் மீது வெறுப்பு உள்ளது. இந்த நிலையில் கூட்டமைப்பின் வெறுப்புக்கு அவர் உள்ளாகியுள்ளார்.

**பணக்கார ஆடு போல...**





# கோலமாவு கோகிலா

## நயன்தாராவின் அடுத்த படம்

'மாயா', 'டோரா', 'அறம்' என பெண்களை மையப்படுத்தும் கதைகளாக தேடிப்பிடித்து நடித்துவரும் நயன்தாரா, அடுத்ததாகவும் அதேபோன்ற ஒரு கதையில் தான் நடிக்கிறார்.

நயன்தாரா நடிக்கும் அடுத்த படத்தின் அறிவிப்பு வெளியாகியிருக்கிறது. இந்தப் படத்தை 'லைகா ப்ரொடக்‌ஷன்ஸ்' நிறுவனம் தயாரிக்கிறது. லேடி சூப்பர்ஸ்டார் நயன்தாரா, யோகிபாபு ஆகியோர் நடிப்பில் நெல்சன் இயக்கும் இந்தத் திரைப்படத்திற்கு 'கோலமாவு கோகிலா' எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. சுருக்கமாக 'கோ கோ' எனவும் டைட்டில் கார்டில் குறிப்பிட்டுள்ளார்கள். 'கோலமாவு கோகிலா' படத்திற்கு 'நானும் ரௌடிதான்' படத்தைத் தொடர்ந்து இரண்டாவது முறையாக நயன்தாரா நடிக்கும் படத்துக்கு இசையமைக்கப் போகிறார் அனிருத். நயன்தாரா தற்போது பாலகிருஷ்ணாவின் 102ஆவது படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார். அந்தப்படத்தின் வேலைகள் முடிவடைந்ததும் இந்தப்படத்தில் நடிப்பார் எனத் தெரிய வருகிறது.

**வண்டிக்கு லைசென்ஸ் இருக்கா?**
**இருக்கு சார்**
**இன்சூரன்ஸ்... ஆர்.சி.புக்?**
**எல்லாமே இருக்கு சார்...**
**அப்போ ஏன் வண்டிய**
**நிப்பாட்டச் சொல்லியும்**
**நிப்பாட்டாம போனாய்....?**

WhatsApp



**வண்டியில பிரேக் இல்லையே சார்...**

**என்னது எதிரி மன்னன் ஆப்பு வைத்திருக்கிறானா?**




**பதறாதீர்கள் மன்னா? எதிரி அவன் நாட்டை பற்றி புதிதாக ஆப் வெளியிட்டிருக்கிறான் அவ்வளவுதான்....**




# #ருவிற்றரில் பத்தாவது பிறந்தநாள் கொண்டாடும் #ஹேஷ்டேக்

சமூகவலைதளங்களில் பிரபல்யமாகும் அனைத்து விடயங்களும் தவறாமல் பயன்படுத்தும் ஹேஷ்டேக், ருவிற்றரில் முதன் முதலாகப் பயன்படுத்தப்பட்டு பத்து ஆண்டுகள் கடந்துவிட்டன. ஹேஷ்டேக்கை முதன் முதலாகப் பயன்படுத்திடுவிற்றரின் தலையெழுத்துமாறக் காரணமாக இருந்தவர் கிறிஸ் மெஸ்ஸினா என்ற பொறியியலாளர். கூகுள் மற்றும் உபெர் ஆகிய நிறுவனங்களில் பொறியியலாளராகப் பணியாற்றிய அனுபவம் கொண்ட மெஸ்ஸினா, கடந்த 2007ஆம் ஆண்டு ஒகஸ்ட் 23ஆம் திகதி ஹேஷ்டேக்குகளை அடையாளக் குறியீடாக ஏன் பயன்படுத்தக் கூடாது என்ற கேள்வியுடன் ஒரு பதிவைப் பதிவிட்டார்.

ஹேஷ்டேக்குகள் சமூக வலைதளங்களை ஆளும் நிலை வரும் என்று மெஸ்ஸினாவுக்கு அன்றைய தினம் தெரிந்திருக்க வாய்ப்பில்லைதான். ருவிற்றரின் வரலாற்றில் ஹேஷ்டேக்குகள் அதிகாரபூர்வமாகப் பயன்படுத்தப்பட்டது அதுவே முதல் முறை என்று கூறப்படுகிறது.

பத்தாவது ஆண்டைக் குறிக்கும் வகையில் **#Hashtag10** என்ற பிரத்யேக ஹேஷ்டேக்குடன் 'எமோஜி' ஒன்றையும் ருவிற்றர் உருவாக்கியுள்ளது. மொத்தமுள்ள 328 மில்லியன் ருவிற்றர் பயனாளர்கள் மாதத்துக்கு 125 மில்லியன் ஹேஷ்டேக்குகளைப் பயன்படுத்துகின்றனராம்.



# சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 3 | 6 | | 4 | | |
| | 6 | 9 | | | 8 | | 7 | |
| | | | | 1 | | 6 | | |
| | 3 | | | | | | 6 | 5 |
| | 4 | | 7 | 3 | 6 | | 1 | |
| 8 | 1 | 6 | | | | | 4 | |
| | | 8 | | 7 | | | | |
| | 2 | | 6 | | | 5 | 9 | |
| | | 1 | | 5 | 2 | | | |

**நேற்றைய சுடோக்கின் விடை**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 3 | 1 | 4 | 9 | 7 | 8 | 6 | 2 |
| 9 | 6 | 4 | 5 | 2 | 8 | 7 | 1 | 3 |
| 7 | 2 | 8 | 1 | 3 | 6 | 4 | 5 | 9 |
| 8 | 9 | 7 | 3 | 5 | 4 | 1 | 2 | 6 |
| 3 | 1 | 5 | 6 | 7 | 2 | 9 | 4 | 8 |
| 6 | 4 | 2 | 9 | 8 | 1 | 3 | 7 | 5 |
| 1 | 7 | 9 | 8 | 6 | 5 | 2 | 3 | 4 |
| 4 | 5 | 3 | 2 | 1 | 9 | 6 | 8 | 7 |
| 2 | 8 | 6 | 7 | 4 | 3 | 5 | 9 | 1 |

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி

**மேடம்:** சொந்தப் பணியில் மட்டும் கவனம் செலுத்தவும். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். உறவினர் வருகையால் செலவு அதிகரிக்கும்.

**இடபம்:** சிறு செயலையும் நேர்த்தியுடன் செய்வீர்கள். நண்பர்களின் மத்தியில் செல்வாக்கு உயரும். தொழில், வியாபாரத்தில் போட்டி பெருமளவில் குறையும். இலாபம் அதிகரிக்கும்.

**மிதுனம்:** சமயோசிதமாக முக்கிய பணிகளை நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி நிலை திருப்தி அளிக்கும். உறவினர் வருகையால் மகிழ்ச்சி காண்பீர்கள்.

**கடகம்:** சிலர் உங்களை ஏளனமாக பேசும் சூழ்நிலை உருவாகலாம். தொழில், வியாபா ரத்தில் திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். இலாபமும் கூடும். கண்களின் பாதுகாப்பில் கவனம் தேவை.

**சிங்கம்:** திட்டமிட்டபடி முக்கியப் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் சீராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையில் இருந்து விடுபட்டு மகிழ்வர்.

**கன்னி:** பெருந்தன்மையுடன் பிறருக்கு உதவி செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். குடும்பத்தினரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**துலாம்:** மனதில் நல்லெண்ணம் உண்டாகும். அன்றாடப் பணிகளில் புத்துணர்வுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். லாபம் உயரும்.

**விருச்சிகம்:** சங்கடமான சூழ்நிலை ஏற்படலாம். பொறுமையுடன் செயல்படுவது நன்மை தரும். தொழில், வியாபாரத்தில் சுமாரான வருமானம் கிடைக்கும்.

**தனுசு:** உங்களின் பிரச்னையைப் பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரம் மந்த கதியில் இயங்கும். சேமிப்புப் பணம் செலவுக்குப் பயன்படும்.

**மகரம்:** உங்கள் நலன் விரும்புபவரை சந்திப்பீர்கள். அன்றாடப் பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் தாராளப் பணவரவு கிடைக்கும்.

**கும்பம்:** மனதில் நல்லெண்ணம் அதிகரிக்கும். உயர்வு, தாழ்வு கருதாமல் அனைவரிடமும் பழகுவீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி பணி நிறைவேறும்.

**மீனம்:** மனதில் உற்சாகம் ஊற்றெடுக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பணி எளிதாக நிறைவேறும். ஆதாயம் அதிகரிக்கும். மாணவர்களுக்கு படிப்பில் ஞாபகத்திறன் வளரும்.

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டி ருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதி

# வாத்தும் சேவலும்



ஒரு வீட்டில் ஒரு சேவலும் வாத்தும் வளர்ந்து வந்தன. சேவல் மிகவும் கர்வம் பிடித்ததாக இருந்தது. தான் அதிகாலையில் எழுந்து கூவுவதால்தான் கதிரவன் உதிர்க்கிறான்;இந்த உலகத்தவருக்கு ஒளி கொடுக்கிறான் என்று தன்னைப் பற்றி அது பெருமையாக எண்ணிக் கொண்டிருந்தது. அதிகாலையில் எழுந்து கூவும் பழக்கம் அந்தச் சேவலுக்கு மட்டுமல்ல, எல்லாக் கோழி இனத்துக்குமே இயல்பானதாகும். ஆனால் இந்தச் சேவலோ தன் கூவல் ஒலிகேட்டு சூரியன் உதிப்பதாகவும் தன் குரல் கேட்டு எழுந்தே மற்றெல்லாச் சேவல்களும் கூவுவதாகவும் பெருமையடித்துத் திரிந்தது. இந்த எண்ணம் சேவலுக்கு இருப்பது வாத்துக்கும் தெரியும். சேவல் ஒருநாள் வாத்தைப் பார்த்து "வாத்தே நான் கூவுவதால் தான் கதிரவன் உதிக்கின்றான். பிறகு மற்ற கோழி சேவல்களும் கூவுகின்றன. ஏன் நீ கூட என் கூவல் கேட்ட பின்பேதான் கண்விழிக்கிறாய்" என்றது.

வாத்து "சேவலே இது உனது இயல்பு. இந்த இயல்பு உனக்கு மட்டுமே சொந்தமில்லை. உன் இனத்தவர் எல்லாருக்குமே சொந்தமானது" என்றது. "இல்லை இல்லை. இது எனது தனித்துவம். என் குரல் கேட்ட பின்பே என் இனத்தவரும் எழுந்து தம் பணிகளைச் செய்ய முயல்கின்றனர்" என்று மறுத்துப் பேசியது சேவல் வாத்தோ "நண்பா நீ ஒருநாள் கூவாமல் இருந்துதான் பாரேன். கதிரவன் உன் குரல் கேட்கவில்லையே என்று உதிக்காமல் இருந்து விடுகிறானா என்று பார்ப்போம்" என்றது வாத்து. "ஏ... வாத்தே! நான் அப்படி செய்யவே கூடாது. நான் கூவாவிடில் உலகுக்கு விடியல் இல்லை. உலகை இருள் தொடர்ந்து மூடியிருக்கும். இரவு இன்னும் கழியவில்லை என நினைத்து ஜீவராசிகள் எல்லோரும் உறக்கத்திலேயே இருப்பர். எழுந்திருந்து தமது கடமைகளைச் செய்யமாட்டார்கள். இத்தகைய ஒரு அசாதாரண நிலைமையை ஏற்படுத்த நான் ஒருபோதும் விரும்பமாட்டேன்" என்றது சேவல். "பிறிதொருசேவல் கூவினால் கூட பொழுது புலராதா? என்றது வாத்து. "அந்தச் சேவலும் என் சத்தம் கேட்ட பின்புதானே கூவும். நான்தான் கூவமாட்டேனே! பின்னர் எப்படி அது கூவி பொழுதும் புலரும்?" என்றது செருக்குடன் சேவல்.

"சரி நீ இவ்வளவும் பேசுகிறாயே உன் குரலை ஒருதரம் அதிகாலையில் ஒலித்துக் காட்டு அப்போதாவது சூரியன் உதிக்கிறானா என்று பார்ப்போம்" என்றது. சேவல் ஏளனமாக " நான் கத்துவதா? நான் கத்தினாலும் கத்தாவிடினும் கதிரவன் தன் பணியைச் செய்துதான் தீருவான்" என்றது வாத்து. "ஓ அப்படியா" என்றது சேவல் கேலியாக.

வாத்து மிகவும் விசனப்பட்டது. "சரி இந்த சேவலுக்கு பாடம் புகட்ட ஒரு சந்தர்ப்பம் வராமலா போகும்" என சந்தர்ப்பத்துக்காகக் காத்திருந்தது. சேவலுக்குத் திடீரென உடம்புக்கு முடியாமல் போய்விட்டது. இரண்டு நாள்கள் சாதாரண சுகவீனம். மூன்றாம் நாள் நோயின் கொடுமையால் சேவல் அதிகாலை கூவுவதை மறந்து நோய் வேதனையில் தவித்தது.

சூரியன் கிழக்கே மெல்ல மெல்ல எழுந்து பூமிக்கு ஒளி பாய்ச்சிக் கொண்டிருந்தான். அப்போது சேவலுக்கு அண்மையில் படுத்திருந்த வாத்து "சேவல் நண்பனே நீங்கள் இன்று கூவவில்லை அல்லவா?" "ஆமாம் கூவவில்லை" என்றது சேவல். "அதோ... சூரியன் எப்படி உதித்து வருகிறான் பாருங்கள்" என்றபடி கிழக்கைக் காட்டி மெல்ல சிரித்தது வாத்து.

சேவல். "ஓ... சூரியன் உதித்துதான் விட்டான்" என்றது. அடக்கமாக. வாத்தோ " சேவலே நீ எவ்வளவு வலிமையுடையவனாக இருப்பினும் அடக்கமாக உனது இயல்பான தன்மையில் மாறுபடாது இருந்தால் அதுவே உனக்குப் பெருமை தரும். ஆகவே அகந்தை என்ற ஆணப் போக்கைக் கைவிட்டு அடக்கம் என்ற பண்புடன் வாழக் கற்றுக் கொள்" என்றுஅறிவுரைவழங்கியது. சேவல் வெட்கமடைந்து தலை குனிந்தது..





# இண்டர் போல் என்பது என்ன?

பன்னாட்டு குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்காக உருவாக்கப்பட்ட பொலிஸ் அமைப்பு இண்டர்போல். இதன் தலைமையகம் பிரான்ஸிலுள்ள பரிஸ் நகரில் இருக்கிறது. சர்வதேச கடத்தல், பன்னாட்டுத் தீவிரவாதிகள். ஒரு நாட்டில் குற்றம் செய்து விட்டு மற்றொரு நாட்டில் தலைமறைவாகிவிடும் குற்றவாளிகள் ஆகியோரைக் கண்டுபிடிப்பதுஇதன் வேலை.

இந்த அமைப்பு 1923 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. நூறு நாடுகளுக்கு மேற்பட்ட பொலிஸ் இலாகாக்கள் இந்த அமைப்பில் பங்கேற்று ஒத்துழைக்கின்றன.






வர்ணம் தீட்டுவோம்

## நீருடன் விளையாட்டு

**சரியான விடையின் கீழ் கோடிடுவோம்**

1. நீரில் இட்டால் மறைந்து போகும் பொருள்
   1. கறியுப்பு     2. இரும்புத்துண்டு
2. நீரில் இட்டால் மிதக்கும் பொருள்
   1. மண்ணெய்     2. தார்
3. நீரில் இட்டால் தாழும் பொருள்
   1. குளுக்கோசு     2. ஆணி
4. நீரில் இட்டால் கரையாத பொருள்
   1. ரெஜிபோம்     2. சவர்க்காரம்
5. நீரினுள் எப்பொருளை இட்டால் ஊதா நிறம் தோன்றும்
   1. வினாகிரி     2. கொண்டீசு



# மாவீரன் அலெக்ஸ்சாண்டரின் விளக்கம்



மாவீரன் அலெக்ஸ்சாண்டர் போரெடுப்புக்கள் முடிவடைந்து தன் தாயகத்துக்குச் செல்லும் வழியில் பபிலோனியாவில் சாவடைந்தார். சவப்பெட்டியில் அவருடைய உடலை வைத்து அடக்கம் செய்வதற்காக, நண்பர்களும், தளபதிகளும் தூக்கிச் சென்றார்கள். அப்போது அலெக்ஸ்சாண்டரின் இரு கைகளும் சவப்பெட்டிக்கு வெளியே நீட்டிக் கொண்டிருந்தன. இதனைப் பார்த்த சிலர் "சம்பந்தப்பட்டவர்கள் இதனைக் கவனிக்க வில்லையோ" என்று சந்தேகப்பட்டார்கள். ஆனால் விசாரித்துப் பார்த்த பின்னர்தான் ஓர் உண்மை புலனாயிற்று.

அலெக்ஸ்சாண்டர் சாவுப் படுக்கையில் தெரிவித்த விருப்பத்தின்படிதான் அவருடைய இரண்டு கைகளும் வெளியே நீட்டி வைக்கப்பட்டிருந்தன. அவ்வாறு வைக்க வேண்டும் என்பதற்கு அலெக்ஸ்சாண்டர் சொன்ன காரணம்.

**"அலெக்ஸ்சாண்டரைப் போன்ற ஒரு மாவீரன் உலகத்தின் எத்தனையோ நாடுகளை வென்று ஆதிக்கம் செலுத்திய போதிலும், இறக்கும்போது அவன் எதையும் எடுத்துச் செல்லவில்லை. வெறும் கையோடுதான் போனான் என்பதை உலகம் தெரிந்து கொள்வதற்காக இப்படிச் செய்யுங்கள்."**

என்பதுதான்.



# விஞ்ஞான கோட்பாடுகள்

## அறிவியல் வெளிகளை உணர்த்தும் மெய்ஞானங்கள்

செ.தமிழ்நம்பி

விஞ்ஞான உலகின் மிகப் பெரிய சாதனை என்பது நாம் வாழும் பிரபஞ்சம் எப்படித் தோன்றியது என்ற கோட்பாட்டை விஞ்ஞானிகள் கண்டறிந்த விடயங்கள் சார்ந்து அமைந்துள்ளது.
அதிசயமும், வியப்பும் நிறைந்த அந்தக் கோட்பாடுஏறத்தாழஆயிரத்து 370கோடி ஆண்டுகளுக்குமுன்புஅதிகவெப்பமும், அதிக அடர்த்தியும் கொண்ட 'அணு' அளவில் சிறிய வடிவிலிருந்து ஒரு 'மா வெடிப்பின்" விரிவாக்கம் கண்டு இந்தப் பிரபஞ்சம் தோன்றியது என்று குறிப்பிடுகிறது.
"காலமும்", "வெளியும்" அந்த மாவெடிப்பிலிருந்துதான் உருவாகின என்ற உண்மைத்தன்மையுடையவிடயங்களையும் அந்தக் கோட்பாடுவெளிப்படுத்தியுள்ளது.
உலகத்தைக் கட்டிப்போட்ட அந்தக் கோட்பாடு கூறியது யாதெனில் "ஒன்றுமில்லாத நிலையிலிருந்து இந்தப் பிரபஞ்சம் உருவாகியது" (from nothing the universe appeared) என்பதுதான் அது. மேலும் அசுர வேகத்தில் நடந்த அந்த வெடிப்பிலிருந்து ஒரு சீரான, பௌதீக விதிகளுக்கு கட்டுப்பட்டு பிரபஞ்சம் தோன்றியதாகவும் அக்கோட்பாடு குறிப்பிட்டுள்ளது. ஒரு பெரும் வெடிப்பு எப்போதும் ஒரு சீரான விஞ்ஞானத்துக்கு கட்டுப்பட்ட ஓர் அமைப்பை உண்டாக்குவது என்பது இயல்பன்று.

### காரண காரியம்

ஒன்றுமில்லா (from nothing) நிலையிலிருந்து இவ்வளவு பெரிய சீரான, விஞ்ஞான விதிகளுக்கு கட்டுப்பட்ட ஒரு பிரபஞ்சம் உருவாகியதென்றும், காலம் அப்போதுதான் தோன்றியதென்றும் அந்தக் கோட்பாடு கூறியது. இது விஞ்ஞானிகளுக்கு ஒரு நெருடலாகவே இருந்து வந்தது. காரணம் இல்லாமல் ஒரு காரியம் நடக்காது. அதாவது மாவெடிப்பு ஒரு காரணம் இல்லாமல் நடந்திருக்க முடியாது என்று சிந்திக்க ஆரம்பித்தனர்.
"பெண்களின் கூந்தலுக்கு ஒருகாலும் இயற்கையில் மணம் இருக்க முடியாது" என்று நக்கீரர் ஆணித்தரமாக கூறியது போல 'ஒன்றுமில்லா நிலையிலிருந்து இவ்வளவு பெரிய சீரான, விஞ்ஞான விதிகளுக்கு கட்டுப்பட்ட ஒரு பிரம்மாண்டமான பிரபஞ்சம் ஒருகாலும் உருவாகி இருக்கவே முடியாது என்றும் நம்பினர்.
பலர் இந்தக் கேள்விக்கு விடை தேடி அலைந்தனர். அதன் விளைவாக பத்து ஆண்டுகளுக்குப் பின்பு சில விஞ்ஞானிகள் இந்த மா வெடிப்பு ஒரு தொடக்கமல்ல ஒரு தொடர் கதைதான் என்கிறார்கள். அந்தவகையிலே நாம் கூறும் ஆயிரத்து 370 கோடி ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட அந்த 'மா வெடிப்பு' முதல் முறையாக நடந்தது அல்ல. அது தொடர்ந்து பல முறை நடந்திருக்கிறது. அதாவது ஒரு மா வெடிப்பிலிருந்து ஒரு பிரபஞ்சம் உருவாகி அது போதிய அளவு விரிவடைந்த பின்பு ஈர்ப்பு விசையினால் பிரபஞ்சம் மீண்டும் சுருங்கி ஒரு புள்ளியானது. பின்பு மீண்டும் மாவெடிப்பு ஏற்பட்டு விரிவடைகின்றது என்றும் சில விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.
வேறு சில விஞ்ஞானிகள் பிரபஞ்சத்தில் உள்ள கருந்துளைகள் மூலமாக புதிய பல பிரபஞ்சங்கள் உருவாகின்றன என்றும் கருத்துரைக்கின்றனர். குழந்தைகள் சவர்க்கார நீரை உபயோகித்து குமிழிகளை ஊதிவிடுவது போல புதிய பிரபஞ்சங்கள் தோன்றிக் கொண்டிருக்கின்றன. எமது பிரபஞ்சம் வேறு ஒரு பிரபஞ்சத்தின் கருந்துளையிலிருந்து 'மா வெடிப்பு" அடைந்துவந்ததுஎன்றும்குறிப்பிடுகின்றனர். தவிர, நாம் வாழும் இந்தப் பிரபஞ்சத்திலிருந்து கருந்துளைகள் மூலமாக வேறு பிரபஞ்சங்கள் தோன்றுகின்றன என்ற மெய்சிலிர்க்கவைக்கும் கோட்பாட்டினையும் வெளிப்படுத்தியுள்ளனர்.


### பிரபஞ்சத்தின் தோற்றம்


பிரபஞ்சம் ஆரம்பத்தில் ஓர் அணு அளவிலிருந்து இப்போது நாம் காணும் அளவு பெரியதாக மாற்றங்கண்டுள்ளதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். பிரபஞ்சத்தின் பிரமாண்டம் பற்றி நாம் இங்கு தெரிந்து கொள்ளல் அவசியம். பரந்து விரிந்த கடல்களையும், காடுகளையும், மலைகளையும் கொண்ட நாம் வாழும் இந்தப் பூமியின் தோற்றமே எம்மை பிரமிக்க வைக்கிறது. இந்தப் பூமி போல பத்து லட்சம் பூமிகளை உள்ளடக்கக்கூடிய அளவு பெரியது சூரியன். இந்தச் சூரியனைச் சுற்றி எட்டு கிரகங்கள், அதற்குரிய நிலவுகள் என பல உள்ளன. இறுதி நிலையில் உள்ள கிரகம் நெப்டியூன் சூரியனில் இருந்து 450 கோடி கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது. அதற்கு அடுத்த நிலையாக புளுட்டோ என்ற சிறிய கிரகமும் மற்றும் எண்ணிலடங்கா விண்கற்களும், வால் நட்சத்திரங்களும் என இந்தச் சூரிய குடும்பமே மிகப் பெரியது.
சூரியனைப்போலஏறத்தாழநானூறு கோடி நட்சத்திரங்களைக் கொண்டது சூரியன் இருக்கும் பால்வெளி மண்டலம். சூரியனைக் காட்டிலும் பல ஆயிரம் மடங்கு பெரிய நட்சத்திரங்களும் அங்கு உள்ளன. பால்வெளி மண்டலத்தின் குறுக்களவை நோக்கின் மணிக்கு ஏறத்தாழ மூன்று லட்சம் கிலோ மீற்றர்கள் வேகத்தில் செல்லக்கூடிய ரொக்கெட் கிடைத்தால் அதில் ஒரு லட்சம் ஆண்டுகள் பயணித்தே ஒரு முனையில் இருந்து மற்றொரு முனைக்குச் செல்ல முடியும் என்கின்றனர் விஞ்ஞானிகள்.

COBE
(1992)

WMAP
(2003)

Planck
(2013)





### மாவெடிப்புக்கு முன்பு "வெளி" இல்லை

வெடிப்பு என்பது சத்தத்துடன் இணைந்தது தான். ஆனால் அங்கே சத்தம் இல்லை. ஏனெனில் அங்கு வெளி இல்லை. வெளி இல்லாததால் காற்றும் இல்லை. அதனால் சத்தம் இல்லை. சத்தம் என்பது வெளியிலுள்ள காற்றினூடே சென்றால்தான் கேட்கமுடியும். பிரபஞ்சம் ஆரம்பிக்கும்போது உலகில் நாம் இப்போது காணும் எந்தவொரு பொருளுமே இல்லை. தூசியும் கூட இல்லை. ஆரம்பத்தில் பிரபஞ்சத்தில் சக்தி மட்டுமே இருந்தது. சக்தி அணுத்துகள்களாக மாறி அந்த அணுத்துகள்கள் அணுக்களாக மாறி நாம் காணும் எல்லாப் பொருள்களாகவும், உயிரிகளாகவும், மனிதர்களாகவும் அமைவு கொண்டன.

### காலத்தின் தொடக்கம்

காலத்துக்கு தொடக்கமோ அல்லது முடிவோ இல்லை. அது எப்பொழுதுமே இருந்து கொண்டிருக்கின்றது என்று கூறிவிட முடியாது. காலம் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு விதமாக நகர்கிறது. இதனை விஞ்ஞானிகள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

### முடிவு

பிரபஞ்சம் விரிவடைந்து கொண்டிருக்கிறது. சூரியனைச் சுற்றும் கிரகங்களையும், கிரகங்களைச் சுற்றும் நிலவுகள் தவிர, பிரபஞ்சம் அசைவின்றி என்றென்றும் நிலையாக இருக்கிறது என்ற பிரபஞ்சத்தைப் பற்றிய எமது தவறான கருத்து உடைத்தெறியப்பட்டுள்ளது.
பிரபஞ்சம் எல்லா திசைகளிலும் விரிவடைந்து கொண்டிருக்கிறது. பால்வெளி மண்டலத்திலிருந்து வெகு தொலைவில் உள்ள மண்டலங்கள் (galaxy) எம்மை விட்டு வெகு வேகமாக விரிவடைந்து நகர்கின்றன என்ற செய்தி சில விஞ்ஞானிகளுக்கு ஒரு உண்மையைப் புலப்படுத்தின.
வேகமாக விரிவடையும் இந்தப் பிரபஞ்சம் ஒரு காலகட்டத்தில் சிறியதாய் இருந்திருக்க வேண்டும். ஒரு வெடிப்பிலிருந்து கிளம்பிப் பரவும் துகள்கள் போல 'மண்டலங்கள் சிதறிப் பரவுவதால் பிரபஞ்சம் ஒரு வெடிப்பிலிருந்து தோன்றியது என்ற கோட்பாடு உருவாக்கப்பட்டது.
இந்தக் கோட்பாட்டினை உறுதிசெய்ய விஞ்ஞான உலகம் பெரும் முயற்சியில் இறங்கியது. அப்படி ஒரு மாவெடிப்பு நிகழ்ந்திருந்தால் அதன் கதிர்வீச்சு இன்றும் பிரபஞ்சம் முழுவதும் இருக்கும் என்று கூறினர். பலர் அதனைத் தேடி அலைந்தபோதும் தற்செயலாக 'பென்சியாஸ்', 'வில்சன்' என்ற இருவர் அதைக் கண்டுபிடித்தனர்.
பிரபஞ்சத்தின் எல்லாப் பகுதியிலிருந்தும் மா வெடிப்பின் பின்விளைவான தேடப்பட்ட அந்த 'அண்ட நுண்ணலைக் கதிர் வீச்சு" (cosmic microwave radiation) பால்வெளி மண்டலத்தையும் தாண்டி பிரபஞ்சத்தின் எல்லாப் பகுதிகளிலும் இருப்பதை அவர்கள் கண்டறிந்தனர். அந்த மாபெரும் கண்டுபிடிப்புக்காக அவர்கள் இருவருக்கும் 1978 ஆம் ஆண்டு நோபல் பரிசு வழங்கப்பட்டது.
பூமியின் நிலப்பரப்பிலிருந்து கிடைத்த ஆராய்ச்சியின் முடிவு போதாதென இந்தக் கோட்பாட்டை நூறு சதவீதம் உறுதி செய்ய மேலும் பிரபஞ்சத்தின் எல்லா குணாதிசயங்களையும் கண்டறிய அண்ட வெளிக்கு மிகுந்த பொருள்செலவில் 'வில்கின்சன் மைக்ரோவேவ் அணிசோ ற்றோபீ பரோப்" (wilkinson microwave anisotropy probe) என்ற அதிநவீன செயற்கைக்கோள் 2001 ஆம் ஆண்டு விண்ணில் செலுத்தப்பட்டது. இந்த ஆராய்ச்சி பிரமிக்கத்தக்க வெற்றி அளித்தது எனலாம்.
பிரபஞ்சம் எப்போது ஆரம்பித்தது என்பது குறித்த 'டார்க் மேட்டர்', 'டார்க் எனெர்ஜி' போன்ற பல புதிய விவரங்களையும் மிகத் தெளிவாக இந்தச் செயற்கைக் கோள் கொடுத்தது. 'மா வெடிப்பு கோட்பாட்டை" சந்தேகத்திற்கு இடமின்றி உறுதி செய்தது.

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 09.05.1938
விண்ணில் 07.09.2016

அமரர் (செல்வி) சிதம்பரம் முத்தையா
(ஓய்வுபெற்ற ஆசிரியை. யா/தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி)
திதி : 28.08.2017

அன்பான சகோதரியாக ஆசிரியையாக சமூக சேவகியாக பாபாவின் அருளாசிபெற்ற சேவகியாகவுமிருந்து அமரத்துவம் அடைந்த அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

"லலிதமஹால்"
அளவெட்டி வடக்கு, அளவெட்டி.
குடும்பத்தினர்.
077354 5430

31 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



பிறப்பு 11.06.1936
இறப்பு 30.07.2017

அமரர் வேலாயுதம் குமாரசாமி
(ஓய்வு பெற்ற தேர்தல்கள் திணைக்கள உத்தியோகத்தர்,
அரச அங்கீகாரம் பெற்ற மொழி பெயர்ப்பாளர்,அகில இலங்கை சமாதான நீதிவான்)

கடந்த 30.07.2017ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் பிரிவுச்செய்தியறிந்து உடன் வந்து உதவிகள் புரிந்த அயல வர்கள், உறவினர்கள், நண்பர்கள், மரணச்சடங்கில் பங்கெடுத்து துயர் பகிர்ந் தவர்கள், தொலைபேசியூடாக ஆறுதல் தெரிவித்தவர்கள், மலர் வளையங்கள், அஞ்சலிப் பதாகைகள், துண்டுப்பிரசுரங்கள் ஊடாக அஞ்சலி செலுத்தியவர்கள் மற்றும் சகல வழிகளிலும் எம்மோடு உறுதுணையாக நின்ற அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன் நாளை (29.08.2017) செவ்வாய்க்கிழமை மு.ப 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம் பெறவுள்ள ஆத்ம சாந்திப் பிரார்த் தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு :- அழைப்பிதழ் கிடைக்கத் தவறியவர்கள் இந்த அறிவித்தலை தனிப் பட்ட அழைப்பாக அன்புடன் ஏற்று வருகைதருமாறு தயவுடன் கேட்டுக் கொள் கின்றோம்.

140 (50), சிவன்பண்ணை வீதி,
யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.
021 222 6158, 077 612 0364

கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 24.07.1970
மறைவு 17.08.2017

அமரர் கனகலிங்கம் அன்பழகன் [அன்பு]
(12 ஆம் வட்டாரம் - புங்குடுதீவு)
(97, Turner Rd, Edgware, Middlesex, HA8 6AS, U.K)
( உரிமையாளர் : Betterway Queensbury. London)



புங்கை மண் பெற்று எடுத்த முத்தே
அன்புக்கே அன்பு சேர்த்த அன்பே
உங்களைப் பார்த்திருந்த விழிகள்
கண்ணீரால் கரைபுரள
உங்களை இழந்த புங்குடுதீவு
மண் துடிக்கின்றது
எந்தவொரு களங்கமும் இல்லா
உங்கள் ஆத்மா தல்லையப்பற்று
சங்கரமூர்த்தி முருகமூர்த்தி
முருகப்பெருமானின் பாதார விந்தங்களில்
சாந்தி பெற வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

புங்குடுதீவு கிழக்கு,
தல்லையப்பற்று சங்கரமூர்த்தி.
முருகமூர்த்தி தேவஸ்தானம்,
புங்குடு தீவு - 12

பிரிவால் துயருறும்
ஆலய தர்மகர்த்தாவும்
நிர்வாக சபையினரும்.


# மூளையின் செயற்பாடுகள்

**ஓய்வு இல்லாத போதும் உழைக் கும்**

சில மணி நேரங்கள் வேலை செய் தாலே எமது உடல் களைத்துவிடும். ஓய்வு தேவைப்படும். தூங்கினால் நன்றாக இருக்கும் என நினைப் போம். ஆனால் எமது உடலின் மற்ற பகுதிகள் தூங்கினாலும் மூளை மட் டும் தூங்காது. அதிலும் நாம் தூங் கும்போது இருப்பதைவிட விழித்திருக்கும்போது இதன் செயல் பாடு அதிகமாக இருக்கும்.

**மறதி நல்லது!**

புதிய செய்திகளைச் சேமிக்க, பழைய செய்திகளை மூளை தானாகவே அழித்துக்கொள்ளும். இதற்காக நாம் அதிகம் நினைக்காத, எமக்கு மேற் கொண்டு தேவைப்படாத தக வல் களை தேர்ந்தெடுக்கும். பள்ளியில் கற்பிக்கப்பட்ட கணித சூத்திரங் களைப் பெரும்பாலும் மறந்திருப்பீர் கள். ஆனால் கணக்கு ஆசிரியரை மறந்திருக்கமாட்டீர்கள். அது இத னால்தான்.




**வலிக்கவே வலிக்காது**

இதற்கு வலி என்ற உணர்வு கிடை யாது. உடலின் பிற பகுதிக ளில் வலி ஏற்பட்டால் எப்படிச் செயலாற்ற வேண் டும் என்பதுதான் மூளைக் குத் தெரியும். இதைச் சுற்றியுள்ள குருதிக்குழாய்கள், நரம்புகள், திசுக்க ளில் ஏற்படும் வலி மூளையில் ஏற்ப டும் வலி அல்ல.

**ஆற்றலை அதிகம் பயன்படுத் தும்**

உடல் எடையில் மூளையின் அளவு 2 சதவிகிதம்தான். ஆனால் நாம் சேமித்து வைத்திருக்கும் ஆற்றலில் 20 சதவிகிதத்தை மூளை பயன்படுத் துகிறது. உடல் பாகங்களில் மிக அதிக ஆற்றலைப் பயன்படுத்துவது இது தான். இதன் செல்கள் சிறப்பாகச் செயல்பட மூளை மிகவும் முக்கியமாகும். அதே போல் இதன் எடையில் சராசரியாக 75 சதவிகிதம் தண்ணீர்தான் உள்ளது.

# உடல் சொல்லும் நற்செய்திகள்



## மயிர்கூச்செறிதல்

விலங்குகள் சண்டையிடும்போது அவற்றின் உடலில் உள்ள முடிகள் நீட்டிக்கொண்டு (சிலிர்த்து) நிற்கும். இதனால் அவற்றின் தோற்றம் இயல்பான அளவை விடப் பெரியதாகவும், வலிமையானதாகவும் தெரியும். இப்படி மயிர்க் கூச்செறிந்து நிற்பது உடலில் காயங்கள் அதிகமாக ஏற்படாமல் அவற்றுக்குப் பாதுகாப்பளிக்கும்.

மனிதனும் விலங்குகள் கூட்டத்தை சேர்ந்தவன்தான். அவனுக்கும் இதே மாதிரி தோற்றம் மாறுகிற அளவுக்கு ஆரம்பத்தில் அதிகமான முடி இருந்ததும் உண்மை. மனிதர்கள் சண்டைகளைக் குறைத்துக்கொண்டு நாகரிக வாழ்க்கை வாழ ஆரம்பித்ததும், அவன் உடலில் உள்ள தேவையற்ற முடிகள் உதிர ஆரம் பித்தன. ஆனால், எமது உள்ளுணர்வின் காரணமாக மிகப் பர பரப்பான சண் டைக்காட்சியைப் பார்க்கும்போதோ, பேய்ப் படம் பார்க்கும்போதோ. விளையாட் டுப் போட்டிகளை தொலைக்காட்சியில் பார்க்கும்போதோ எமக்கு அனிச்சையாக மயிர்க்கூச்செறியலாம். மயிர்கூச்செறி தல் நமது உடலில் வெப்ப இழப்பைத் தடுக்கும். அதோடு, குளிர்காலங்களில் நமது உடலை வெதுவெதுப்பாக வைத் துக்கொள்ளவும் உதவும்.


## பலாக்கொட்டைப் பிட்டு

**தேவையானவை:**

பலாக்கொட்டை-300 கிராம்
உப்பு - சிறிதளவு
தேங்காய்த் துருவல் - 50 கிராம்
கரட் துருவல் -50 கிராம்
பச்சரிசி மா- ஒரு கைப்பிடி

**தாளிக்க :** கடுகு, பச்சைமிளகாய், நறுக்கிய இஞ்சி, கறிவேப்பிலை, சின்னவெங்காயம், எண்ணெய்.

**செய்முறை:** பலாக்கொட்டையின் தோலை நீக்கி வேக வைத்து சூடு ஆறியதும் சின்னச் சின்ன துண்டுகளாக நறுக்கி அரைத்து எடுக்கவும். அடுப்பில் எண்ணெய்ச் சட்டியை வைத்து, தாளிக்க வேண்டியதைத் தாளித்து, அரைத்த பலாக்கொட்டைக் கலவை, உப்பு, பச்சரிசி மாவு ஆகியவற்றை சேர்த்து தேவைப்பட்டால் சிறிது தண்ணீர் சேர்த்துக் கிளறி இறக்கவும். இனி பிட்டுக் குழலில் தேங்காய்த்துருவல், பிட்டுக் கலவை, கரட் துருவல் என்கிற முறையில் மாற்றிக் மாற்றிக் குழலில் நிரப்பி ஐந்து முதல் ஆறு வரை வேக வைத்து எடுக்கவும்.



சீட்டிழுப்பு வாரம்: 181
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 27.08.2017
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 99,821,444/-
X 04 31 45 69
15 21 52 64

Galaxy Star
வெற்றி வாரம் 189
திகதி 27.08.2017
01 11 23 25 32
18 19 22 37
அடுத்த புதன்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 3, 744, 224/-
2017.08.30 ஆம் திகதி புதன்கிழமை நீல நிற டிக்கட்டுகளாகும்.
வெற்றிபெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
திகதி 2017.08.27
வெற்றி வாரம் 2177
வர்ணம் ஊதா
சிம்மம்
வெற்றி இலக்கங்கள்
18 20 29 34
செவ்வாய்க்கிழமை வெற்றிப் பொதி
ரூ. 4, 356, 536/=
இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள்
23 39 41 58
2017.08.29 ஆம் திகதி
செவ்வாய்க்கிழமை
நீல நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

காணி விற்பனைக்கு
யாழ். இந்து ஆரம்ப பாடசாலை விளையாட்டு மைதானத்துக்கு அருகில் 3 1/4 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு - 076 697 2287

சிங்கள வகுப்பு
சிங்களம் O/L PAST PAPER CLASS
சிங்களம் ORAL CLASS
சிங்களம் மிகவும் இலகுவான முறையில் பேச, எழுத, வாசிக்க கற்பிக்கப்படும்.
புதிய பிரிவுகள் ஆரம்பம்
02.09.2017 சனியன்று (சனி, ஞாயிறு மற்றும் வார நாள்களில் உங்கள் வசதிக்கேற்ப)
G.C.E. O/L .இரண்டாம்மொழி சிங்களம் PAST PAPER CLASS
ஆரம்பம் 03.09.2017 ஞாயிறு அன்று.
எவரும் கலந்துகொள்ளலாம். நேரில் வந்து முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்.
சிங்கள ORAL வகுப்புக்கள் (அரசாங்க ஊழியர்களுக்கானது)
சனி. ஞாயிறு நாள்களில்
மதியம் 1.00 - 2.00 வரை நடைபெறும்.
பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை பாடத்திட்டத்திற்கு அமைவாக கற்பிக்கப்படும்.
சனி. ஞாயிறு நாள்களில்
மதியம் 12.00 - 01.00 மணிவரை
ஸ்ரீ மாஸ்டர்
ஸ்ரீ இரண்டாம் மொழி கல்வி நிறுவகம்
இல.72, இராமநாதன் வீதி, (மிலேனியம் அருகில்) கலட்டி, யாழ்ப்பாணம்.
இல. 41 நக்கா ஒழுங்கை, சுண்டிக்குழி, யாழ்ப்பாணம்.
077 703 3729

# 14 வயதுச் சிறுவனின் சாவுக்கு ஆசிரியரின் கண்டிப்பு காரணமா?

யாழ்ப்பாணம், ஓக. 28
14வயதுச்சிறுவன்தூக்கில்தொங்கிய நிலையில் சடலமாக நேற்று மீட்கப் பட்டான் என்று பொலிஸார் தெரி வித்தனர். தனியார் கல்வி நிலைய ஆசிரியர் கண்டித்ததால் மாணவன் இவ்வாறுதவறானமுடிவுஎடுத்தானா என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ள னர்.

சம்பவம் வரணியில் இடம்பெற்றது. 3 நாள்களாகக் குறித்த சிறுவன் தனியார்வகுப்புக்குச்செல்லவில்லை என்றும் 4 ஆவது நாள் வகுப்புக்குச் சென்றபோது ஆசிரியர் கண்டித்தார் என்றும் அதன் பின்னரே சிறுவன் இவ்வாறுதவறானமுடிவுஎடுத்தான் என்றும் இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸார் மற்றும் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சீ.இளங்கீரன் ஆகியோர் விசாரணை மேற் கொண்டனர். சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக சாவகச்சேரி வைத்தியசாலையில்வைக்கப்பட்டுள் ளது. (உ-4-9)

# கிளிநொச்சியில் கடை தீ பற்றியது

## உரிமையாளருக்கு எரிகாயம்

யாழ்ப்பாணம், ஓக. 28
கிளிநொச்சி கிருஸ்ணபுரம் பகுதியில் கடையுடன் கூடிய வீடுதீ பற்றி எரிந்ததாகத் தெரி விக்கப்பட்டது.

சம்பவம் நேற்று மதியம் இடம்பெற்றது. தீ பற்றியதால் கடை முழுமையாக எரிந்து அங்கிருந்து பொருள்களும் நாசமாகின. கடை உரிமை யாளரான பெண் தீக்காயங் களுக்கு உள்ளானார். அவர் கிளிநொச்சி மாவட்ட வைத்தி யசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார்.

மின் ஒழுக்குக் காரணமா கவே தீ ஏற்பட்டதாகத் தெரி விக்கப்பட்டது. அது தொடர் பில் விசாரணை மேற்கொள் வதாகப் பொலிஸார் தெரிவித் தனர். (4-101)

# குடத்தனைக்கும் ஊடுருவியது காட்டு யானை

## பிரதேச மக்கள் பீதியில்

யாழ்ப்பாணம், ஓக. 28
கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைக் காட்டில் உலாவித் திரிந்த யானை நாகர்கோவில் குடத்தனை பகுதிக்குள் நேற்று ஊடுருவியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. அதனால் அங்கு பதற்றநிலை ஏற்பட்டது. அதனை அங்கிருந்து அகற்ற வனஜீவராசிகள் திணைக்களத்தின் உதவி கோரப்பட்டுள்ளது.

யானை புகுந்துள்ளதான தகவல் பரவியதும் அங்கு பதற்றநிலை ஏற்பட்டது. யானை எந்தப் பகுதியில் மறைந்துள்ளது. வீடுகளை நாசமாக்கவுள்ளதா என்றெல்லாம் பலவாறு பிரதேச மக்கள் பீதியடைந்தனர்.

இந்த விடயம் கிராம அலுவலர் ஊடாகப் பிரதேச செயலாளரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. பிரதேச செயலாளர் உடனடியாக வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு அது தொடர்பில் அறிவித்தார்.

வன ஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்கள் நேரில் சென்று நிலைமையை அவதானித்தனர். பிரகாரம் யானை ஊடுருவியுள்ளமை அதன் கால்தடம் மூலமாக உறுதி செய்யப்பட்டது. யானையை விரட்டுவதற்கான பணிகள் இரவிரவாக முன்னெடுக்கப்பட்டன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (4-101)

# 18 மாதங்கள் கடந்துவிட்டன எந்த முன்னேற்றமும் இல்லை

## ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான பிரதிநிதி சாடல்

கொழும்பு, ஓக. 28
ஜெனிவாத்தீர்மானம்நிறைவேற்றப்பட்டு, 18மாதங்கள்கடந்துவிட்டபோதும்,இலங்கை அரசு எந்த முன்னேற்றத்தையும் காண் பிக்கவில்லை. இது அனைத்துலக சமூ கத்தை ஏமாற்றமடையச் செய்துள்ளது.

இவ்வாறு ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங் கைக்கான இராஜதந்திர விவகாரங்களுக் கான பிரதிநிதி போல் கொட்பிறி தெரிவித் துள்ளார்.

இது தொடர்பில் ஊடகம் ஒன்றுக்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

'இலங்கை அரசு கூடிய விரைவில் சிறப்பு நீதிமன்றம் ஒன்றையோ, நீதிப் பொறிமு றையையே அமைப்பதற்கான வாய்ப்பு எதுவும் தென்படவில்லை. தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, 18 மாதங்கள் கடந்து விட்டன. எந்த முன்னேற்றத்தையும் இலங்கை அரசு காண்பிக்கவில்லை. இந்த நிலை அனைத்துலக சமூகத்தை ஏமாற்றமடையச் செய்துள்ளது.

கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் காணாமல் போனோருக்கான பணியக சட்டம் நிறை வேற்றப்பட்டபோது நம்பிக்கையுடன் இருந்தேன். ஆனால் அத்துடன் நின்றுவிட் டது. இன்னமும் எந்த முன்னேற்றமும் இல்லை.

ஆனால் அது வெறும் வரைவு நிலையி லேயே இருக்கிறது." என்றும் அவர் கூறி யுள்ளார். (4-5)



வரலாற்றுச் சிறப்புமிக்க பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய வருடாந்தத் திருவிழா கொடியேற்றத்துடன் நேற்று ஆரம்பமானது. பொன்னாலை கண்ணன் மடா லயம், நாராயணன் தண்ணீர்ப்பந்தல் சேவை போன்ற இடங்களில் அன்னதானம் வழங்கப் பட்டது. இந்தச் சேவை திருவிழாக் காலங்க ளில் தினந்தோறும் இடம்பெறும். (4)

### வடக்கில்...

சாலைகளில் உள்ள தாதியர்கள் அனைவரும் நாளை பணியில் ஈடுபடமாட்டார் என்று சங்கம் அறிவித்தது. மேலதிக நேரக் கொடுப்பனவு தொடர்பான பிரச்சினையின் காரணமாகவே இந்தப் பணி நிறுத்தம் செய்யப்படுவதாகவும் சங் கம் தெரிவித்தது.

இது தொடர்பில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், வடக்கு மாகாண சுகா தார சேவைகள் பணிப்பாளர், வடக்கிலுள்ள பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகி யோருக்குச் சங்கம் கடிதம் அனுப்பியுள்ளது.

“கடந்த ஜூன் 2 ஆம் திகதிய சுற்றறிக்கையின் மூலமாக வெளியிடப்பட்ட புதிய மேலதிக நேரக் கொடுப்பனவை நடைமுறைப்படுத்தாமை, மேல திக நேரக் கொடுப்பனவின் நிலுவையை வழங்க நடவடிக்கை எடுக்காமை, தாதிய உத்தியோகத்தர் களது பதவி உயர்வின் போதான மேலதிக நேரக் கொடுப்பனவு நிலுவையை வழங்காமை போன்ற கோரிக்கைகளை முன்வைத்தே வேலை நிறுத் தத்தில் ஈடுபட்டுள்ளோம்" என்று அந்தக் கடிதத் தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

“தாதிய உத்தியோகத்தர்களது கொடுப்பனவு மற் றும் ஏனைய விடயங்களை நடைமுறைப்படுத்து வதில் வடக்கு மாகாணம் தோல்வியடைந்துள் ளது என்பதனைத் தங்களுக்குத் தெரிவிக்கி றோம். இது வடக்கு மாகாண சுகாதார அமைச் சின் கீழ் கடமையாற்றும் தாதிய உத்தியோகத்தர் களது தொழில்துறையை கடுமையாகப் பாதிக் கின்றது.

இந்தப் பிரச்சினைகளை விரைவில் தீர்க்க வேண் டும். நாளை செவ்வாய்க்கிழமை காலை 7 மணி தொடக்கம் நாளைமறுதினம் புதன்கிழமை காலை 7 மணிவரை வேலை நிறுத்தப் போராட் டத்தில் தாதியர்கள் ஈடுபடுவர்.

நோயாளர்களினதும், பொதுமக்களினதும் நன்மை கருதி வேலை நிறுத்தத்தின்போது உயிர் காப்பு நடவடிக்கைக்கான அவசர சிகிச்சைக்கு மாத்திரம் தாதிய உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுவார்கள். வேலை நிறுத்தத்தால் நோயாளர் களுக்கு ஏற்படும் பாதிப்புக்கு சுகாதார அமைச் சும் வடக்கு மாகாணசபை நிர்வாகமுமே முழுப் பொறுப்பு" என்றும் கடிதத்தில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளது. (உ-4)

### சீதன...

ஏற்பாடுகள் இடம்பெறும் நிலையில், சீதனம் போதாது சீதனத்தை அதிகரித்துத் தரவேண்டும் என்றும், அதிகரித்துத் தராவிட்டால் திருமணம் இடம்பெறாது என்றும் மணமகனின் உறவுகள் திடீரென நேற்று மணமகள் வீட்டாருக்குக் கூறினர்" என்றனர் உறவினர்கள்.

உயிரை மாய்த்த பெண்ணின் பெற்றோர் இறந்துவிட்டனர். அவர் கொழும்பில் வாழ்கிறார். அவரது சகோதரி தென்மராட்சியில் வசிக்கிறார். சகோதரியே இந்தத் திருமணத்தைப் பேசி ஏற்பாடுகள் செய்திருந்தார். 12 லட்சம் ரூபா சீதனம் என்று பேசி முடிவாகியிருந்தது. அதன் பின்னரே திருமண ஏற்பாடுகள் முன்னெடுக் கப்பட்டன.

திருமணத்துக்கான ஆடை, ஆபரணங்கள் வாங்கப்பட்டன. திடீரென மணமகனின் உறவினர்கள் சீதனக் காசு போதாது அதிகரிக்க வேண்டும் என்று கூறிவிட்டனர். தவறினால் இந்தத் திருமணம் இடம்பெறாது என்றும் எச்சரித்துவிட்டனர்.

இந்தச் செய்தி மணமகளின் காதுக்கு எட்டியது. பெற்றோரை இழந்த குறித்த பெண்ணுக்கு சீதனம் உட்பட அனைத்துச் செலவுகளையும் அவரது சகோதரியே ஏற்றுக் கொண்டிருந்தார். சீதனத் தொகையை அதிகரித்தால் தனது சகோதரிக்கு மேலும் பணக் கஷ்டம் ஏற்படுமே என்று மணமகள் மனஉளைச்சலுக்கு ஆளானார்.

''குளித்துவிட்டு வருகிறேன் என்றுகூறிக் குளியலறைக்குள் சென்ற மணப்பெண் நெடுநேரமாகியும் வெளியே வரவில்லை. என்ன ஏது என்று பார்த்தபோது. குளியலறையில் அவர் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டார்"" என்று உறவினர்கள் தெரிவித்தனர்.

சாவகச்சேரிப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. பொலிஸார் சடலத்தை மீட்டு சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்த்தனர். ஆரம்ப விசாரணைகள் இடம்பெற்றன. இன்று விசாரணை தொடரவுள்ளது. மணமகன் கொழும்பில் வசிக்கிறார் என்றும் தெரிவிக்கப் பட்டது.

போருக்குப் பின்னரான காலத்தில் அளவுக்கதி கமான சீதனம் கேட்கும் பழக்கம் யாழ்ப்பாணத்தில் அதிகரித்திருக்கிறது என்று சமூக ஆர்வலர்கள் கவலைப்படுகின்றனர். (உ-4-9)

### வருடாந்தம்...

இலங்கையின் வெப்பநிலை ஒவ்வொரு ஆண் டும் அதிகரித்துச் செல்கின்றது. சராசரியாக 0.01 டிகிரி தொடக்கம் 0.03 டிகிரி வரையில் இந்த வெப்பநிலை அதிகரிக்கின்றது. இதன் காரண மாக, குளிரான காலம் மேலும் குளிராகவும், வெப்பமான காலம் மேலும் வெப்பமாகவும் மாறிச் செல்கின்றது.

1973ஆம் ஆண்டுக்குப் பின்னர் மோசமாக வறட்சிப் பாதிப்பு தற்போதைய வருடத்திலேயே உணரப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (உ-5)

### ஐ.நா...

றனர். அந்தத் தினங்களில் இந்தியப் பெருங்கடல் மாநாடு அலரி மாளிகையில் நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டில் அலிஸ் வெல்ஸ் முதலாம் திகதி உரையாற்றவுள்ளார். அதற்கு முன்னதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்கள் ஆகியோரை அவர் சந்தித்துப் பேசு வார்.

இதே மாநாட்டில் பங்கேற்பதற்காக இந்தியாவின் அயலுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜும் கொழும்புக்கு வருகிறார். அவரும் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பினரைச் சந்தித்துப் பேச்சு நடத்து வார்.

இந்தச் சந்திப்புக்களின் போது புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சியில் ஏற்பட்டுள்ள தாமதம் குறித்து அவர்களுக்குக் கூட்டமைப்பு எடுத்து விளக்கும் என்று அதன் பேச்சாளர், நாடாளு மன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித் தார்.

“ஐ.நா. தீர்மானத்தைக் கொழும்பு முழுமையாக நடைமுறைப்படுத்து வதற்கான அழுத்தத்தை அமெரிக்காவும் இந்தியாவும் வழங்கவேண்டும் என்றும் வலியுறுத்துவோம்" என்றார் அவர்.

2015ஆம் ஆண்டில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப் பட்ட தீர்மானத்துக்கு கொழும்பு அரசும் இணை அனுசரணை வழங்கியது. எனினும் அந்தத் தீர் மானத்தை அது முழுமையாக நடைமுறைப்படுத் தவில்லை. இதைத் தொடர்ந்து அந்தத் தீர்மா னத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தும்படி வலியுறுத்தும் மற்றொரு தீர்மானம் கடந்த ஆண்டு மார்ச் மாதம் நிறைவேற்றப்பட்டது. அதன் பின்னரும் அரசு தீர்மானத்தை நடைமு றைப்படுத்துவதில் மெத்தனமாகவே செயற்படுகி றது.

அண்மையில் பன்னாட்டு மன்னிப்புச் சபை கூட இதுதொடர்பில்ஓர்அறிக்கையைவிடுத்திருந்தது. ஐ.நா. தீர்மானத்தை இலங்கை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கான அழுத்தத்தை ஐ.நா. மற்றும் நாடுகள் வழங்க வேண்டும் என்று அதில் வலியுறுத்தப்பட்டிருந்தது. (உ-5)

### சு.கவை...

வன்னியாராச்சி, கம்பகா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணவீர, களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரோகித்த அபேகுணவர்தன, கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான திலும் அமுனுகம, லொஹான் ரத்வத்த ஆகியோரே கட்சி உறுப்புரி மையிலிருந்து நீக்கப்படவுள்ளனர்.

அரசமைப்பின் 19ஆவது திருத்தச்சட்டத்தின்படி கட்சி உறுப்புரிமையிலிருந்து நீக்கப்பட்டால் அவர்களின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியும் பறிபோகும் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. (உ-5)

### 2020...

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கூட்டு அரசு இரு வருடத்தை கடந் துள்ளது. இரு முதன்மைக் கட்சிகளுக்கும் இடை யில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம் அடுத்த மாதம் நிறைவடையவுள்ளது. புதிய ஒப்பந்தம் டிசெம்பர் மாதம் கைச்சாத்தாகும் - என்றார். (உ-5-31)

### தொடருந்து...

மோதி நசுக்கிக் கொன்றது. விபத்தினால் தொடருந்தில் பெட்டிகளை இணைக்கவெனக் காணப்படும் சங்கிலித் தொடர் பாதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. அதனால் மிருசுவில் தொட ருந்து நிலையத்தில் தொடருந்து நிறுத்தப்பட்டு திருத்தவேலை பார்க்கப்பட்டது. (உ-49)

# செபஸ்ரியன் கழகம் அசத்தலான வெற்றி

யாழ்ப்பாணம், ஓக. 28

கனகபுரம் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 9 வீரர்கள் பங்கு பற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரில், நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்ட மொன்றில் செபஸ்ரியன் அணி வெற்றிபெற்றது.

கனகபுரம் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் பூநகரி செபஸ்ரியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சுடரொளி விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் பூந கரி செபஸ்ரியன் விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல் கணக் கில் வெற்றிபெற்றது.

(ம-23)

## காளியம்பாள், வைகறை அணிகள் வெற்றி

யாழ்ப்பாணம், ஓக. 28

நாவற்குழி சரஸ்வதி சனசமூக நிலையமும், விளையாட்டுக் கழக மும் இணைந்து யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தும் தாச்சித் தொடரில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற ஆட்டங்களில் தாவடி காளி யம்பாள் விளையாட்டுக் கழக அணி, புதுமடம் வைகறை விளையாட்டுக் கழக அணி என்பன இறுதியாட்டத் துக்குத் தகுதி பெற்றன.

நாவற்குழி விளையாட்டுக் கழக மைதானத்தில் அண்மையில் இடம் பெற்ற முதலாவது அரையிறுதியாட் டத்தில் உடுவில் ஆலடி சிந்து விளை யாட்டுக் கழக 'ஏ' அணியை எதிர்த்து புதுமடம் வைகறை விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் புது மடம் வைகறை விளையாட்டுக் கழக அணி 6:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண் டாவது அரையிறுதி ஆட்டத்தில் உடு வில் ஆலடி சிந்து விளையாட்டுக் கழக 'பி' அணியை எதிர்த்து தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழக அணி 9:3 என்ற புள்ளிகளின் அடிப் படையில் வெற்றிபெற்றது. (ம-23)

## துடுப்பாட்டம் செப்ரெம்பரில்

யாழ்ப்பாணம், ஓக. 28

பிரிட்டிஸ் தமிழ் கிரிக்கெட் லீக்கின் அனுசரணையுடன் யாழ்ப்பாண மாவட்ட பாடசாலை கள் துடுப்பாட்டச் சங் கம் நத்தத் திட்டமிட்ட வடக்கு, கிழக்கு மாகாண பாடசாலை களின் 19 வயதுப் பிரி வினருக்கு இடை யிலான ரி-20 துடுப் பாட்டத் தொடர் செப் ரெம்பர் மாதம் முத லாம் திகதி ஆரம்பமாகிறது.



வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, சென். பற்றிக்ஸ் கல்லூரி, சென். ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப் பாணம் மத்திய கல்லூரி மைதா னங்களில் தொடரின் ஆட்டங்கள் இடம்பெறவுள்ளன. இந்தத் தொட ரில் யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து 11 அணிகளும், கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து 3 அணி களும், மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து 4 அணிகளும், மன்னார், வவுனியா மாவட்டங்களில் இருந்து தலா ஒரு அணியும் பங்கெடுக்கின் றன.

(ம-23)

## ஜொனியன்ஸ் வி.கழகம் வெற்றிபெற்றது

யாழ்ப்பாணம், ஓக. 28

யாழ்ப்பாண மாவட்ட துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் வி.ரி.மகாலிங்கம் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான ரி-20 துடுப்பாட்டத் தொடரில் ஜொனி யன்ஸ் அணி 17 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

சென். ஜோன்ஸ் கல்லூரி மைதா னத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற இந்த ஆட்டத்தில் ஜொனி யன்ஸ் அணியை எதிர்த்து கிறாஸ் கொப்பர்ஸ் அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் அணி 6 இலக்குகளை இழந்து 161 ஓட்டங்களைப் பெற்றது. ஜதுசன் 68 ஓட்டங்களையும், கிசாந்துயன் 43 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில ஜெரோம், சரண்ராஜ் இருவரும் தலா 2 இலக்குகளை வீழ்த்தினர்.

162 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத் தாடிய கிறாஸ் கொப்பர்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரி மாற்றங்கள் வரை தாக்குப்பிடித்த போதிலும் 7 இலக்குகளை இழந்து 144 ஓட்டங்களை மாத்திரம் பெற் றது. இதனால் 17 ஓட்டங்களால் வெற்றிபெற்றது ஜொனியன்ஸ் அணி.

(ம-23)



# வின்ஸ்ரார் அணி மகுடம் சூடியது

யாழ்ப்பாணம், ஓக. 28

அரியாலை திருமகள் சனசமூக நிலையம் 65ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்டக் கழகங்க ளுக்கு இடையில் நடத்திய வலைப்பந்தாட்டத் தொடரில் வின்ஸ்ரார் அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

அரியாலை திருமகள் சனசமூக நிலையத்தின் வலைப்பந்தாட்டத் திடலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் ஜொலிஸ் ரார் அணியை எதிர்த்து வின்ஸ்ரார் அணி மோதியது. 26:12 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது வின்ஸ்ரார் அணி.

(ம-422)

## திருநெல்வேலி கிரிக்கெட் கழகம் 7 இலக்குகளால் வெற்றிபெற்றது

யாழ்ப்பாணம், ஓக. 28

யாழ்ப்பாண மாவட்ட துடுப்பாட்டச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங் களுக்கு இடையில் நடத்தும் வி.ரி. மகாலிங்கம் ஞாபகார்த்த கிண்ணத் துக்கான ரி-20 துடுப்பாட்டத் தொட ரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணி வெற்றிபெற் றது.

சென். ஜோன்ஸ் கல்லூரி மைதா னத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத் தில் திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணியை எதிர்த்து நியூஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதி யது. முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸ்ரார் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறை வில் 9 இலக்குகளை இழந்து 114 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்ச மாக மோகனதீபன் 34 ஓட்டங் களையும், ரம்மிய ராகுலன் ஆட்ட மிழக்காமல் 22 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் பிரபவன், ஜசிந்தன், சிவராஜ் ஆகியோர் தலா 2 இலக்குகளை வீழ்த்தினர்.

115 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத் தாடிய திருநெல்வேலி கிரிக்கெட் கழக கழக அணி 15.4 பந்துப் பரி மாற்றங்கள் நிறைவில் 3 இலக்கு களை இழந்து வெற்றிபெற்றது. தர்சிகன் அதிகபட்சமாக 37 ஓட்டங் களைப் பெற்றார்.

(ம-23)

# மெஸ்ஸி மீண்டும் மிரட்டல்



ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங் களுக்கு இடையே நடைபெற்று வரும் லா லிகா தொடரில், நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்ட மொன்றில் பார்சிலோனா அணி அபார வெற்றிபெற்றது.

பார்சிலோனாவை எதிர்த்து அல்வ்ஸ் அணி மோதியது. இரண்டு அணிகளும் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தின. கோல்கள் இல்லா மல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியின் 55ஆவது நிமிடத்தில் பார்சிலோனா அணி யின் நட்சத்திர வீரர் மெஸ்ஸி முதல் கோலைப் பதிவுசெய்தார். 66ஆவது நிமிடத்தில் அவர் பார்சிலோனா வின் இரண்டாவது கோலையும் பதிசெய்தார். முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது பார்சிலோனா.

(ம)

## யங்ஸ்ரார் அணி அபார ஆட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 28

வவுனியா பிரண்ட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் ரி-20 துடுப்பாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் யங்ஸ்ரார் அணி 43 ஓட்டங்களால் இலகு வெற்றியைப் பதிவுசெய்தது.

வவுனியா நகரசபை மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் யங்ஸ்ரார் அணியை எதிர்த்து வடதாரகை விளையாட்டுக் கழக 'பி' அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யங்ஸ்ரார் அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 188 ஓட்டங்களைப் பெற்றது. ஜெசிதரன் 69 ஓட்டங்களையும், கிரிசாந் 32 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சுபாஸ்கரன் 3 இலக்குகளையும், ஜசிவன், ஜெயகரன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

189 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய வடதாரகை அணி 19.1 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 145 ஓட்டங்களை மட்டும்பெற்று 43 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

(ம-23)


# தலைவராக வேண்டும் மத்தியூஸ் என்கிறார் ரணதுங்க

"இலங்கை அணியின் தலைவராக மத்தியூஸ் தொடர்ந்திருக்க வேண்டும்" என்று தெரிவித்தார் அந்த அணியின் முன்னாள் தலைவர் ரணதுங்க.

சிம்பாப்வே அணி அண்மையில் இலங்கைக்குச் சுற்றுப் பயணம் செய்து விளையாடியபோது மிகச் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தியது. அந்த அணியிடம் இலங்கை அணி தொடர்களைப் பறிகொடுத்தது. இதனால் அணித்தலைவர் மத்தியூஸ் மீது கடும் விமர்சனம் வைக்கப்பட்டது. இதனால் அவர் தனது தலைமைப் பொறுப்பில் இருந்து விலகினார். சந்திமல் டெஸ்ட் ஆட்டங்களின் தலைவராக்கப்பட்டார். தரங்க ஒருநாள் மற்றும் ரி-20 ஆட்டங்களின் தலைவராக்கப்பட்டார். இதையடுத்து கருத்துத் தெரிவிக்கையிலேயே ரணதுங்க இவ்வாறு தெரிவித்தார்.

"மத்தியூஸ் தலைமைப் பதவியில் இருந்து விலகுவதற்கு இலங்கை கிரிக்கெட் சபை அனுமதி வழங்கியிருக்கக் கூடாது. அவர் தலைமையில் தான் டெஸ்ட் தரப்படுத்தலில் இலங்கை அணி முதலிடம் பிடித்தது. ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடர்களை வழித்துத் துடைத்தது. எனவே சமீபகாலத் தோல்விகளுக்கான தவறு மத்தியூஸில் இல்லை. அவர் ஒரு நேர்மறையான வீரர். அவர்மீது வைக்கப்பட்ட விமர்சனங்கள் அவரை எதிர்மறையான வீரராக மாற்றிவிட்டன" என ரணதுங்க மேலும் தெரிவித்தார்.

ரணதுங்க சமீப காலமாக இலங்கை கிரிக்கெட் சபை மீது கடுமையான விமர்சனங்களை முன்வைத்து வருகிறார். 2011ஆம் ஆண்டு உலகக்கிண்ணத் தொடரில் இலங்கை அணி தோல்வியடைந்தமைக்குப் பின்னால் சூதாட்டம் இருக்கலாம் என்றும்கூட அவர் தெரிவித்திருந்தார். இவர் இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவருக்கான பதவிக்குப் போட்டியிட்டுத் தோல்வியடைந்தார். இதனாலேயே அவர் இவ்வாறு விமர்சிக்கிறார் என்று ரணதுங்கவுக்கு எதிரான வட்டாரங்கள் குறிப்பிடுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)



# வென்றார் மெவதர்



உலக குத்துச்சண்டை அரங்கில் மிகவும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்த புளொய்ட் மெவதர், மக்கிரேகர் ஆகியோருக்கு இடையிலான மோதலில் மெவதர் வெற்றிபெற்றார்.

மெவதர், அமெரிக்கக் குத்துச் சண்டை வீரர். மக்கிரேகர் அயர்லாந்தின் குத்துச்சண்டை வீரர். கடந்த வருடம் நடைபெற்ற பிலிப்பைன்ஸ் வீரர் பக்கியோவுடனான வெற்றியின் பின்னர் மெவதர் பன்னாட்டு குத்துச்சண்டை அரங்கில் இருந்து விடைபெற்றார். இந்தப் போட்டி மெவதரின் 49ஆவது போட்டியாக அமைந்தது. தான் களமிறங்கிய அத்தனை போட்டிகளிலும் வென்றவர் என்ற பெருமையுடன் மெவதர் விடைபெற்றார். அதன் பின்னர் அயர்லாந்து வீரர் மக்கிரேகர் உலகப் புகழ்பெற்றார். அவர் மெவதரையும் வீழ்த்தக்கூடியவர் என்று பேசப்பட்டது. மெவதர் ஓய்வு பெறாமல் இருந்திருந்தால் மக்கிரேகர் அவரை நிச்சயம் தோற்கடிப்பார் என்றும் சொல்லப்பட்டது. இந்த வாக்குவாதங்கள் முற்றியதும் மெவதர் தனது ஓய்வு முடிவை மீளப்பெற்று மீண்டும் களமிறங்கினார். மெவதர், மக்கிரேகர் இடையிலான மோதல் லொஸ்வெகாஸில் நேற்றுக் காலை 9 மணியளவில் (இலங்கை நேரப்படி) நடைபெற்றது. 10ஆவது சுற்றில்வைத்து வெற்றிபெற்றார் மெவதர்.

**50 வெற்றிகளுடன் ஓய்வு**

மக்கிரேகருக்கு எதிரான நேற்றைய போட்டி மெவதரின் 50ஆவது போட்டியாகும். இந்தப் போட்டியில் வெற்றிபெற்றதன் மூலம் தான் களமிறங்கிய 50 போட்டிகளிலும் வெற்றிபெற்றவர் என்ற பெருமை மெவதருக்குக் கிடைத்தது. மக்கிரேகரை வீழ்த்திக் காட்டியதும் எவராலும் வெல்ல முடியாத வீரர் என்ற பெயருடன் மெவதர் மீண்டும் விடைபெற்றுச் சென்றார்.

**குவிந்தன கோடிகள்**

இந்தப் போட்டியில் வெற்றிபெற்றதன் மூலம் இலங்கை மதிப்பில் சுமார் 4 ஆயிரத்து 250 கோடிகள் மெவதருக்குக் கிடைத்தன. மக்கிரேகருக்கு இலங்கை மதிப்பில் சுமார் ஆயிரத்து 700 கோடிகள் கிடைத்தன. பணக்கார விளையாட்டு வீரர்களின் பட்டியலில் மெவதர் தொடர்ந்து பல வருடங்களாக முதலிடத்தில் இருந்து வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**பறந்து வந்தனர் வி.வி.ஐ.பிக்கள்**

பொதுவாக மெவதர் களமிறங்கும் போட்டியென்பது சாதாரண ரசிகர்கள் பார்க்கக்கூடிய போட்டியாக அமைவதில்லை. உலகப்பிரபலமானவர்கள் மட்டுமே இந்தப் போட்டிகளைக் காண்பதற் காக முன்பதிவு செய்துகொண்டு வருவார்கள். நேற்று நடைபெற்ற போட்டியைக் காண்பதற்றாக சுமார் ஆயிரத்து 300 தனிவிமானங்கள் லொஸ்வெகாஸுக்கு வந்துள்ளன. நினைத்துப் பார்க்க முடியாத அளவு பாதுகாப்பு போட்டி நடைபெற்ற அரங்குக்கு ஏற்படுத்தப்பட்டிருந்தது. (ம)



# டோனியின் அனுபவம் மிகப் பெறுமதியானது

## ரவிசாஸ்திரி பெருமிதம்

"டோனியின் அனுபவம் இந்திய அணிக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது" என்று தெரிவித்தார் அந்த அணியின் தலைமைப் பயிற்சியாளர் ரவிசாஸ்திரி.

இந்திய அணிக்கும் இலங்கை அணிக்கும் இடையில் நடைபெற்ற இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தில், இந்திய அணி மிகப்பெரும் பின்னடைவைச் சந்தித்தது. இதன்பின்னர் நிதானித்து விளையாடினார் டோனி. அவர் புவனேஸ்குமாரையும் நிதானிக்க வைத்து இந்திய அணியை வெற்றிபெறச் செய்தார். இதையடுத்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார் ரவி சாஸ்திரி.

"டோனி எந்தளவுக்கு அனுபவமான வீரர். அவரின் பங்களிப்பு இந்திய அணிக்கு எந்தளவு முக்கியமானது என்பதைப் பறைசாற்றும் வகையில் இலங்கைக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் ஆட்டம் அமைந்தது. இதுவே அனுபவத்தின் மகிமை. அது டோனிக்கே உரியது. அதை நாம் சந்தையில் வாங்கவோ அல்லது விற்கவோ முடியாது" என ரவிசாஸ்திரி மேலும் தெரிவித்தார்.

ஆட்டத்தின் பின்பாகக் கருத்துத் தெரிவிக்கையில், இந்திய அணியின் தலைவர் விராட் கோக்லியும் இவ்வாறான ஓர் கருத்தையே வெளிப்படுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# தடுமாறுகிறது ஆஸ்திரேலியா

பங்களாதேஷுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றைய முதலாவது நாளில் தடுமாற்றத்தை வெளிப்படுத்தியுள்ளது ஆஸ்திரேலிய அணி. டாக்காவில் இந்த ஆட்டம் நடைபெறுகிறது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணியின் ஆரம்ப வீரர்களாக தமீம் இக்பால் மற்றும் சவுமியா சர்க்கர் இருவரும் களமிறங்கினர். கம்மின்ஸின் பந்துவீச்சில் 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் சர்க்கர். கையிஸ், ரகுமான் இருவரும் ஓட்டமெதனையும் பெறாமல் கம்மின்ஸின் வேகத்தில் அள்ளுண்டு போயினர். தமீம் இக்பால், சகிப் அல் ஹசன் இருவரும் பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்கள். இருவரும் அரைச்சதம் கடந்தனர். 71 ஓட்டங்களுடன் இக்பால் ஆட்டமிழந்தார். சகிப் அல் ஹசன் 84 ஓட்டங்களுடன் பவிலியனுக்குத் திரும்பினார். பின்வரிசை பெரிதாகப் பிரகாசிக்கவில்லை. முடிவில் 260 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது பங்களாதேஷ். பந்துவீச்சில் கம்மின்ஸ், லையன், அகர் மூவரும் தலா 3 இலக்குகளை வீழ்த்தினர்.

9 பந்துப்பரிமாற்றங்கள் மீதமிருந்த நிலையில் பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி 18 ஓட்டங்களுக்கு மூன்று இலக்குகளைப் பறிகொடுத்துத் தடுமாற்றம் கண்டுள்ளது. வோர்ணர், கவாயா, லையன் மூவரும் ஆட்டமிழந்துள்ளனர். (ம)





PHYSICS Personal Class

A/L 2018 ஓட்ட மின்னியல்
ஆரம்பம் - 30.08.2017
புதன் 6.30 Pm
(திங்கள், புதன், வெள்ளி 6.30 - 7.30 pm)
வினாவிடை வகுப்பு
ஆரம்பம் - 31.08.2017 வியாழன் 6.30pm
செவ்வாய், வியாழன் 6.30 - 7.30 pm

A/L 2019 அலைகளும் அதிர்வுகளும்
ஆரம்பம் - 31.08.2017 வியாழன்
5.30 - 6.30 pm
செவ்வாய், வியாழன் 5.30 - 6.30 pm
பொறியியல் வகுப்பு நடைபெறுகின்றது.
(திங்கள், புதன், வெள்ளி 5.30 -6.30 pm)

விரும்பிய அலகுகளை Personal Class, ஆகவும் Group Class ஆகவும் எடுக்கலாம்.

ஆசிரியர் - திரு.ம.ஸ்பெல்மன் Bsc, PGDE
இடம் - 10/10, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்,
பெரிய கோயில் அருகில் T.P :077 611 6724

புதிய பிரிவுகள் ஆரம்பம்

தொழிற்துறைக் கணக்காளர் கற்கைநெறிகள்
aat [Sri Lanka] [AA1, AA2, AA3]
Qualification :- G.C.E. O/L 6 Passes
Medium - Tamil & English

வங்கியியல் கற்கைநெறிகள்
Banking Courses
IABF & DABF
(Tamil & English Medium)
Qualification :- G.C.E. O/L 6 Passes with 5 credits including Maths.

கணக்காளர் கற்கைநெறிகள்
Chartered Accounting Courses
Excutive Level & Business Level
(Tamil & English Medium)
Qualification :- G.C.E. A/L 3 Passes
Note :- 2017 பரீட்சை எடுத்த மாணவர்களும் பதிவு செய்யலாம்

Students Awaiting [A/L] Results
Enrich your Proficiency in English
Certificate Course in English
15 Batches have successfully Completed the course
Register your names before 31.08.2017

Pharmacist [External]
G.C.E.(O/L) ordinary Pass in English Language
G.C.E.(A/L) Ordinary Pass in three science subjects including chemistry.

Further Details : Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road, Jaffna
021 222 3382, 021 222 9149

# கிண்ணத்தைக் கைப்பற்றுவதை உறுதிசெய்தது இந்திய அணி





இலங்கைக்கு எதிரான ஒருநாள் தொடரில் நேற்று நடைபெற்ற மூன்றாவது ஆட்டத்திலும் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றுவதை உறுதிசெய்தது இந்திய அணி.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கைஅணிமுதலில்துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்ப வீரர்களாக டிக்வெல்ல மற்றும் சந்திமல் இருவரும் களமிறங்கினர். முதல் பந்தை பவுண்டரிக்கு விளாசினார் டிக்வெல்ல. ஆனால் அவர் 13 ஓட்டங்களுடன் அடங்கிப்போனார். குசல் மென்டிஸ் வெறும் ஒரு ஓட்டத்துடன் பும்ராவின் வேகத்தில் பவிலியனுக்குத் திரும்பினார். தற்போது களத்தில் சந்திமல், திரிமன்னே. இருவரும் ஒருநாள் ஆட்டங்களில் இடம்கிடைக்காது தவிப்பவர்கள். தரங்க, குணதிலக காயமடைந்ததால் இந்த ஆட்டத்தில் களமிறங்கக்கூடிய வாய்ப்பு அவர்களுக்குக் கிட்டியது. வாய்ப்பைக் கச்சிதமாகப் பயன்படுத்தி மாற்றத்தை ஏற்படுத்த எத்தனித்தனர். ஓரளவு வெற்றியும் கண்டனர். இணைப்பாட்டமாக 71 ஓட்டங்கள் பகிரப்பட்ட பின்னர் 36 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் சந்திமல். அரைச்சதம் கடந்தார் திரிமன்னே. அவர் 80 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். முடிவில் 9 இலக்குகளை இழந்து 217 ஓட்டங்களைப் பெற்றது இலங்கை.

பந்துவீச்சில் பும்ரா 5 இலக்குகளை வீழ்த்தினார். பாண்டியா, அக்சர் பட்டேல், யாதவ் மூவரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணி, வழக்கத்துக்கு மாறாக தடுமாற்றம் கண்டது. முதலில் ஆட்டமிழந்தார் தவான். அதுவும் வழக்கத்துக்கு மாறானதே. கோக்லி 3 ஓட்டங்களுடனும், லோகேஸ்ராகுல் 17 ஓட்டங்களுடனும் இருக்கைக்குத் திரும்பினர். கேதர் யாதவால் ஒரு ஓட்டத்தையேனும் பெறமுடியவில்லை. வந்தார் டோனி. இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தில் தோல்வியின் பிடியில் இருந்த இந்திய அணியை மீட்டெடுத்து வெற்றிபெற வைத்ததைப் போல், நேற்றைய ஆட்டத்திலும் ரோகித் சர்மாவுடன் இணைந்து அணியைத் தூக்கி நிறுத்தினார். ரோகித், டோனி நிலைக்க இலங்கையின் வெற்றிக்கனவு படிப்படியாகத் தகர்க்கப்பட்டது. சதம் கடந்தார் ரோகித். அரைச்சதம் கடந்தார் டோனி.

29 பந்துகள் மீதமிருக்க நான்கு இலக்குகளை மட்டும் இழந்து 6 இலக்குகளால் பதற்றம் இல்லாத வெற்றிபெற்றது இந்திய அணி. (ம)

# இலங்கை வீரர்கள் மீது போத்தல்களால் வீச்சு

## தோல்வியின் விரக்தியில் ரசிகர்கள் அட்டூழியம்

இலங்கை அணியின் வீரர்கள் மீது இலங்கை அணியின் ரசிகர்கள் என்று அடையாளம் காணப்பட்டவர்களால் போத்தல்கள் வீசப்பட்ட சம்பவம் நேற்றுப் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இலங்கை இந்திய அணிகளுக்கு இடையிலான மூன்றாவது ஒருநாள் ஆட்டம் பல்லேகல மைதானத்தில் நேற்று நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 217 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணி டோனி, ரோகித் இருவரினதும் சிறப்பான ஆட்டத்தால் தலைநிமிர்ந்தது. அந்த அணி 44 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 210 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இந்திய அணியின் வெற்றி உறுதியாகிவிட்ட அந்தத் தருணத்தில் ரசிகர்கள் சிலர் மைதானத்துக்குள் போத்தல்களை வீசி அடாவடித் தனத்தில் ஈடுபட்டனர். சுமார் 200 போத்தல்கள் வீசப்பட்டன என்று அறியவருகிறது. அவ்வாறு வீசியவர்கள் இலங்கை அணியின் ரசிகர்கள் என்று தெரியவருகிறது.

இந்த அசம்பாவிதத்தால் சுமார் 40 நிமிடங்கள் வரை ஆட்டம் தடைப்பட்டது. வீரர்கள் மைதானத்தின் மத்திய பகுதிக்கு அழைக்கப்பட்டு அவர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டது. இந்தச் செயலுக்கு இந்திய அணியின் தரப்பில் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம)

NEW SCIENCE WORLD
VICTORY MUST
தொடர்புகளுக்கு : 021 221 6690
(7.00 am - 4.00 pm)

G.C.E(A/L) 2018
Day Classes
திங்கள் – வெள்ளி

பௌதிகவியல் → திரு. R. குகன், திரு. R. குமரன்
இரசாயனவியல் → திரு. டயஸ், திரு. K.T. சிவகுமார்
உயிரியல் → திரு. S. பொன்திவாகரன், திரு. T. கஜேந்திரன்
இணை.கணிதம் → திரு. S.S. செந்தில்நாஜ், திரு. T. சஞ்ஜீவன்

- ஆண்,பெண் மாணவர்களுக்கான தனித்தனி canteen, Bicycle park வசதிகள்.
- மாணவர்களுக்கான தங்குமிட வசதிகள், உணவு வசதிகள் செய்து தரப்படும்.
- வாராந்த பரீட்சைகள் நடாத்தப்பட்டு புள்ளிகள் பெற்றோரும் அறியக்கூடிய வகையில் வெளிவிடப்படும்.
- நிறுவன ஒழுக்க விதிகளை மீறும் மாணவர்கள், பெற்றோர்களுக்கு அறியப்படுத்தப்பட்டு இடைநிறுத்தப்படுவர்.

ஆரம்பம் 05.09.2017
செவ்வாய் காலை 07.00 மணி

அமைவிடம்: நாவலர் வீதி, பிறவுண் வீதி சந்தி, யாழ்ப்பாணம்.
பிறவுண் வீதி சந்தியிலிருந்து 75 M இடது புறமாக அமைதியான சூழலில்.

தொழில்நுட்ப கல்லூரி, தனியார்கல்வி நிறுவனங்கள் மற்றும் உயர் தொழில் நுட்ப கல்லூரிகளில் HND கற்கை நெறிகளை பூர்த்தி செய்த மாணவர்களுக்கான

BSc IT
(Bachelor of Scince in Information Technology)

BBA
(Bachelor of Business Administration)

இறுதியாண்டு கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

021 222 8060
071 777 5666



IIS City Campus
200, சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம்
www.iis.edu.lk | info@iis.edu.lk

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE

இளைஞர் யுவதிகள், O/L எழுதியோர், வீட்டுப்பெண்கள், தொழில்புரிவோர், வெளிநாடு செல்வோர் உயர்கல்வி மாணவர்கள் இணைய முடியும்.

மூன்று மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்!!

3 மாத சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 0?.09.2017

1. காலை 08.00-10.00
2. காலை 10.00-12.00
3. பி.ப 01.00-03.00
4. மாலை 03.00-05.00

வாரநாள் வகுப்புகள் (திங்கள், புதன்) 04.09.2017
1.காலை 08-10  2.காலை 10-12

பயிற்சிநெறிமுடிவில் பெறுமதியான Diploma சான்றிதழ்

SAAMSON
Experts in English Training
403,வெலிங்டன் சந்தி யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.08.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.